பக்கங்கள்:31 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 12 ஞாயிற்றுக்கிழமை 28.11.2021 கதிர் 23

## இது ரகசியம் அல்ல!

'தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளை' தமிழினம் நேற்று நினைவு கூர்ந்த முறைமை பெருமைக்குரியது.

கோட்டாபயவின் மோசமான அடக்குமுறைக்கு மத்தியிலும் மக்களும் அரசியல் தலைவர்களும் இம்முறை மாவீரர்

பக்கம்02

## மாவீரர்களுக்குச் சுடர் ஏற்றி யாழ். பல்கலையில் அஞ்சலி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மாணவர்களால்மாவீரர் நாளையொட்டி மரபு ரீதியாக மாலை 6.05 மணிக்கு ஏற்றப்படுகின்ற ஈகைச் சுடர் நேற்றும் யாழ்.பல்கலைக் கழகத்தில் ஏற்றப்பட்டது.

மாவீரர் நினைவுத் தூபி 23

### இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வாளர்களின்

# கெடுபிடிகளைத் தாண்டி மாவீரர்களுக்கு அஞ்சலி!





தமிழீழத் தனியரசு அமைப்பதற்காக - தனி நாடுஉருவாகுவதற்காக - சமராடிவித்தாகிப்போன மாவீரர்களை - காவிய நாயகர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் நேற்று தாயக 23

# மாவீரர்களின் தியாகங்கள் என்றென்றைக்கும் சுடரும்!

## நாடாளுமன்றில் சிறிதரன் இடித்துரைப்பு



இன விடுதலை என்னும் சத்திய இலட்சியத்துக்காக, தமிழ்ச் சமூகத்தின் விடிவுக்காக, அடுத்த சந்ததியின் அமைதியான வாழ்வுக்காக வாழ்வியலின் அத்தனை சுகபோகங்களையும் துறந்து மனித சுதந்திர உணர்வின் பிரதிபலிப்பாய் தம்மையே தற்கொடையாக்கி 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை இந்த மண்ணிலே புதைத்துவிட்டு விடுதலையை நோக்கிய ஆழ் மன ஏக்கங்களோடு தவித்திருக்கும் எமது மக்களின் வலி சுமந்த மனப்பரப்பின் முழுமைக்கும் மாவீரர்களின் தியாகங்கள் என்றென்றைக்கும் சுடர்ந்த வண்ணம்தான் இருக்கும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார். 2

## ஒரே நாளில் 20 பேர் காவு

இலங்கையில் மேலும் 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. 23

## 718 பேருக்கு கொரோனா நேற்று உறுதி

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 718 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில்கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டவர்களின் மொத்த 23

## சாட்டியிலும் அஞ்சலி





(ந.லோகதயாளன்)

சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்திற்குள் உறவுகளை அனுமதிக்காது படையினரால் தடைகள் ஏற்படுத்தப்பட்டபோதும் உறவுகள் விளக்கேற்றி 23

## சீருடையினரின் அடாவடிக்கு மத்தியிலும் திருவிலில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி





(கலையமுதன்,ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.28

வல்வெட்டித்துறை தீருவில் திடலில் நேற்றுமாலை 6.05 மணியளவில் பாதுகாப்புத் தரப்பினரின் நெருக்கடிக்கு மத்தியிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் திட்டமிட்டபடி இடம்பெற்றன.

பருத்தித்துறை 23

## மாவீரர்களை நினைவேந்திய அனைவரும் கைதாகுவார்கள்

### மிரட்டுகின்றது கோட்டா அரசு

தமிழர்கள் கூறும் 'மாவீரர்கள்' பயங்கரவாதிகள். நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவர்களை நினைவு கூரவே முடியாது. எனவே, வடக்கு, கிழக்கில் நேற்று பயங்கரவாதிகளை நினைவேந்திய அனைவரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கூண்டோடு கைதுசெய்யப்படுவார்கள்.

- இவ்வாறு கோட்டாபய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் ஆகியோரின் பல்வேறு கெடு 23

## வலி.வடக்கு தவிசாளரிடம் விசாரணை!

யாழ்., வலிகாமம் வடக்கு தவிசாளர் சோ.சுகிர்தரனிடம் இராணுவத்தினர் நேற்றிரவு விசாரணை நடத்தியுள்ளனர். 23

## 6 நாடுகளின் பயணிகளுக்கு இலங்கை வருவதற்குத் தடை

தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள புதிய கொரோனா வைரஸ் திரிவு காரணமாக, சில நாடுகளிலிருந்துவரும் பயணிகளுக்குத் தடை விதிக்க சுகாதார அமைச்சு 23

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துயிலும் இல்லங்களில் விளக்கேற்றி அஞ்சலித்துள்ளனர்.

சீருடையினர் ஆயுதங்கள் சகிதம் அடக்குமுறை அட்டகாசம், அடாவடித்தனத்துடன் முறுகி நிற்கையில் அவர்கள் முன்னிலையிலேயே ஆங்காங்கே சில நூறு மக்களாவது துணிச்சலுடன் ஒன்று கூடி விளக்கேற்றி நம் வீரமறவர்கள் பற்றிய தங்களின் உணர்வெழுச்சியைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியமை தமிழினம் அடங்கிவிடவில்லை என்ற உறுதியைத் தந்து நிற்கும் பெருமைக்குரிய செயல்.

மக்களின் நினைவேந்தும் உரிமையை மறுக்க முடியாது என்ற துணிச்சலான – நீதியான – நியாயமான – வெளிப்பாடையான – தீர்மானத்தை எடுத்து, உறுதியான உத்தரவாக அதனை வழங்கிய நீதிவான்கள் இதற்காக முதலில் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இனியாவது – இந்த நீதிவான்களைப் பார்த்தாவது – ஏனையயோரும் திருந்துவாராயின் – நீதியாக நடப்பாராயின் – அவர்கள், அணியும் நீதி தேவதையின் கறுப்பு ‘கவுணுக்கு’ அது நியாயமானதாகவும் மதிப்புத் தருவதாகவும் அமையும்.

ஆனால், நமது நாட்டில் மனித உரிமை மீறல்களின் ஆரம்பப் புள்ளியே – உற்பத்தி ஸ்தானமே – பல சமயங்களில் நீதிமன்ற மையங்கள்தான் என்பது மறுக்க முடியாத உண்மை.

சீருடை தரித்த படையினர், அதிகாரிகளுக்கு அப்பால், நீதித்துறையில் நீதி தேவையின் கறுப்பு அங்கியை அணிந்து கொண்டு மிகவும் மோசமான மனித உரிமைகளுக்குத் துணைபோகும் “மோசமான” நீதியாளர்களை நாடும், மக்களும், சர்வதேசமும் அடையாளம் கண்டு உரிய கறுப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டிய காலம் வந்து விட்டது என்று நினைக்கிறேன்.

சர்வதேச மட்டத்தில் நமது நாட்டின் பிரதம நீதியரசராக இருந்து ஒருவரே இராஜதந்திர மட்டங்களினால் அப்படி அடையாளம் காணப்பட்டு ஒதுக்கப்படுகின்றார் என்பதை நீதியை நீதியாக நிலை நாட்ட மறுத்து, தம்பாட்டில் மேலிட அழுத்தங்களுக்குத் துணைபோகும் கறுப்பு அங்கி ‘கனவான்கள்’ இனியாவது கவனத்தில் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகள் இங்கு இருந்த போது, துயிலும் இல்லங்கள் பக்கமே வராத – விடுதலைப் போராட்டம் பற்றியே சிந்திக்காத – சிலர், இப்போது அரசியல்வாதிகளாக மாறியமையால் நடிப்பதற்கு துயிலும் இல்லங்கள் தேடி ஓடும் நிலைமை வந்தமையும் என் மனதில் சிரிப்பைத் தந்தது.

எது, எப்படியோ, ‘சாவரும் போதிலும், தணலிடை வேகினும், சந்ததி தூங்காது’ – என்ற பாடல் வரிகளை மெய்ப்பித்து நிற்கும் என் சந்ததி குறித்து நான் பெருமை கொள்கிறேன். நினைவேந்தலுக்கான அவர்களின் உயிர்த்துடிப்பைப் புரிந்து கொள்ளுகிறோம். Hats off to them...

★ ★ ★

காஸ் சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் நான் எதிர்பார்த்தமையை விட மோசமான அதிர்வலைகளை – பதற்றத்தை – தென்னிலங்கையில் ஏற்படுத்தியருக்கின்றன.

காஸ் சிலிண்டர் விவகாரம் தேசிய பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தல் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா எச்சரித்திருக்கின்றார்.

அண்மைய தினங்களில் வெலிகமவில் இரண்டு உணவு விடுதிகளிலும், இரத்தினபுரியில் ஓர் உணவு விடுதியிலும், கொழும்பு 07, குதிரைச் சவாரித் திடலை ஒட்டிய உணவு விடுதியிலும் ஏற்பட்ட வெடிப்புகளுக்கு காஸ் சிலிண்டர் விவகாரமே காரணம் என்று கூறப்படுகின்றது.

வெலிகந்தவில் வீடு ஒன்றில் ஏற்பட்ட காஸ் சிலிண்டர் வெடிப்பில் படுகாயமடைந்த 19 வயது யுவதி பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொட்டாவவில் ஒரு வீட்டில் வீட்டுக்காரர்கள் நித்திரையில் இருந்த போது காஸ் சிலிண்டர் வெடித்திருக்கின்றது. தெய்வாதீனமாக யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும் வீட்டுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்த வெடிப்புகளை அடுத்து, தெற்கில் பல வீடுகளிலும் புதிய உத்தி பின் பற்றப்படுகின்றது. சமையலறையில் இருந்து – காஸ் அடுப்பிலிருந்து – சற்றுத் தொலைவில் – ஆள்கள் இல்லாத ஒதுக்குப் புறப் பகுதியில் சிலிண்டரை வைத்து, சுவர்கள் ஊடாகத் துளையிட்டு காஸ் இணைப்புக் குழாய்களை சமையலறைக்குள் எடுத்து, அங்குள்ள ஸ்டவ்வுடன் அல்லது குக்கருடன் இணைத்துப் பயன்படுத்தும் முறைமைக்கு பலர் மாறியிருக்கின்றனர். ஒதுக்குப் புறமாக சிலிண்டர் வெடித்தாலும் ஆள்களுக்குப் பாதிப்பு ஏற்படாத என்ற நம்பிக்கையில். ஆனால் காஸ் அடுப்புக்கும் சிலிண்டருக்கும் இடையில் நீண்ட குழாய்களை உரிய பாதுகாப்பின்றி பயன்படுத்துவதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

நான் நேற்று இப்பத்தியில் கூறியபடி விறகு மூலம் சமையல் நடத்தும் வாய்ப்புள்ள வீடுகளில் சிலிண்டர்களை ஒதுக்கி வைத்து விட்டு பழைய முறைக்கே பலரும் மாறுகின்றார்கள்.

கொழும்பில் வசதியுள்ள பலரும் மின்சார அடுப்புக்கும் மாற முற்படுகின்றனர்.

காஸ் சிலிண்டர் விடயங்களில் ‘றிஸ்க்’ எடுப்பது ஆபத்தானது என்பதுதான் பலரதும் எண்ணம்.

அந்தக் காலத்தில் குழந்தையை பிரசவிக்கும் தாயைப் பார்த்து ‘பெற்றாயோ? பிழைத்தாயோ?’ – என்று கேட்பது வழமை. ஏன் என்றால் பிரசவத் தாயைக் காப்பாற்றும் மருத்துவ வசதி அப்போது மேம்பட்டிருக்கவில்லை. இப்போது நிலைமை வேறு.

ஆனால், இப்போது தினசரி சமையல் முடிந்ததும் மனைவியிடம் ‘சமைத்தாயோ? பிழைத்தாயோ...?’ – என்று கேட்கும் நிலைமை.

– மின்னல் –

---

## மாவீரர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவீரர்களை நினைவுகூர்ந்து நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கார்த்திகை 27 தமிழர்களின் மாவீரர் நாள். இந்தப் பூமிப்பந்தின் தேசமெங்கும் பரந்து வாழும் உலகத் தமிழர்கள் அத்தனை பேரினதும் ஆழ்மன உணர்வுகளோடு இரண்டறக் கலந்துபோன ஈகைத் திருநாளே இன்றைய மாவீரர் நாளாகும். மக்களுக்கான போராட்டம் ஒன்றின் தோற்றுவாய்க்கு மனிதாபிமான மனோநிலையும் மனித நிலை மாண்புகளுமே அடிப்படையாக அமைய முடியும். அத்தகையதோர் மக்கள் போராட்டத்துக்கு சக மனிதர்களையும் தன் சார்ந்த சமூகத்தையும் நேசிக்கத்தக்க அன்பின்பாலான மனநிலை மட்டுமே மூலாதாரமாக முடியும்.

அந்தவகையில் அனைத்துலகும் பிரமித்து நிற்கத்தக்க பிரம்மாண்டத்தோடு தமிழின விடுதலை ஒன்றையே மூச்சாகவும் வீச்சாகவும் கொண்டு 30 ஆண்டு காலமாக நடைபெற்று முடிந்த மக்கள் போராட்டத்துக்காக தம்மையே தாரை வார்த்த எமது தேசத்து வீரர்களை பயங்கரவாதிகள் என்று விளித்துப் பறைசாற்றுவது எத்தனை அபத்தமானது என்பதனை நான் இந்த இடத்தில் கேட்க விரும்புகின்றேன்.

அதேபோல் நீண்ட நெடிய நெருப்பாறாய் நிகழ்ந்தேறிய போரின் விளைவாக பொருளாதார ரீதியாகவும் வேலைவாய்ப்பு, கல்வி, கலை, கலாசார, மொழி, இன அடையாள ரீதியாகவும் கடுமையாக பாதிக்கப்பட்டு உறவுகளின் உயிரிழப்பு, அவயவ இழப்பு, மாற்றுத்திறனாளிகளின் உருவாக்கம், ஆயிரக்கணக்கான விதவைகளின் தோற்றம், அன்னை, தந்தையை இழந்த நிலையில் அநாதரவாக்கப்பட்ட சிறுவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், இன்னும் விடுவிக்கப்படாத நிலங்கள், வன்பறிப்பு செய்யப்படும் பூர்வீக நிலங்கள் என வலி தாங்கிய இனமாக வாழத்தலைப்பட்டிருக்கும் எமது மக்களின் மனக்காயங்களுக்கும் அவர்களின் ஆற்றாமைகளுக்கும் ஆறுதல் அளிப்பதாய், அமைதி தருவதாய், நம்பிக்கை ஊட்டுவதாய் அமையக்கூடியது இறந்தவர்களை நினைவுகூரும் உரிமை ஒன்றேயாகும்

அந்த அடிப்படை உரிமையைக்கூட வலிந்து மறுதலிக்கும் அரசின் செயற்பாடு இந்த மண்ணில் எமது மக்களின் இருப்பை இன்னும் இன்னும் கேள்விக்குட்படுத்துவதாகவே அமைகின்றது. இழப்பின் வலி சுமந்து நிற்கும் ஓர் இனத்தின் ஒவ்வொரு குடும்பத்தவர்களினதும் சமய, சமூக, பண்பாட்டு விழுமியங்களைத் தழுவிய நினைவுகூரல் எனும் அடிப்படை உரிமைக்கான பிரார்த்தனைகளையும் சமய சடங்குகளையும் மேற்கொள்கின்றபோது அவை உள்ளூர் அதிகாரத்துவம் உள்ள அதிகாரிகளால் பயங்கரவாத விடயங்களோடு ஒத்துப்பார்க்கப்படுதல் அல்லது போராட்டம் ஒன்றை மீள உருவாக்கம் செய்வதற்கான முனைப்பாக காண்பிக்கப்படுத்தல், அத்தகைய பிரார்த்தனைகளில் ஈடுபடுபவர்களைக் கோரமான உணர்வுகளைக் கொண்டவர்களாகச் சித்திரித்து அவர்களைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்தல் என்பன தவறான அர்த்தப்படுத்தல்களாகும்.

எமது மாவீரர்களின் உயிர்த் தியாகங்களையும் மாவீரர் தினத்தின் புனிதத் தன்மையயையும் வலிந்து மலினப்படுத்தும் செயலாகவே இது அமைகின்றது. இன விடுதலை என்னும் சத்திய இலட்சியத்துக்காக, தமிழ்ச் சமூகத்தின் விடிவுக்காக, அடுத்த சந்ததியின் அமைதியான வாழ்வுக்காக வாழ்வியலின் அத்தனை சுகபோகங்களையும் துறந்து மனித சுதந்திர உணர்வின் பிரதிபலிப்பாய் தம்மையே தற்கொடையாக்கி 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை இந்த மண்ணிலே புதைத்துவிட்டு விடுதலையை நோக்கிய ஆழ் மன ஏக்கங்களோடு தவித்திருக்கும் எமது மக்களின் வலி சுமந்த மனப்பரப்பின் முழுமைக்கும் மாவீரர்களின் தியாகங்கள் என்றென்றைக்கும் சுடர்ந்த வண்ணம்தான் இருக்கும்.

கையறு நிலையில் இருக்கும் எமது மக்கள் அரூபத் தன்மை கொண்ட ஆபத்பாந்தவர்களாக ஆழ் மனதில் வைத்து பூஜிக்கும் மாவீரர்களின் நினைவுகளை நீதிமன்றத் தடை உத்தரவுகளாலும் நீண்டிருக்கும் ஆயுத முனைகளினாலும் நீர்த்துப்போகச் செய்ய முடியாது என்பதனை நீங்கள் ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பீர்கள்.

தமது சொந்த மண்ணிலேயே அடிப்படை உரிமை இழந்த நசுக்கப்பட்ட இனமாக இருந்துகொண்டு தனது இருப்பை தக்க வைப்பதற்காக எல்லா வழிகளிலும் போராடத் தலைப்பட்டுள்ள தமிழினத்துக்கு இத்தகையதோர் இழிநிலை வந்து விடக்கூடாது என்ற வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு விடுதலை என்பது ஓர் அக்கினிப் பிரவேசம். நெருப்பு நதிகளை நீந்திக்கடக்கும் நீண்ட பயணம். அது தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம்.

இந்த நாட்டிலே ஜே.வி.பிக்கும் தங்களுடைய இழந்துபோன வீரர்களை அவர்கள் நினைவுகூருவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் யாருக்கும் இதில் தடையில்லை. இந்தச் சபையில் எதிர்க்கட்சிகள் கூட இறந்து போனவர்களை நினைப்பதற்கான தடையை விதிக்க வேண்டாமெனனக் கூறின. ஏன் இந்த நாட்டில் இருந்த துட்டகைமுனு மன்னன் கூட எல்லாள மன்னனுடன் போரிட்டு அந்தப் போரில் தான் வென்ற பின்னர் எல்லாளனுக்குச் சமாதி அமைத்து வணக்கம் செலுத்துங்கள் என்று சொன்ன சிங்கள வீர வரலாற்றைக்கொண்ட நாடுதான் இந்த நாடு. போர் வீரர்களை மதிக்கின்ற நாடு. ஆகவே, ஒரு போரில் ஒருவர் இறந்திருந்தால் அவரை மதிக்கின்ற பக்குவம் உங்களுக்கு வர வேண்டும். அந்தப் பக்குவம் இருக்கின்ற நாடுதான் நியாயமான கருத்துக்களை கருத்துக்களால் வெல்கின்ற அடுத்த இனத்தின் கருத்துக்களை ஏற்றுக்கொள்கின்ற பக்குவமுள்ள நாடாக இருக்க முடியும்.

இது பயங்கரவாதம் அல்ல. நான் உண்மையை உங்களுக்குச் சொல்கின்றேன். இந்த நாட்டில் நடக்காத ஒன்றை நான் சொல்லவில்லை. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் துட்டகைமுனு மன்னன் செய்ததை ஏன் உங்களால் செய்ய முடியாது? – என்று கேள்வி எழுப்பினார்.

---

## மரண அறிவித்தல்

### அமரர் கார்த்திகேசு வேலும்மயிலும்
(ஓய்வுநிலைஅதிபர்)



சிவன்கோவிலடி வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் கார்த்திகேசு வேலும்மயிலும் (ஓய்வுநிலைஅதிபர்) 25/11/2021வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கார்த்திகேசு அன்னப்பிள்ளை தம்பதியினரின் மகனும், முருகுப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், மகாபார்வதி அம்மாவின் பாசமிகு கணவரும் இரவீந்திரன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர், இலங்கை வங்கி), பாலேந்திரன் (ஓய்வுநிலை பொலிஸ் இன்ஸ்பெக்ரர்), கலாவதி, கலாராணி, குகேந்திரன் (முன் நாள் நாடாளுமன்ற உறுப்பினர் யாழ்.மாவட்டம்), சிவேந்திரன் (கனடா), குணேந்திரன் (லண்டன்), கலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28/11/2021ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

**தகவல்:-குடும்பத்தினர் (0771750128)**

---

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
**16 Days of Activism against Gender Based Violence**
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

JSAC

“ஆணுக்கு நிகராய் இங்கு பெண்கள் உழைக்கையில் கொடுப்பனவுகளில் மட்டும் ஏன் இந்த பாரபட்சம்? சம கூலி பேணுவோம்! சமத்துவம் காப்போம்.!”

16 2021

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

# வவுனியாவில் தொடர்ந்தும் வான் பாயும் குளங்கள் மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை

மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழான குளங்கள் தொடர்ந்தும் வான் பாய்ந்து வருவதால் மக்கள் அவதானமாக இருக்குமாறு மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் கே.இமாசலன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளது.

மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின்கீழான பாவற்குளம், முகத்தான்குளம், மருதமடுக்குளம், இராசேந்திரங்குளம் என்பன தொடர்ந்தும் வான்பாய்வதுடன், பூவரசன்குளம் - செட்டிகுளம் வீதியில் உள்ள கல்லாறு அணைக்கட்டும் வான் பாய்ந்து வருகின்றது.

இதனால் மக்கள் தொடர்ந்தும் மழை பெய்யும் பட்சத்தில் அவதானமாக இருக்கவும். மேலும், ஈரப்பெரிய குளத்தின் நீர்மட்டமும் உயர்வடைந்துள்ளது. தொடர்ந்தும் மழை பெய்தால் அக்குளமும் வான் பாயும் நிலை ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வவுனியாவில் மழை காரணமாக ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், 63 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் பாதிப்படைந்துள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கனமழை காரணமாக இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதுடன், தாழ்நிலப் பகுதிகளில் உள்ள மக்களும் வெள்ள நீர் காரணமாகப் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இராசேந்திரங்குளம் பகுதியில் இடி மின்னல் தாக்கம் காரணமாக ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், வவுனியா பிரதேச செயலக பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் பாதிப்படைந்துள்ளனர். 4 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் 31 குடும்பங்களைச் சேர்ந்த 103 பேர் பாதிப்படைந்துள்ளமையுடன், 2 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரும், செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 76 பேரும் பாதிப்படைந்துள்ளனர்.

இதன்படி, கடந்த சில நாள்களாக பெய்து வரும் மழை காரணமாக வவுனியாவில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், 6 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 63 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேரும் பாதிப்படைந்துள்ளனர் என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.





**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 25.11.1988 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - மிருகசீரிடம் 5
கி.பா - 53 செவ் 2 இல்
தகைமை - E.Engineer தொழில் -Company
எதிர்பார்ப்பு - A/L இற்கு மேல் படித்த அரசசேவை மணமகள்

பிறந்த திகதி -16.10.1987 மதம் - இந்து
ஜாதி - P ஆண் நட்சத்திரம் - பூசம்
கி.பா - 13 செவ் / சூரி 12 இல்
தகைமை - BA தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 11.09.1994 மதம் - இந்து
ஜாதி - P ஆண் நட்சத்திரம் - அனுசம் 2
கி.பா - 24 செவ் -6 இல்
தகைமை - GCE A/L தொழில் - USA PR
எதிர்பார்ப்பு - GCE A/L மேல் பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 12.01.1981 மதம் - இந்து
ஜாதி - P பகுதி ஆண் நட்சத்திரம் - பூசம்
கி.பா - 61 செவ் /சூரி 7 இல்
தகைமை - BA தொழில் - D.O அரசசேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகள்

பிறந்த திகதி - 04.09.1987 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தராடம்
கி.பா - 19 செவ் / சூரி 9 இல்
தகைமை - Business management
தொழில் -.D.O அரசசேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள்

பிறந்த திகதி - 20.09.1984 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூசம்
கி.பா - 68 செவ் - 8 இல்
தகைமை - Soft Ware Engineer
தொழில் - Company UK
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை

பிறந்த திகதி - 03.01.1987 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அவிட்டம் 4
கி.பா - 11 செவ் - 9 இல்
தகைமை - G.C.E A/L தொழில் - .France PR
எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள் இலங்கை வரலாம்

பிறந்த திகதி -28.06.1991 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 51 செவ் - 5இல்
தகைமை - CIMA Complete தொழில் - Company Owner
எதிர்பார்ப்பு - படித்த மணமகள். காரைநகர் முன்னுரிமை

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 25.07.1988 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 43 செவ் 4 இல்
தகைமை - Cima தொழில் - Auditor Company
எதிர்பார்ப்பு - Eng., Doctor அரச உயர்பதவி மணமகன். காரைநகர் முன்னுரிமை

பிறந்த திகதி - 11.07.1990 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 23 செவ் 9 இல்
தகைமை - GCE A/L தொழில் -
எதிர்பார்ப்பு - Swiss, France PR மணமகன்

பிறந்த திகதி - 30.08.1993 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருவோணம்
கி.பா -39 செவ் - 11 இல்
தகைமை - பட்டதாரி தொழில் -Canada PR
எதிர்பார்ப்பு - கனடா அல்லது இலங்கை மணமகன்

பிறந்த திகதி - 19.04.1987 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - மூலம் 5'6"
கி.பா - 8 செவ்- 12 இல்
தகைமை - dental doctor தொழில் - dental doctor Norway
எதிர்பார்ப்பு - Norway, ஐரோப்பா மணமகன்


பிறந்த திகதி - 27.10.1993 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 53 செவ் /சூரி - 3இல்
தகைமை -BSc, Cima தொழில் - Company
எதிர்பார்ப்பு - பட்டதாரி சிங்கப்பூர், அவுஸ்ரேலியா, UK, Canada மணமகன்

பிறந்த திகதி - 19.10.1991 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சதயம்
கி.பா - 11 செவ் /சூரி. 9இல்
தகைமை - BSc, MSc UK தொழில் - Student UK
எதிர்பார்ப்பு - UK பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 28.02.1992 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூராடம்
கி.பா - 57 செவ் 8 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor Colombo
எதிர்பார்ப்பு - Doctor, Eng. மணமகன்

பிறந்த திகதி - 16.04.1991 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 22 செவ் - 2 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Eng மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzelan- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000



Personal English Classes
K.Ganesh (BA.Pera)
தனியாக அவரவர் தரத்தில் இருந்து மேலே படித்தல்
வகுப்பில் பேசுதல், தெளிவான கற்பித்தல்
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி.








**மணமகன் விபரம்**

**பிறந்த திகதி** : 1983.10.29
**மதம்** : இந்து
**ஜாதி**: பள்ளர்
**நட்சத்திரம்**: பூசம்
**செவ்** : இல்லை
**தகைமை**: B.E.D
**தொழில்**: ஆசிரியர்
**எதிர்பார்ப்பு**: அழகிய குணமான பெண்

**பிறந்த திகதி** : 1990.10.21
**மதம்** : இந்து
**ஜாதி**: வேளாளர்
**நட்சத்திரம்**: அனுஷம் 3ம் பாதம்
**செவ்** : 4ல்
**தகைமை**: A/L
**தொழில்**: Restaurant France
**எதிர்பார்ப்பு**: யாழ்ப்பாணத்தில் அழகிய பெண்

**பிறந்த திகதி** : 1985.11.22
**மதம்** : இந்து
**ஜாதி**: கோவியர்
**நட்சத்திரம்**: உத்திரட்டாதி 1ஆம் பாதம்
**செவ்** : இல்லை
**தகைமை**: AAT,CIMA UK
**தொழில்** : கணக்காளர்
**எதிர்பார்ப்பு**: அழகிய படித்த பெண்

**பிறந்த திகதி** : 1987.06.02
**மதம்** : இந்து
**ஜாதி**: கோவியர்
**நட்சத்திரம்**: ஆயிலியம்
**செவ்** : 7ல்
**தகைமை**: M.B.B.S
**தொழில்** : Doctor UK
**எதிர்பார்ப்பு**: இலங்கையில் வைத்தியர் அல்லது கணக்காளர்

**மணமகள் விபரம்**

**பிறந்த திகதி** : 1993.07.18
**மதம்** : இந்து
**ஜாதி**: வெள்ளாளர்
**நட்சத்திரம்**: திருவாதிரை
**செவ்** : இல்லை
**தகைமை**: M.B.B.S
**தொழில்**: Doctor
**எதிர்பார்ப்பு**: இலங்கையில் வைத்தியர், பொறியியலாளர்

**பிறந்த திகதி** : 1983.12.27
**மதம்** : இந்து
**ஜாதி**: : கோவியர்
**நட்சத்திரம்**: அஸ்தம்
**செவ்** : 7ல் செவ்
**தகைமை**: BA
**தொழில்** : ஆசிரியர்
**எதிர்பார்ப்பு**: உத்தியோக மணமகன்

**பிறந்த திகதி** : 1983.08.06
**மதம்** : இந்து
**ஜாதி**: வெள்ளாளர்
**நட்சத்திரம்**: திருவாதிரை
**செவ்** : 8ல் சூரிய செவ்
**தகைமை**: B.A
**தொழில்**:தபாலகஉத்தியோகத்தர்
**எதிர்பார்ப்பு**: அரச தொழில்

**பிறந்த திகதி** : 1998.03.01
**மதம்** : இந்து
**ஜாதி**: வெள்ளாளர்
**நட்சத்திரம்**: ரேவதி
**செவ்** : 12ல்
**தகைமை**: A/L
**தொழில்** : தனியார் கம்பனி
**எதிர்பார்ப்பு**: அரச தொழில், தனியார் தொழில், சுயதொழில்

0776505097
0778876969

**தலைமை அலுவலகம் ;**
**கனடா**
**001416661855**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புது அரசமைப்பு ‘அவுட்’

ஆளும் பொதுஜன பெரமுனவுக்குள் குழப்பங்களும் குத்து வெட்டுக்களும் உச்சத்தைத் தொட்டுள்ளன.

ஆளும் கூட்டணிக்குள் இரண்டாவது பெரிய கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனி வழி போகத் தயாராகி வருகின்றது. அதற்கான கால நேரம், சந்தர்ப்பம் பார்த்திருக்கின்றது அது.

அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் – நிமால் சிறிபால டி சில்வா போன்றோர் – அமைச்சர் பதவிகளில் இருக்கின்றனர். இருக்கும் வரை இருந்து ஆண்டனுபவிப்பது அவர்கள் எண்ணம். அதனால் உடனடியாக அரசை விட்டு வெளியேறாது வெளிப்பார்வைக்கு ஒட்டிக் கொண்டிருப்பது போல இப்போதைக்குக் காட்டிக் கொள்கின்றது அக்கட்சி.

எனினும், அக்கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அமைச்சர் பதவி ஏதும் வழங்கவில்லை, கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு வெறும் பற்றிக் உடு புடைவைகளுக்கான இராஜாங்க அமைச்சே வழங்கியமை என்று அக்கட்சி தரப்பில் ஆளும் தலைமை தொடர்பில் கடும் அதிருப்தி.

போதாக்குறைக்கு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த போது இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு வெடிப்புத் தாக்குதல் தொடர்பாக, ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைப்படி விசாரணைகளை முன்னெடுத்து, குற்றமிழைத்தோரின் சிவில் உரிமைகளைப் பறிப்பது உட்பட உரிய நடவடிக்கைகளை எடுப்பேன் என்ற மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பகிரங்கமாக மிரட்டியிருக்கின்றமை சு.கவுக்குள் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஒரு தேர்தல் வருமானால், மொட்டுத் தரப்பிலிருந்து சு.க. கழன்று தனி – வழி சென்று விடும் என நம்பபப்படுகின்றது.

மொட்டுக் கட்சியின் செல்வாக்கும், ஜனாதிபதி கோட்டாபயவுக்கான மக்கள் ஆதரவும் பெரிதும் சரிந்து வருவதும் தெரிந்த விடயம்தான். இந்த ஆட்சி, விரைவில் கவிழப் போகும் கப்பல் என்பது சு.கவினதும் – பொதுவாகப் பார்வையாளர்களினதும் கூட – கணிப்பீடு. கவிழும் கப்பலில் ஏன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும் என சு.கவினர் சிந்திப்பதில் தவறில்லைத்தான்.

சு.கவினருடன் பகைத்துக் கொள்வதினால், புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் ராஜபக்ஷக்களின் எத்தனம் புஸ்வாணமாகிப் போகும். அது தவிர்க்க முடியாத சிக்கல்.

சு.கவின் பதினான்கு எம்.பிக்களின் ஆதரவையும் சேர்த்தால்தான் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களை ஆளும் தரப்பினால் நாடாளுமன்றத்தில் மட்டுமட்டாகத் திரட்ட முடியும். சு.க. அரசிலிருந்து வெளியேறினால், மற்றைய எதிர்க்கட்சிகள் இணங்குகின்ற ஓர் அரசமைப்பைத் தான் இந்த அரசினால் கொண்டு வரமுடியும் என்பது யதார்த்தக் கட்டாயமாகும்.

“எந்த அரசும் ஆட்சிக்கு வந்ததும் புதிய அரசமைப்பைக் கொண்டு வர வேண்டும். அந்திமக் கட்டத்தில் அல்ல.” – என்று நல்லாட்சி அரசு தன்னுடைய கடைசிக் காலத்திலும் தனது புதிய அரசமைப்பு முயற்சியைக் முன்னெடுக்க எத்தனித்த போது அப்போது எதிரணியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ உபதேசித்திருந்தார்.

அது இப்போது கோட்டாபய அரசுக்கும் பொருந்தும் போல தெரிகின்றது. கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டன. இன்னும் புதிய அரசமைப்புக்கான நகலே வரவில்லை. அது வரும் போது இந்த அரசும் அதன் ஆட்சியின் பிற்பாதியில்தான் இருக்கும். அதனால் புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பது பிள்ளையார் கலியாணம் போல நடக்காமல் தொடரத்தான் போகிறது.

## மாவீரர்களின் கல்லறைகளைச் சிதைத்து அரச பயங்கரவாதத்தை அரசே செய்தது

### அஞ்சலியில் கோப்பாய் தவிசாளர் நிரோஷ் தெரிவிப்பு



கோப்பாய் உள்ளிட்ட மாவீரர் துயிலும் இல்லங்களை அரசு படைத்தரப்பின் ஊடாக சிதைத்தது நாட்டின் வரலாற்றில் வெட்கக்கேடான அரச பயங்கரவாதம் ஆகும். போரில் இறந்தவர்களைக் கூட மலினப்படுத்தும் இனவாதமும் வெறித்தனமும் அரசிடம் நிலைத்திருப்பது மானிடத்தன்மை அல்ல என தவிசாளர் நிரோஷ் தெரிவித்தார். வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக ஈகச்சுடர் ஏற்றி வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நினைவு கூர்தல் என்பது எமது உரிமையாகும். இன்றைய நிலையில் அந்த நினைவுகூரும் உரிமையை இராணுவ பிரசன்னங்கள், அடாவடித்தனங்கள் ஊடாகத் தடுப்பதற்கு முயற்சி கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுக்கு மேலாக பொலிஸார் பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளனர்.

எமது மண்ணில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட ஆயுத ரீதியிலான அடக்குமுறைகளுக்கு எதிராக இனத்தைப்பாதுகாப்பதற்காக தம் இன்னுயிர்களை ஆகுதியாக்கிய மாவீரர்களை நினைவில் கொள்கின்றோம். அவர்களது தியாகங்கள் மாவீரர்களை புனிதர்களாக்கியுள்ளது. இன்றும் இந்த நாட்டில் எமது இனம் அடக்குமுறைகளில் இருந்து விடுதலை பெற போராடிக் கொண்டிருக்கின்றது.

இன்றும் கோப்பாய் உள்ளிட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவ முகாம்கள் ஆக்கப்பட்டு வித்துடல்கள் விதைக்கப்பட்ட கல்லறைகளை சிதைத்து அரசு கோரத்தாண்டவமாடியுள்ளது. உலகில் எங்குமில்லாத வன்முறை எண்ணம் இறந்தவர்களின் கல்லறையை சிதைத்த அரச இயந்திரத்திடம் தான் இருக்கின்றது. எத்தனை தடவைகள் மாவீரர் துயிலும் இல்லங்களை அரசபடைகள் சிதைத்தன என்பதை உலகமே அறியும். அவ்வாறாக கல்லறைகளை சிதைத்த உங்களால் எமது மக்களிடத்தில் இருந்து மாவீரர்களின் தியாகங்களை அகற்ற முடியவில்லை என்பதை கொடூரமாக யுத்தத்தினை முடித்து 12 ஆண்டுகளின் கழிந்த மக்களின் உணர்வுகளில் இருந்து அரசு உணர்ந்தே வருகின்றது. இதனால் அரச கட்டமைப்பு எதிர்கொண்டிருக்கும் பயப்பீதியே சந்திக்கு சந்தியும் இராணுவத்தை நிறுத்தி மக்களை அச்சுறுத்தி அடக்க நினைப்பதற்கான காரணம் ஆகும். போரிட்டு மரணித்த மாவீரர்கள் ஒருபோதும் சிங்கள மக்களுக்கு எதிராகவோ அவர்களது உரிமைகளுக்கு எதிராகவோ அவர்களது தேசியத்திற்கு எதிராகவோ போரிடவில்லை. எமது இனத்தின் அடையாளங்களும் நிலமும் பூர்வீகமும் திட்டமிட்டு காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்ட போது அதற்கு எதிராகவே போராடினர். எம் மூதாதையர் அஹிம்சை வழியில் போராடிய போது அதற்கு மதிப்பளிக்காது அஹிம்சை வழியையும் ஜனநாயகப் போராட்டத்தையும் அரச பயங்கரவாதத்தின் ஊடாக நசுக்கியமையின் விளைவாகவே விடுதலைப் போராட்டம் ஆயுதமயப்படுத்தப்பட்டது.

அதில் உலகில் எங்குமில்லாத அளவுக்கு எமது மாவீரர்களின் தியாகங்கள் நிலைத்திருக்கையில் மாவீரர்களை நினைவேந்துவதும் வரலாற்றுக்கடமையும் தெய்வீகக் கடமையும் ஆகும். இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் ஈகைச்சுடரை ஏற்றி உரையாற்றுகையில் தெரிவித்தார்.

## ஆறு. திருமுருகனின் சிவபூமி பாடசாலைக்கு தேசிய விருது

ந.லோகதயாளன்
யாழ்ப்பாணம், நவ.27

இலங்கையில் அதி சிறந்த விசேட தேவையுடையோருக்கான பாடசாலையாக ஆறு திருமுருகனால் நிர்வகிக்கப்படும் சிவ பூமி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை சமூக சேவைத் திணைக்களம் நடத்திய 2019 ஆம் 2020 ஆம் ஆண்டுக்கான மாற்றுவலு விசேட தேவையுடையோருக்கான சிறந்த பாடசாலைத் தேர்விலேயே சிவபூமி இல்லம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 04ஆம் திகதி 11 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று 196 பிள்ளைகள் இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். இவர்களின் கற்பித்தல் பணிக்காக 20 ஆசிரியர்கள், அதிபர் ஆகியோருடன் 5 பணியாளர்களும் உள்ளனர்.

இங்கே கற்கும் மாணவர்களை தினமும் வீட்டுக்கே சென்று ஏற்றி வருவதற்காகவும் 3 வாகனங்கள் சேவையில் ஈடுபடுகின்றன.

இந்தப் பாடசாலையே சிறந்த விசேட தேவையுடையோருக்கான பாடசாலையாக தேர்வு செய்யப்பட்டு அதற்கான விருது அதன் நிர்வாகி ஆறு.திருமுருகனிடம் கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெனார்ண்டோவால் வழங்கப்பட்டது.

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை – 2021

“மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்.

- ஸ்டேர்லிங் மோர்ட்டன்
(அமெரிக்க அரசியலாளர்)



# பெண் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அபிவிருத்தியில் ஆர்வம் காட்ட வேண்டும்

## திலகராஜ் கோரிக்கை

உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு எனும் 2018 ஆம் ஆண்டு முதலான ஏற்பாடு நடைமுறைக்கு வந்ததை அடுத்து இலங்கையின் உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

அந்தத் தெரிவு முறையில் குறைபாடுகள் உள்ள போதும் பெண்கள் தமது தலைமைத்துவ ஆற்றலை வெளிப்படுத்த இந்த ஏற்பாடு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பௌதீக அபிவிருத்தி விடயங்களைக் காட்டிலும் உள்ளூர் மட்டத்தில் சமூக அபிவிருத்தி சார்ந்த விடயங்களில் பெண் உறுப்பினர்கள் ஆர்வம் காட்டுதல் அவசியமாகும் என முன்னாள் நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான எம். திலகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

ஆண் உறுப்பினர்கள் பௌதீக அபிவிருத்தியிலேயே அதிகம் கவனம் செலுத்துகின்றனர். அபிவிருத்தி வேலைகளைச் செய்யும் ஒப்பந்தக்காரர்களாகவே அவர்களில் பலர் அடையாளம் காணப் பட்டுள்ளனர் அல்லது ஒப்பந்தக்காரர்கள் பலர் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களாக உள்ளனர்.

பெண் உறுப்பினர்களும் பாதை அபிவிருத்தி போன்ற விடயங்களில் கவனம் செலுத்தும்போது ஆண் உறுப்பினர்களுடன் முட்டி மோதி முரண்படும் போட்டி சூழல் ஒன்று நிலவுவதை அவதானிக்க முடிகின்றது.

அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதேநேரம் சமூகம் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெண் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். குறிப்பாக பெண்கள், சிறுவர்கள் குறித்தான விடயங்களில் அதிக அக்கறை காட்டுதல் வேண்டும். என்றும் தெரிவித்துள்ளார்.

# மலர் வெளியீடு



அமரர் தியாகராஜா பொன்னம்பலவாணர் அவரின் நினைவஞ்சலிக் கூட்டமும் மலர் வெளியீடும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

BRRENS Fashion Planet
Reborn Signature MINISTER
எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும், பிரத்யேகமான திருமணம், பூப்பனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து தரப்படும்.
பிறென்ஸ் பஷன் பிளானட்
சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ஆடைகள்
075 527 9110
077 332 1937
021 2221 2777
Fb.Brrens Fashion Planet
Email.brensfashionplanet@gmail.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகைமாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
076 825 7716 - ஆகாஸ்

Northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

நாகபூஷணி திருமணசேவை
இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்
021 222 9306, 077 138 7596, 071 999 9306

மணமகள் தேவை

பிறந்த திகதி - 1989
மதம் - இந்து
ஜாதி -V ஆண்
நட்சத்திரம் - விசாகம் - 4
செவ்வாய் - 7
கல்வித் தகைமை - A/L
தொழில் - UK(PR) இலங்கை வருவார்
எதிர்பார்ப்பு - ஆங்கிலத் தகைமை உள்ள இலங்கை மணமகள்

பிறந்த திகதி - 1986
மதம் - இந்து
ஜாதி -V ஆண்
நட்சத்திரம் - புனர்பூசம் - 2
செவ்வாய் - 7
கல்வித் தகைமை - MBA, CIMA
தொழில் - சுப்பர்மார்க்கெற் (சொந்தம் UK/PR) இலங்கை வருவார்
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 1986
மதம் - இந்து
ஜாதி -V ஆண்
நட்சத்திரம் - சுவாதி
செவ்வாய் - குற்றமில்லை
தொழில் - பிரான்ஸ் (PR) இலங்கை வருவார்
எதிர்பார்ப்பு - பொதுவான அழகான மணமகள்

பிறந்த திகதி - 1992
மதம் - இந்து
ஜாதி - V ஆண்
நட்சத்திரம் - அனுஷம்
செவ்வாய் - குற்றமில்லை
கல்வித் தகைமை - A/L
தொழில் - பிரான்ஸ் (PR) இலங்கை வருவார்
எதிர்பார்ப்பு - பொதுவான அழகான மணமகள்

பிறந்த திகதி - 1987
மதம் - இந்து
ஜாதி -V ஆண்
நட்சத்திரம் - பூராடம்
செவ்வாய் - குற்றமில்லை
கல்வித் தகைமை - A/L
தொழில் -France (PR) இலங்கை வருவார்
எதிர்பார்ப்பு - பொதுவான அழகான 5',4" இற்கு மேல் உயரமான மணமகள்

பிறந்த திகதி - 1990
மதம் - இந்து
ஜாதி - V ஆண்
நட்சத்திரம் - ரேவதி
செவ்வாய் - இலக்கணத்தில்
கல்வித் தகைமை - (E,E.E) பொறியியலாளர்
தொழில் - பொறியியலாளர் (பிரான்ஸ்) (PR) இலங்கை வருவார்
எதிர்பார்ப்பு - அழகான ஓரளவு படித்த மணமகள்

பிறந்த திகதி - 1984
மதம் - இந்து
ஜாதி - V ஆண்
நட்சத்திரம் - அவிட்டம் - 3
செவ்வாய் - குற்றமில்லை
கல்வித் தகைமை - A/L
தொழில் - UK (PR)
எதிர்பார்ப்பு - A/L படித்த பொதுவான அழகுடைய ஆங்கிலத் தகைமையுடைய மணமகள்

பிறந்த திகதி - 1989
மதம் - இந்து
ஜாதி - V ஆண்
நட்சத்திரம் - திருவோணம்
செவ்வாய் - 8 இல் சூரி/ செவ்.
கல்வித் தகைமை - BBM, CIMA
தொழில் - உதவிக் கணக்காளர்
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகத்தர்

பிறந்த திகதி - 1989
மதம் - இந்து
ஜாதி - V ஆண்
நட்சத்திரம் - உத்தரம் - 2
செவ்வாய் - 12இல்
கல்வித் தகைமை - M.Sc (Engineer)
தொழில் - Electical (Supreintendent)
எதிர்பார்ப்பு - உயர்தொழில் மணமகள்

பிறந்த திகதி - 1996
மதம் - இந்து
ஜாதி -V ஆண்
நட்சத்திரம் - கார்த்திகை - 3
செவ்வாய் - குற்றமில்லை
கல்வித் தகைமை - BSc Engineer (Moratuwa)
தொழில் - Engineer
எதிர்பார்ப்பு - உயர்தொழில் மணமகள்

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# எழில் கதிர்





# சரும வறட்சி உள்ளவர்கள் குளிர்காலத்தில் செய்யவேண்டியவை

சரும வறட்சி உள்ளவர்கள் குளிர்காலத்தில் பல சரும பிரச்சினைகளுக்கு ஆளாவார்கள். குறிப்பாக குளிர்காலத்தில் வீசும் குளிர்ச்சியான காற்றினால் சருமமானது அதிகம் வறட்சியடைந்து, சருமத்தில் இருந்து வெள்ளை நிறத்தில் செதில் செதில்களாக தோல் உரிய ஆரம்பிக்கும். இப்படி ஏற்படும் போது அதற்கு சரியான பராமரிப்புக்களைக் கொடுக்காமல் இருந்தால், சரும பிரச்சினைகள் வர ஆரம்பிப்பதோடு, தீவிரமடைந்துவிடும்.

குளிர்காலத்தில் வறண்ட சருமம் கொண்டவர்கள் தங்கள் சருமத்திற்கு தவறாமல் பராமரிப்புக்களைக் கொடுக்க வேண்டும். சருமத்தின் வறட்சியைத் தடுக்க கடைகளில் பல்வேறு அழகு சாதனப் பொருள்கள் விற்கப்படுகின்றன. ஆனால் இந்த பொருள்களில் கெமிக்கல்கள் இருப்பதால், இதைப் பயன்படுத்துவதற்கு பதிலாக, இயற்கை பொருள்களைக் கொண்டு சருமத்திற்கு பராமரிப்பு கொடுத்து வந்தால், சருமம் வறட்சியின்றி பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும். இப்போது சரும வறட்சியை வீட்டிலேயே சமாளிக்க உதவும் சில வழிகளைக் காண்போம்.

தேங்காய் எண்ணெய் மற்றும் தேன் ஆகிய இரண்டு பொருள்களுமே சருமத்திற்கு ஈரப்பதமளிக்கும் பண்புகளைக் கொண்டுள்ளன. தேங்காய் எண்ணெய் மற்றும் தேனை சரிசம அளவில் எடுத்து நன்கு கலந்து, அதை அதிகம் வறட்சியடையும் முகம், கை, கால்களில் தடவி 20 - 30 நிமிடங்கள் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இதனால் சரும வறட்சி கட்டுப்படுத்தப்படும்.

வாழைப்பழம் மற்றும் தேன் ஆகிய இரண்டுமே ஈரப்பதமூட்டும் பண்புகளைக் கொண்டுள்ளன. சரும தொற்றுகள், அழற்சி போன்ற பிரச்சினைகளைக் கொண்டவர்கள் இந்த வழியைப் பயன்படுத்துவதன் மூலம் தடுக்கலாம். அதற்கு நன்கு கனிந்த வாழைப் பழத்தை மசித்து, அதில் சிறிது தேன் கலந்து சருமத்தில் தடவி 20 - 25 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

மயோனைஸ் ஈரப்பதமூட்டும் பண்புகளைக் கொண்டது. பேபி ஒயிலில் இரசாயனங்கள் அதிகம் இருக்காது. எனவே 2 கரண்டி மயோனைஸ் உடன் ஒரு கரண்டி பேபி ஒயில் சேர்த்து கலந்து, வறட்சியடையும் பகுதியில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

அவகேடோ பழம் சருமம் மற்றும் தலை முடிக்கு அற்புதமான நன்மைகளை வழங்கக்கூடிய பழம். இதில் அழகை மேம்படுத்த தேவையான சத்துக்கள் ஏராளமாக உள்ளன. இதன் சிறப்பான பகுதி என்னவென்றால், இதை எந்த ஒரு பொருளுடனும் சேர்த்து பயன்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. அப்படியே பயன்படுத்தலாம். குறிப்பாக வறட்சியான சருமத்தினரின் சருமத்தில் ஏற்படும் வறட்சியைப் போக்கக்கூடியது. அதற்கு அவகேடோ பழத்தை அப்படியே சருமத்தில் தடவலாம் அல்லது அவகோடோ எண்ணெயை சருமத்திற்கு தடவலாம்.

முட்டையின் மஞ்சள் கருவில் கொழுப்பு அதிகம் இருப்பதால், இது ஒரு அற்புதமான ஈரப்பதமூட்டும் பொருளாக செயல்படுகிறது. அதே போல் பாதாம் எண்ணெயில் விற்றமின் ஈ, மோனோ அன்சாச்சுரேட்டட் கொழுப்பு அமிலங்கள், புரோட்டீன்கள், பொற்றாசியம், ஜிங்க் போன்ற சத்துக்கள் இருக்கின்றமையால், இது ஒரு சிறப்பான சரும பராமரிப்பு பொருள். ஒரு பௌலில் முட்டையின் மஞ்சள் கரு மற்றும் பாதாம் எண்ணெயை ஒன்றாக எடுத்து நன்கு கலந்து, அதிகம் வறட்சியடையும் பகுதியில் தடவி ஊற வைத்து, பின் கழுவினால், சரும வறட்சி கட்டுப்படும்.

வாழைப்பழம் மற்றும் பிரஷ் க்ரீம் ஆகிய இரண்டிலுமே ஈரப்பதமூட்டும் பண்புகள் உள்ளன. அதற்கு நன்கு கனிந்த வாழைப்பழத்தை எடுத்து மசித்து, அத்துடன் சிறிது பிரஷ் க்ரீம் சேர்த்து கலந்து, முகத்தில் மற்றும் வறட்சி அதிகம் ஏற்படும் சருமத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் ஈரத் துணியால் துடைத்து, அதன் பின் கழுவ வேண்டும்.

2 - 4 டார்க் சொக்லேட் துண்டுகளை ஒரு பாத்திரத்தில் எடுத்து, அதை உருக்கி, அத்துடன் ஒரு டீஸ்பூன் தேன் சேர்த்து கலந்து, முகம் மற்றும் கழுத்தில் தடவி பதினைந்து நிமிடம் ஊற வைத்து, பின் மென்மையாக தேய்த்து, வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும்.

பப்பாளியில் ஈரப்பதமூட்டும் பண்புகள் மற்றும் சருமத்தை பிரகாசமாக்கும் பண்புகள் அதிகம் உள்ளன. இத்தகைய பப்பாளியின் ஒரு துண்டை பிளெண்டரில் போட்டு ஒரு கப் நீரை ஊற்றி நன்கு அரைத்து, ஒரு பஞ்சுருண்டையால் அதை நனைத்து முகத்தைத் துடைத்து எடுக்க வேண்டும். ஒருமுறை தயாரிக்கும் இந்த டோனரை 5 நாள்கள் வரை பயன்படுத்தலாம்.

கற்றாழையில் ஈரப்பதமூட்டும் பண்புகள் உள்ளன. இதை பாதாம் எண்ணெய் மற்றும் தேனுடன் சேர்த்து பயன்படுத்தும் போது இன்னும் சிறப்பான பலன் கிடைக்கும். அதற்கு 2 டேபிள் ஸ்பூன் கற்றாழையுடன் தேன் மற்றும் பாதாம் எண்ணெயை சரிசம அளவில் கலந்து, முகம் மற்றும் வறட்சி அதிகம் ஏற்படும் பகுதியில் தடவி அரை மணிநேரம் ஊற வைத்து, பின் நீரால் கழுவ வேண்டும்.



# ஆண்களின் முகத்தில் உள்ள கருமையைப் போக்கும் வழிகள்

சில ஆண்கள் தங்கள் சருமத்திற்கு அழகு நிலையங்களுக்குச் சென்று தங்கள் சருமத்திற்கு பராமரிப்புக்களைக் கொடுப்பார்கள். ஆனால் அழகு நிலையங்களுக்குச் சென்று தான் ஆண்கள் தங்கள் சருமத்தில் உள்ள கருமையைப் போக்க முடியும் என்பதில்லை.

பெண்களைப் போலவே ஆண்களும் வீட்டில் உள்ள சில பொருள்களைக் கொண்டு சருமத்திற்கு பராமரிப்பு கொடுத்து வந்தால், சருமத்தில் உள்ள கருமையை எளிதில் போக்கலாம். அதுவும் கோடை வெயிலால் கருமையான சருமத்தை போக்க குளிர்காலம் சிறந்த பருவம் என்பதால், இக்காலத்தில் தவறாமல் சருமத்திற்கு பராமரிப்புக்களைக் கொடுத்து வந்தால், எளிதில் சருமத்தை வெள்ளையாக்கலாம்.

சரும கருமையைப் போக்குவதில் எலுமிச்சை மிகச்சிறந்த பொருள். ஏனெனில் இதில் ப்ளீச்சிங் பண்புகள் இயற்கையாகவே உள்ளன. அதற்கு ஒரு மேசைக் கரண்டி எலுமிச்சை சாற்றில் ஒரு மேசைக்கரண்டி தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 30 நிமிடம் கழித்து, குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ வேண்டும்.

கடலை மாவு மற்றும் மஞ்சள் ஆகிய இரண்டுமே சருமத்தின் நிறத்தை அதிகரிக்கும் சிறப்பான பொருள்கள். ஒரு பௌலில் 2 மேசைக்கரண்டி கடலை மாவு மற்றும் 1/2 மேசைக்கரண்டி மஞ்சள் தூள் சேர்த்து, பால் அல்லது தயிர் சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் அல்லது கருமையான பகுதியில் தடவி நன்கு காய்ந்த பின் வெதுவெதுப்பான நீரால் கழுவ வேண்டும்.

தக்காளியில் உள்ள அ ன்டி - ஒக்ஸிடன்ட்டுகள் சரும நிறத்தை அதிகரிக்க உதவும். தயிரில் உள்ள லாக்டிக் அமிலம், சருமத்தை மென்மையாக்கும். ஆகவே இந்த இரண்டு பொருள்களைக் கொண்டு சருமத்திற்கு மாஸ்க் போட்டால் ஒரு நல்ல பலன் கிடைக்கும். அதற்கு ஒரு பௌலில் நற்பதமான தக்காளி சாறு மற்றும் 2 மேசைக் கரண்டி தயிர் சேர்த்து கலந்து, கருமையாக இருக்கும் முகம், கை, கால் பகுதியில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

வெள்ளரிக்காயில் உள்ள குளிர்ச்சி பண்புகள் சருமத்தின் கருமையை நீக்க உதவும். அதற்கு வெள்ளரிக்காயை அரைத்து சாறு எடுத்து, அதை ஒரு பஞ்சுருண்டையில் நனைத்து, சருமத்தில் தடவி நன்கு காய்ந்ததும், முகத்தைக் கழுவ வேண்டும். வேண்டுமானால், வெள்ளரிக்காய் சாறுடன் சிறிது எலுமிச்சை சாற்றினையும் சேர்த்து கலந்து கொள்ளலாம்.

உருளைக்கிழங்கிலும் ப்ளீச்சிங் பண்புகள் உள்ளன. ஆகவே பெரும்பாலும் இது கருவளையங்களைப் போக்க பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய உருளைக்கிழங்கைத் துருவி சாறு எடுத்து, அதை பாதிக்கப்பட்ட கருமையான பகுதிகளில் தடவி 10 - 15 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், சருமத்தில் உள்ள கருமை மாயமாய் மறையும்.

ஓட்ஸ் சருமத்தில் உள்ள அழுக்குகளை வெளியேற்றி, சரும நிறத்தை மேம்படுத்திக் காட்டுவதில் சிறந்தது. மோரில் லாக்டிக் அமிலம் உள்ளது. இது சரும நிறத்தை மேம்படுத்தவும், சருமத்தை மென்மையாக்கவும் உதவும். அதற்கு 2 மேசைக்கரண்டி ஓட்ஸை மோரில் சிறிது நேரம் ஊற வைத்து, பின் அதில் ஒரு மேசைக்கரண்டி தேன் சேர்த்து கலந்து, முகம் மற்றும் கை, கால்களில் தடவி 25 - 30 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

துவரம் பருப்பு சரும கருமையைப் போக்குவதில் சிறந்த பொருள். தக்காளி சாறு சரும நிறத்தை மேம்படுத்தும் மற்றும் கற்றாழையும் சரும நிறத்தை அதிகரிக்கும். இந்த மூன்றையும் கொண்டு பேஸ் மாஸ்க் போட்டால், சருமம் பிரகாசமாக ஜொலிக்கும். அதற்கு 3 மேசைக்கரண்டி துவரம் பருப்பை நீரில் சில மணி நேரம் ஊற வைத்து, பின் அதை அரைத்து பேஸ்ட் செய்து, அத்துடன் ஒருமேசைக்கரண்டி கற்றாழை ஜெல் மற்றும் 2 டீஸ்பூன் தக்காளி சாறு சேர்த்த கலந்து, கருமையாக உள்ள முகம், கை, கால், கழுத்துப் பகுதியில் தடவி 25 - 30 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரைப் பயன்படுத்தி மென்மையாக மசாஜ் செய்து கழுவ வேண்டும். மேலே கொடுக்கப்பட்டுள்ள பேஸ் மாஸ்க்குகளை சருமத்திற்கு தினமும் போட்டு வந்தால், வெயிலால் கருமையான சருமத்தை விரைவில் வெள்ளையாக்கலாம்.




# விருந்துக்கதிர்



# சோளம்

சோளம் என்பது புல்வகையைச் சேர்ந்த பல இனங்களை உள்ளடக்கிய தாவரம். இவற்றில் சில தானியங்களுக்காகவும், வேறு சில கால்நடைத் தீவனங்களுக்காகவும் பயிரிடப்படுகின்றன. சில வகைகள் மேய்ச்சல் நிலங்களில் இயற்கையாக வளர்கின்றன.

வெள்ளைச் சோளம்:- அரிசியைப் போன்ற தன்மையையும் அதைவிடப் பல சத்து களையும் கொண்டது. சோளத்தில் உடலுக்கு அவசியமான புரதம், இரும்பு, கல் சியம், கொழுப்பு, நார்ச்சத்துகள் உள்ளன. சிறுதானியங்களில் குறைந்தளவே குளுக்கோஸ் இருப்பதால், அவை மனிதனை சர்க்கரை நோயிலிருந்து காப் பாற்றக்கூடியவை.

சிவப்பு சோளம்:- இவ்வகைச் சோளம் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உணவாகப் பயன்படுகிறது. பெரும்பாலும் தென் ஆபிரிக்காவில் விளைவிக்கப் படும் இந்தச் சோளம், தற்போது மழை குறைவாகப் பொழியும் அனைத்து நாடுகளிலும் விளைவிக்கப்படுகிறது. இது 4 மீற்றர் உயரம் வரை வளரும். 3 முதல் 4 மி.மீ. வரை சுற்றளவு கொண்டிருக்கும். இலைகள் மருந்து, எதனோல் ஆகி யன தயாரிக்கப் பயன்படுகிறது.



## கம்பு

கம்பு திணை தானிய வகைகளுள் ஒன்றாகும். வரலாற்றுக்கு முந்தைய காலங்களிலிருந்து பயிரிடப்பட்ட மிகப் பழைமையான பயிராகும். இது உலகின் அதிக அளவில் பயிரிடப்படும் தானிய வகைகளில் ஆறாவது மிக முக்கியமான தானியமாகும்.

கம்பு தானியங்கள் சிறியதாகவும் வட்ட வடிவிலும், மஞ்சள் நிறத்திலும் காணப்படுகிறது. இதன் வைக்கோல் பொதுவாக கால்நடை உணவாகவும், பயன்படுகிறது. வேகமாக வளரும் மற்றும் வறண்ட நீர்ப்பாசனம் குறைந்த பகுதிகளிலும் வளரக் கூடியது. கோதுமை, அரிசி, சோளம் மற்றும் பார்லி போன்ற தானியங்கள் வளர ஏற்ற மண் இல்லாத பகுதிகளிலும் வளரக் கூடியது.

100 கிராம் கம்பில் 300 கிலோ கலோரிகளும், இறைச்சி, முட்டை போன்ற அசைவ உணவுகளுக்கு இணையான அளவு புரதச் சத்தும், அதிக அளவு நார்ச் சத்தும், மிக குறைந்த அளவு கொழுப்புச் சத்தும் உள்ளன.

இதில் அதிக அளவு விற்றமின் - பி மற்றும் இரும்புச் சத்து, மக்னீசியம், கல்சியம், பொஸ்பரஸ், மங்கனீசு, பொட்டாசியம், தாமிரம், துத்தநாகம் மற்றும் குரோமியம் போன்ற தாதுச் சத்துக்கள் நிறைந்துள்ளன.

மற்ற தானிய வகைகளை விட இதில் பொற்றாசியம், கல்சியம் மற்றும் இரும்புச்சத்து அதிக அளவு இருப்பதாக அறியப்படுகிறது.

பார்லிக்கு அடுத்த படியாக அதிகப் படியான மக்னீசியம் மற்றும் துத்தநாகம் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிடத்தக்க அளவு குரோமியத்தைக் கொண்டிருக்கும் ஒரே தானியம் கம்பாகும்.

## சோள ரவை உப்புமா



### தேவையானவை

**சோளம் - 1 கப்**
**அரிசி ரவை - 1 கப்**
**கோதுமை ரவை - 1 கப்**
**பெரிய வெங்காயம் - 1**
**கறிவேப்பிலை - சிறிதளவு**
**இஞ்சி - சிறிய துண்டு**
**பச்சை மிளகாய் - 1**
**கடுகு - 1 தேக்கரண்டி**
**உளுத்தம்பருப்பு**
**கடலைப்பருப்பு**
**பெருங்காயத்தூள் - சிறிதளவு**
**தேங்காய் எண்ணெய்**
**உப்பு - தேவையான அளவு**



### செய்முறை: -

சோளத்தை ரவைபோன்று சிறிதாக உடைக்கவும். அரிசி ரவை, கோதுமை ரவை, சோள ரவை மூன்றையும் ஒன்று சேர்க்கவும். தாச்சியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு தாளித்து, சிறிதாக நசுக்கிய இஞ்சி, நறுக்கிய பச்சை மிளகாய், வெங்காயம் ஆகிய வற்றைச் சேர்க்கவும். கலந்து வைத்திருக்கும் ரவையின் அளவில் 1 பங்குக்கு மூன்று பங்கு என்ற விகிதத்தில் தண்ணீர் ஊற்றவும்.

பின்னர் உப்பு சேர்த்து, கொதித்ததும், கலந்து வைத்திருக்கும் ரவையைத் தூவிக் கிளறி, கறிவேப்பிலை, பெருங்காயத்தூள் போட்டுக் கிளறி இறக்கவும்.

குறிப்பு: காய்கறிகள் சேர்த்தும் தயாரிக்கலாம். இதற்கு சம்பல் , சாம்பார் சிறந்த சுவை கூட்டும்.

# ஆரோக்கியமான கம்பு தோசை செய்வோம்

**தேவையான பொருள்கள் -**

கம்பு - 100 கிராம்
பாசிப்பருப்பு - 1 கப்
அரிசி - 1 கப்
இஞ்சி - சிறிய துண்டு
மிளகு - 10
பொடியாக நறுக்கிய வெங்காயம் - 1 கப்
பச்சை மிளகாய் - 1
எண்ணெய்
உப்பு - தேவையான அளவு

**செய்முறை:**

கம்பு, பாசிப்பருப்பு, அரிசி ஆகியவற்றை 4 மணி நேரம் ஒன்றாக ஊற வைத்து, பின்பு இஞ்சி, மிளகு, பச்சை மிளகாய் சேர்த்து மிருதுவாக தோசை மாவு பதத்தில் அரைக்கவும்.

அதில் உப்பு சேர்த்து, நறுக்கிய வெங்காயத்தையும் போட்டு, தோசைக்கல்லில் எண்ணெய் தேய்த்து, மாவை தோசைகளாக வார்க்கவும்.








## சில நோய்களுக்கு நாட்டு மருத்துவம்

தேங்காய் எண்ணையில் சிறிதளவு கற்பூரம் சேர்த்து நன்கு கொதிக்கவைத்து அவை ஆறியதும் நெஞ்சில் தடவ நெஞ்சுச் சளி குணமாகும்.

10 துளசி இலை, சிறுதுண்டு சுக்கு மற்றும் 2 லவங்கம் ஆகியவற்றை நன்கு அரைத்து நெற்றியில் பற்றாக போட்டால் தலைவலி குணமாகும்.

சுக்கு, வெள்ளை மிளகு மற்றும் திப்பிலி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட தொண்டை கரகரப்பு குணமாகும்.

தொடர் விக்கல் குணமாக நெல்லிக்காயை இடித்து சாறு எடுத்து தேனில் கலந்து சாப்பிட தொடர் விக்கல் குணமாகும்.

வாய் நாற்றம் குணமாக சட்டியில் படிகாரத்தை போட்டு நன்கு காய்ச்சி, ஆறவைத்து தினமும் மூன்று வேளை சாப்பிட வாய் நாற்றம் குணமாகும்.

உதட்டு வெடிப்பு குணமாக கரும்பு சக்கையை எரித்து சாம்பல் எடுத்து அதை வெண்ணையில் கலந்து உதட்டில் தடவி வர உதட்டு வெடிப்பு பிரச்சினைகள் குணமாகும்.

செரிமானம் நன்கு அடைய ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பில்லை, இஞ்சி மற்றும் சீரகம் ஆகியவற்றை நன்கு கொதிக்க வைத்து, ஆறியதும் வடிகட்டி குடிக்க செரிமானம் நன்கு அடையும்.

குடல் புண் குணமாக மஞ்சளை அனலில் இட்டு சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். பின்பு அந்த சாம்பலை தேனில் கலந்து சாப்பிட குடல் புண் குணமாகும்.

வயிற்று வலி குணமாக வெந்தயத்தை நெய்யில் வறுத்து பொடி செய்து, தேனில் கலந்து சாப்பிட வயிற்று வலி குணமாகும்.

மலச்சிக்கல் குணமாக செம்பருத்தி இலையை காய வைத்து பொடி செய்து தினமும் சாப்பிட மலச்சிக்கல் குணமாகும்.

சீத பேதி குணமாக தினமும் மலை வாழைப்பழத்தை நல்லெண்ணையில் கலந்து சாப்பிட்டு வர சீத பேதி குணமாகும்.

பித்த வெடிப்பு குணமாக கண்டங்கத்திரி இலைசாறை ஒலிவ் எண்ணையில் காய்ச்சி தினமும் பூசி வர விரைவில் பித்த வெடிப்பு குணமாகும்.

தீப்புண் குணமாக வாழைத்தண்டை எரித்து அந்த சாம்பலை தேங்காய் எண்ணையில் கலந்து தீப்புண் உள்ள இடத்தில் போட்டு வர விரைவில் தீப்புண், சீழ்வடிதல் மற்றும் காயங்கள் ஆகியவை குணமாகும்.

மூக்கடைப்பு குணமாக ஒரு துண்டு சுக்கை தோல் நீக்கி அரை லிற்றர் தண்ணீரில் கொதிக்க வைத்து, அதனுடன் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து காலை மற்றும் மாலை என்று இருவேளை குடித்து வர மூக்கடைப்பு தொல்லை குணமாகும்.

வறட்டு இருமல் குணமாக எலுமிச்சம் பழ சாறுடன் சிறிதளவு தேன் கலந்து குடித்து வர வறட்டு இருமல் குணமாகும்.



## சிகரெட்டால் பற்களில் ஏற்பட்டுள்ள கறைகளைப் போக்கும் வழிகள்

இன்று பலரிடம் குறிப்பாக இளைஞர்களிடையே சிகரெட் பிடிப்பது ஒரு பிரபலமாக உள்ளது. ஆனால் சிகரெட்டில் உள்ள புகையிலை உடல் ஆரோக்கியத்தை மோசமாக பாதிக்கக்கூடியது. குறிப்பாக புகையிலை வாயின் ஆரோக்கியத்தையே முதலில் பாதிக்க ஆரம்பிக்கிறது. சிகரெட் பிடிக்கும் பலரைப் பார்த்தால், அவர்களது பற்களின் நிறம் மாறி அசிங்கமாக காணப்படும். ஏனெனில் புகையிலையில் உள்ள நிக்கோட்டின் பற்களைச் சுற்றி படிந்து, பற்களை மஞ்சள் நிறத்தில் மாற்றுகிறது.

புகையிலை பற்களில் மோசமான பிரச்சினைகளை உண்டாக்குவது தவிர, புற்றுநோயை உண்டாக்கக்கூடியது. இப்போது பற்களில் படிந்துள்ள சிகரெட் கறைகளைப் போக்கும் சில சக்தி வாய்ந்த இயற்கை வழிகளைக் காண்போம்.

வாய் சுத்தம் வெறும் பற்களைத் துலக்குவதோடு நின்று விடாது. உண்மையில் வாய் சுத்தம் என்பது ஒரு நாளைக்கு இரண்டு முறை பற்களைத் துலக்குவது, மௌத் வாஷ் மற்றும் ப்ளாஷ் போன்றவற்றை ஒரு நாளைக்கு ஒருமுறையாவது மேற்கொள்வது போன்றவற்றைக் குறிக்கிறது. இப்படி தினமும் ஒருவர் பின்பற்றி வந்தால், பற்களில் உள்ள நிக்கோட்டின் கறைகள் விரைவில் நீங்குவதோடு, அனைத்து வகையான கறைகளும் பற்களில் இருந்து நீங்கிவிடும்.

எப்போது பற்களில் கறைகள் படிகிறது என்றால், பற்கள் மென்மையின்றி சொரசொரப்பாக இருக்கும் போது தான். ஆகவே பற்களின் மேற்பரப்பை எப்போதும் மென்மையாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு தினமும் காலையில் மற்றும் இரவு தூங்கும் முன் பற்களைத் துலக்க வேண்டும். இது தவிர, எதைச் சாப்பிட்ட பின்னரும், வாயை வெதுவெதுப்பான உப்பு நீரால் கொப்பளிப்பது மிகவும் நல்லது.

பற்களை வெள்ளையாக வைத்துக் கொள்ள வேண்டுமானால், பற்களில் எந்த வகையான துவாரமும் இருக்கக் கூடாது. வாயில் பற்றீரியா இல்லாமல் இருந்தால், பற்கள் எப்போதும் பளிச்சென்று வெள்ளையாக இருக்கும்.

பேக்கிங் சோடா பற்களில் உள்ள கறைகளை நீக்க உதவும் அற்புதமான பொருள். பற்களைத் துலக்கிய பின், சிறிது பேக்கிங் சோடாவால் பற்களைத் தேய்த்து வாயைக் கொப்பளிக்க வேண்டும். இப்படி அவ்வப்போது செய்து வந்தால், பற்களில் உள்ள அசிங்கமான கறைகள் நீங்கி, பற்கள் வெள்ளையாக மாற ஆரம்பிக்கும்.

கரட் பற்களில் உள்ள கறைகளைப் போக்க உதவும். ஏனெனில் இதில் நார்ச்சத்து உள்ளது. இது பற்களை முறையாக சுத்தம் செய்யும். மேலும் இது பற்களின் மூலை முடுக்குகளில் உள்ள அழுக்கை விரைவில் நீக்க உதவும்.

ஆறுபத்து நாலடி கம்பத்தில் ஏறி ஆடினாலும் அடியில் இறங்கித் தான் யாசகம் பெறவேண்டும். என்று ஒரு பழமொழி சொல்வார்கள். இது இப்போது நம் நாட்டின் விவசாய நடவடிக்கைகளின் செயற்பாடுகளுக்கு மிகப் பொருத்தமாக உள்ளது - அதாவது எத்தனை இயற்கைக்கு மீறிய செயற்கையை நாம் கொண்டு வந்தாலும் இயற்கை இல்லை எனில் அந்த செயற்கையில் வேலை இல்லை என்பதை நாம் உணர வேண்டும்.

இலங்கை ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ அண்மையில் இலங்கை விவசாயிகள் அனைவரும் இயற்கை வளமாக்கி பாவனைக்கு மாற வேண்டும் என்றும் எமது ஆரோக்கியம் மற்றும் எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியம் என்பன நமது உணவு உற்பத்தி செய்யும் முறையிலேயே தங்கி இருக்கின்றது என்றும் கூறி புதிய விவசாய நடைமுறையை நாட்டில் கொண்டு வந்தார். இதற்கு பல தரப்பட்டவர்கள் ஆதரவு வழங்கினாலும் பெரும்பாலனவர்கள் தமது எதிர்ப்பை காட்டிட தவறவில்லை. அந்த எதிர்ப்புகளை சமாளிக்க முடியாமல் மீண்டும் எல்லாவற்றையும் திறந்துவிட்டதாக செய்திகள் வெளியாகின.

அதுமட்டுமல்லாமல் தனியாரே இரசாயன உரங்களை இறக்கலாம் - அவர்களே அதற்கான விலையினை நிர்ணயமும் செய்யலாம் - அரசு அதில் தலையிடாது என்ற அறிவிப்பும் வெளியாகியது. இதனை அடுத்து சாதாரண பாமர விவசாயிகள் உட்பட பெரும்பாலானோர் ‘இனி என்ன, தேவையான அளவு உரம் கிடைக்கும். விவசாயம் செழிக்கும்’ என்றெல்லாம் கனவுகாண ஆரம்பித்துவிட்டனர். அதேவேளை இயற்கை விவசாய ஆர்வலர்களும் மண்ணையும் சூழலையும் நேசிப்பவர்களும் அரசு பாரிய தவறிழைத்துவிட்டது என தலையில் கைவைத்தபடி அமர்ந்துவிட்டனர்.



ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

பெரும்பாலானவர்களின் எதிர்ப்புகள் மற்றும் அழுத்தங்களால் அரசு இயற்கை விவசாயம் நோக்கிய தனது முடிவை மாற்றியதாக வெளியில் காட்டிக்கொண்டாலும் உண்மை அவ்வாறானதல்ல. தனியார் நிறுவனங்கள் இறக்குமதி செய்து விற்கவுள்ள இரசாயன உரங்கள் எதற்கும் அரசு மானியம் எதுவும் கொடுக்கப் போவதில்லை என்பதோடு கட்டுப்பாட்டு விலை எதுவும் இருக்கப்போவதில்லை.

அதுமட்டுமல்லாமல், இலங்கை அரசு தனது நோக்கில் குறியாக உள்ளது என்பதை இயற்கை உரங்களுக்கு மானியம் வழங்கும் முறையை அமுல்படுத்தியதோடு இரசாயன உரங்களுக்கான மானியங்களை நிறுத்தியதில் இருந்து நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது. இரசாயன உரங்களை தனியார்வசமாக மாற்றி இருப்பதில் அரசியல் இருக்கின்றதோ இல்லையோ ஆனால் முக்கிய விடயம் பொதிந்து இருப்பதை நாம் மறுக்க முடியாது.

இதுவரை இயற்கை முறை விவசாயத்தில் உற்பத்தியாகும் மரக்கறிகளை, பழங்களை, தானியங்களை இன்னோரன்ன அனைத்தையும் 50 - 100 ரூபா வரை அதிக விலை கொடுத்தே வாங்கினோம். இயற்கை வளமாக்கிகள் மூலம் உற்பத்தியாகும் உணவுகளை உண்பவர்கள் பணக்காரர்கள் என்று பேசிக்கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆனால் இனி தனியார்வசமாகி இருக்கும் இரசாயன உர இறக்குமதியில் தான் வைப்பதுதான் சட்டம் என்ற வகையில் இரசாயன உரங்கள் விலையேற்றம் பெறும். அத்தோடு இவ்வளவு காலமும் அரசாங்கம் வழங்கிவந்த இரசாயன உரத்திற்கான மானியமும் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் இரசாயன உரத்தினை அரைவிலை, கால்விலைக்கே பெரும்பாலான விவசாயிகள் கொள்வனவு செய்திருந்தனர்.



**சி.அனுராஜ்**
**(இயற்கை விவசாயி)**

இன்றைய இந்த அரசின் கொள்கை மாற்றத்தால் இரசாயன உரம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி, தானியங்கள், பழங்களின் விலையும் உயரும். இவ்வளவு காலமும் இயற்கை உரங்கள் மூலம் நாம் உற்பத்தி செய்த விவசாய உற்பத்திகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்து இதுவரை வாங்கினோமோ அதே பணத்தை அல்லது அதைவிட அதிகமான பணத்தை கொடுத்துத்தான் இனி வரும் காலங்களில் இரசாயன உரங்கள் மூலம் உற்பத்தி செய்யும் விவசாய பொருள்களையும் வாங்கப்போகின்றோம்.

இவ்வாறான சூழலில் இயற்கை வழியிலான உற்பத்திப் பொருள்கள் மீதான மக்களின் நுகர்வு அதிகரிக்கும் என்பதில் மாற்றம் இல்லை. ஒரே பணப் பெறுமதியில் உடலும் ஆரோக்கியமாகும் பொருள்கள் கிடைக்கும்போது இயற்கை உற்பத்திகள் நோக்கிய மக்களின் மாற்றத்தை அரசு எதிர்பார்க்கிறதோ இல்லையோ நாம் எதிர்பார்க்கின்றோம்.

கூட்டி கழித்துப் பார்த்தால் கையும் கணக்கும் சரி என்கின்ற நிலை வரும்போது மக்கள் இயற்கை முறை உற்பத்திகளை அதிகளவுக்கு விரும்பும் போது உற்பத்தியாளர்களும் விரும்பியோ விரும்பாமலோ இயற்கை விவசாய முறைக்கு மாறியே ஆவேண்டும். அத்தோடு இயற்கை உரங்கள் மற்றும் உள்ளீடுகளுக்கான உற்பத்திகளை ஆரம்பிப்போருக்கான மானியத்திட்டங்களையும் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது இரட்டிப்பு மகிழ்ச்சி. இவை எல்லாம் இந்த அரசினால் திட்டமிட்டு நடாத்தப்படுகிறதா அல்லது தற்செயலானதா என்பதற்கப்பால் நன்மையே நடந்திருக்கிறது. இயற்கை விவசாயம் மற்றும் உரக் கொள்கையில் தற்போதுள்ள அரசின் இந்த நிலை தொடருமானால் நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஆரோக்கியமான ஒரு எதிர்காலம் காத்திருக்கிறது.

இயற்கை விவசாயம் என்பது மண்ணையும் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும் ஒரு முக்கிய விடயம். இரசாயன பசளைகளை இலங்கையில் உற்பத்தி செய்ய எடுக்கும் முயற்சிகள் பலன் தருமோ இல்லையோ - ஆனால் இயற்கை பசளைகளை இலங்கையில் உற்பத்தி செய்து வளமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் சிரமம் அல்ல.

இயற்கை விவசாயம் என்பது தெற்கிற்கு வேண்டுமெனில் புதிதாக இருக்கலாம், ஆனால் வடக்கு கிழக்கு மக்களை பொறுத்தவரை இயற்கை முறையிலான விவசாயம் ஒரு பெரும் பாதிப்பு அல்ல. அதே போல ஒரு பெரும் சுமையும் அல்ல இதை வடக்கு கிழக்கு மக்கள் நன்கு அறிந்திருக்கின்றனர்.

வடக்கு மக்களை பொறுத்தவரையில் இது ஒன்றும் ஆரவாரிக்கும் விடயம் அல்ல என்பதுபோல அவர்கள் மீண்டும் இயற்கைக்கு திரும்பி இருப்பதை அவதானிக்க முடிகிறது.

1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கு மக்கள் இயற்கை வழியிலேயே தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்தமை யாவரும் அறிந்த விடயம். அந்த காலம் அனைத்துப் பொருள்களையும் பெறுவதில் மிகுந்த நெருக்கடியை நாம் எதிர்கொண்டோம். தம்புள்ளை மரக்கறிகளை நாம் அறிய மாட்டோம். தெற்கில் இருந்து வரும் பழங்களையோ, தானியங்களையோ நாம் கண்டும் இருக்க மாட்டோம். அவ்வாறன இரசாயன உரங்கள் மூலம் வெளியில் இருந்து எமது பகுதிக்கு வந்த உணவுப்பொருள்கள் பணக்காரர்களின் உணவுத்தட்டுக்களில் மாத்திரமே காணப்பட்டன. ஆனால் நாம் பட்டினி சாவை எதிர்கொள்ளவும் இல்லை - பட்டினியால் சாகவும் இல்லை. உரங்களின் இரசாயனத்தால் தொற்றா நோய்கள் உடலில் ஏற்படவும் இல்லை. அதேபோல வடக்கு மக்கள் தமது வாழ்க் கைக்குத் தேவையான பொருள்களை இயன்றவரை தாமாகவே உற்பத்தியாக்கி தமக்கான ஓர் பொருளா தாரத்தை உருவாக்கிக் கொள்தல் தற்போது அவசிய மானதாக உள்ளது.

> பெரும்பாலானவர்களின் எதிர்ப்புகள் மற்றும் அழுத்தங்களால் அரசு இயற்கை விவசாயம் நோக்கிய தனது முடிவை மாற்றியதாக வெளியில் காட்டிக்கொண்டாலும் உண்மை அவ்வாறானதல்ல.


மக்கள் உணவு உற்பத்தியில் ஆர்வமும் உற்சாகமும் உள்ளவர்களாகவே உள்ளனர். பல அத்தியாவசியமான பொருள்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன, எல்லா நாடுகளும் சமச்சீராக வளங்களைப் பயன்படுத்தும் தன்மை இருந்திருந்தால் அவற்றின் பொருளாதார வளர்ச்சியும் சமச்சீராக அமைந்திருக்கும். ஆனால் அது சாத்தியமான விடயம் இல்லை ஆனால் இரசாயன உரங்களை மண்ணில் தூவி காலகாலத்துக்கும் மண்ணை நாம் சீர் கெட செய்யாமல் இயற்கை உரங்களை மண்ணில் தூவி வரும் காலத்தையும் ஆரோக்கியமான காலமாக மாற்ற நாம் முயற்சி எடுத்தே ஆகவேண்டும் .

அதற்கான முயற்சியை விவசாயிகள் மட்டும்தான் எடுக்கவேண்டும் என்றில்லை. நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் உள்ள சிறிய இடத்தில்கூட நமக்கான ஒரு வீட்டுத்தோட்டத்தினை அமைத்து இயற்கை முறையில் பராமரிப்பதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதோடு அடுத்த சந்ததிக்கு நஞ்சற்ற நிலத்தினை விட்டுச்செல்வோம்.

# கலைக் கதிர்



# மீனவத்தாயின் துயரம்



பள்ளி செல்ல வழியும் இல்ல
பாதியில் படிப்பும் இல்ல
பாவி நான் பெத்த புள்ள
படகோட்டி ஆனானோ!

பிஞ்சு விரல் சிவசிவக்க,
வெந்த மண்ணில் நடநடக்க,
களைக்கம்பு தோள்த் தூக்கி
கறுவண்டு போனதம்மா!

உப்புத்தண்ணி உரமாக்கி
ஊட்டி வளக்க பெத்தேனோ!
ஊருக்காக உன்ன மட்டும்
காட்டி வளக்க பெத்தேனோ!

விடியாத வேளையில்
வேகமாய் போனாயே.
ஓடமெல்லாம் வந்து சேந்தும்,
ஒத்த மரம் வரலையே!

நாள் சேதி நான் அறிஞ்சு,
நாளை வரக் காத்திருந்தேன்.
நாட்கள் பல குட்டிப்போட்டு
நாளிகையை நீட்டியது.

கடல் தண்ணி கண்ணுக்குள்ள
கரப்பானா அரிக்கிறதே!
கடைசி மூச்சு காதறுந்து
காலடியில் விழுவதற்கா!

முச்சந்தி வாசலில்
முக்காடு போட்டபடி,
உயிர் உள்ள ஒரு முண்டம்
ஊனமாய் கிடக்குதப்பா.

வலைவீசி தேடியும்
வராத மகனுக்கு,
வாய்க்கரிசி போடத்தான்,
வாட்டமா நிக்கிறேனோ!!!

முடிவில்லா முற்றுப்புள்ளி .
முதற்பக்க தலைப்புச்செய்தி,
கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று
காணாமல் போன சிறுவன்
பிணமாக மீட்பு.

செல்வி: சுருதி ரகுபதி

# இலங்கை நாவல் இலக்கிய வரலாற்றில் தனியிடம் பெற்ற பாலேஸ்வரி



இலங்கை நாவல் இலக்கிய வரலாற்றில் தனக்கென தனி இடத்தை தக்கவைத்துக் கொண்டவர் ந.பாலேஸ்வரி. திருகோணமலை மனையாவழி கிராமத்தில் 07/12/1929 இல் பிறந்த இவர் அந் நாள்களில் மித்திரன், ஜோதி, தினகரன், ஈழநாடு, கல்கி, குங்குமம், உமா, தமிழ்ப்பாவை, சுடர், சிரித்திரன், கவிதை உறவு, தமிழ்மலர், ஒற்றைப் பனை, திருகோணமலை எழுத்தாளர் சங்கம் மலர், சுதந்திரன் போன்ற பல அச்சு ஊடகங்களில் சிறுகதை, நாவல், கட்டுரை என எழுதிவந்தவர். இன்றுவரை அவரை நாவல் ஆசிரியராகவே அனைவருக்கும் தெரியும். இவரின் எழுத்தில் லக்ஸ்மி, ரமணிச்சந்திரன் போன்றோரின் சாயல் காணப்படும். அவர் சிறந்த பேச்சாளர்.

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற இவர் திருகோணமலை சிறி சண்முகவித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, திருகோணமலை புனித மரியாள் கல்லூரியிலும் கல்வியைப் பெற்றார். இவரின் தொடர்ந்த இலக்கியப் பயணம் இவருக்கு தமிழ்மணி, சிறுகதைச் சிற்பி, ஆளுனர் விருது, கலாபூசணவிருது ஆகியவற்றுடன், 2010இல் மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய 'தமிழியல் விருது' குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அமைதியாகவும், துணிச்சலாகவும் எழுதிய பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்க இடத்தை தக்கவைத்துக் கொண்டார். இவரின் நூல்களாக சுடர்விளக்கு, பூஜைக்கு வந்த மலர், உறவுக்கப்பால், கோவும் கோயிலும், உள்ளக் கோயிலில், உள்ளத்தினுள்ளே, பிராயச்சித்தம், மாது என்னை மன்னித்து விடு, எங்கே நீயோ அங்கே நானும் உன்னோடு, அகிலா உனக்காக, தத்தை விடு தூது, நினைவு நீங்காதது, சுமைதாங்கி, தெய்வம் பேசுவதில்லை என வெளிவந்துள்ளன. இதில் பூஜைக்கு வந்த மலர் குறுகிய காலத்துள் மீள்பிரசுரம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. தனது அனுபவ வெளிப்பாடுகளை கதையாகத் தந்திருக்கிறார். வாழ்வின் பல்வேறு கூறுகளை ஜனரஞ்சகமாக எழுதுவதிலும் வெற்றிகளைக் குவித்தவர். பல இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதிலும் ஆர்வம் காட்டினார். மொழி ஆர்வமுள்ள மாணவர்களையும் செயல்பாட்டாளர்களாக்கினார்.

எழுத்துத்துலகில் தடம் பதித்த ந. பாலேஸ்வரி 27/02/2014 அன்று இறைவனடி சேர்ந்தார். இருப்பினும் கனத்த பொழுதுகளைச் சுமந்து செல்லும் காலம் அவர் விட்டு சென்ற நட்பையும், படைப்பையும் மனங்கள் சுமந்தபடி செல்லவே செய்யும்.

● க.மங்களேஸ்வரி

# களவாடிய கள்ளியவள்



என் கன்னிக் கவிதையை
ஒரு கன்னி களவாடினாள்..
மைக்கூந்தல் வீதி கூட்டும்
நங்கை அவள் நடந்தால்,

மாங்குயிலும் பாட்டிசைக்கும்
மங்கையவள் சிரித்தால்
செந்தமிழ் ததும்பும் வாயாலே
வார்த்தை சொன்னாலே
கவிக்கோனும் வாயடைப்பான்!

அவள் கயல்விழியை பார்த்தாலே
இமை மோதி காயமுறும்,
கழுத்தில் வழியும் வேர்வை
சுவைக்க நா ஒன்று காத்திருக்கும்,

இளந்தேக்கு நிற இடை கண்டால்
இமயம் கூட சரிந்து விழும்,
நாண முகம் காண நாளெல்லாம்
காத்திருந்து கவி படைத்தேன்,

கள்ளியவள் களவாடிச்சென்றாள்
தனக்கான கவியை...

- மிதுன் -

# என் கற்பனை வானிலே

வெள்ளி வானத்து மேகங்களை
வேல் கொண்டு பிளந்தேன்

காற்றில் கலந்து வந்த கானத்தை
கைகளால் பிடித்து இசைமீட்டினேன்

முன்னொரு கால் இருந்ததைப்போல
முற்றும் துறந்த புத்தனை கண்டேன்

இழந்து போன என் தேசத்தை
இலங்கையின் ஒரு பாகமாய் கண்டேன்

இந்த நாட்டின் பிள்ளைகளை எல்லாம்
இறுக பற்றிய கரங்களோடு கண்டேன்

மூன்று நிமிட நேரத்தில்
முன்னூறு தேசங்கள் பறந்தேன்

ஆசை கொண்டு என் தேசத்து மண்ணை
அள்ளி அணைத்து நிம்மதி மூச்சிறைத்தேன்

பேசும்வார்த்தைகளுக்கு இங்குசிறையுமில்லை
போரின் பெயரில் கொலைகளுமில்லை

காரணமில்லா கைதுகளுமில்லை
கைகட்டி நிற்கும் கட்டுப்பாடுகளுமில்லை

எத்தனை சுதந்திரமானவைகள்
எல்லாவற்றையும் சாத்தியமாக்கும்
என் கண்கள் காணும் கற்பனைகள்

● சம்பூர் தமிழ்க் கிறுக்கன்

# கல்விக்கதிர்





# பரீட்சை என்றால் பதற்றமா?

## ஒருபோதும் அது உங்களுக்கு வேண்டாம்

பரீட்சை பதற்றம் என்பது ஒரு வகை செயல் திறன் கவலை, இதில் தோல்வி பயம் ஒரு பரீட்சை சூழ்நிலையில் சிறப்பாக செயல்படுவதற்கான உங்கள் திறனைக் குறுக்கிடும் அறிகுறிகளுக்கு பங்களிக்கிறது. ஒரு சோதனைக்கு முன், யார் வேண்டுமானாலும் கொஞ்சம் கவலையாக உணர முடியும்.

கடுமையான பரீட்சை கவலையை நீங்கள் சந்தித்தால், உங்களுக்கு தலைவலி, குமட்டல், வயிற்றுப்போக்கு, மூச்சுத் திணறல், மற்றும் லேசான தலைவலி போன்ற உடல் அறிகுறிகள் இருக்கலாம். உங்களுக்கு ஒரு பீதி கூட ஏற்படக்கூடும், இதன் போது நீங்கள் சுவாசிப்பது கடினம் என்று உணரலாம் அல்லது உங்களுக்கு மாரடைப்பு இருப்பதாக நீங்கள் நினைக்கலாம். கோபம், பயம் மற்றும் உதவியற்ற தன்மை போன்ற உணர்வுகள் பரீட்சை பதற்றத்தின் மற்ற அறிகுறிகளாகும், அவை எதிர்மறையாக சிந்தித்து உங்களை மற்றவர்களுடன் ஒப்பிடுகின்றன.

பரீட்சை கவலையை நீங்கள் அனுபவித்தால், நீங்கள் அவற்றை சமாளிக்க பல உத்திகள் உள்ளன. நீங்கள் சமாளிக்க உதவும் 10 உதவிக்குறிப்புகள் இங்கு தரப்படுகின்றன.

**நன்றாக தயார் ஆகுங்கள்**

நீங்கள் ஒரு பரீட்சைக்கு நன்கு தயாராக இருக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துவது உங்கள் மனதை நிம்மதியடையச் செய்து, பரீட்சை நாள் வரும்போது நீங்கள் உணரக்கூடிய கவலையிலிருந்து விடுபட உதவும். ஒரு பரீட்சை அல்லது பரீட்சைக்கு தயாராவது உங்கள் கவலையை அதிகரிக்கும்.

அதற்குப் பதிலாக, எல்லா விடயங்களையும் நன்றாகக் கற்றுக்கொள்வதற்கான சிறந்த வாய்ப்பை வழங்க இந்த வழக்கத்தைப் பின்பற்றுங்கள்:-

1. தவறாமல் படிக்கும் நண்பர்களிடம் ஆலோசனை கேட்கவும்.
2. ஒரு ஆய்வுக் குழுவில் சேரவும்.
3. படிப்பு திறன் பற்றிய புத்தகங்களைப் படியுங்கள்.
4. ஒரு படிப்பு திறன் ஆசிரியரைக் கண்டறியவும்.

இறுதியாக, சோதனை அல்லது பரீட்சை பற்றி உங்களால் முடிந்த அனைத்தையும் முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள். கேள்விகளின் வகைகளை அறிந்து கொள்வதும் அவை பல தேர்வு அல்லது கட்டுரை என்பதும் கடைசி நிமிட ஆச்சரியங்கள் எதுவும் இல்லை என்பதை உறுதிப்படுத்த உதவும்.

பரீட்சை பதற்றம் காரணமாக செயல்திறன் பாதிக்கப்படும்போது, எதிர்மறை சிந்தனையின் கீழ்நோக்கிச் செல்வது எளிதானது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று பாருங்கள் மற்றும் எதிர்மறை எண்ணங்களை நேர்மறையானவற்றுடன் நீங்கள் மாற்ற வேண்டும் உங்கள் எண்ணங்கள் எவ்வளவு பகுத்தறிவுடையவை என்பதையும், நீங்களே சொல்லக்கூடிய சிறந்த விடயங்கள் உள்ளனவா என்பதையும் கவனியுங்கள்.

பின்வருபவை போன்ற எண்ணங்கள் உதவாது

1. நான் இன்னும் படித்திருக்க வேண்டும்.
2. நான் முட்டாள் ஆக வேண்டும்.
3. நான் நன்றாக செய்ய வேண்டும் எல்லாம் வரிசையில் உள்ளன.
4. நீங்களே சொல்லுங்கள், நிறுத்து மற்றும் மாற்று வழிகளைக் கொண்டு வாருங்கள்.
5. இந்த சோதனைக்கு நான் தயாராக இருக்கிறேன்.
6. நான் நன்றாக செய்ய போதுமான புத்திசாலி.
7. நான் நன்றாகச் செய்யாவிட்டாலும், அது உலகின் முடிவு அல்ல.
8. வெற்றியைக் காட்சிப்படுத்துங்கள்.
9. உயரடுக்கு விளையாட்டு வீரர்கள் தங்களை போட்டியில் வெற்றி பெறுவதை காட்சிப்படுத்துகிறார்கள்.
10. சோதனை கவலையை சமாளிக்க நீங்கள் இதைச் செய்யலாம்.
11. படிக்கும் போது, தேர்வில் நம்பிக்கையுடனும், தெளிவான தன்மையுடனும் இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். சோதனையில் நீங்கள் சிறப்பாக செயல்படுவதைக் காண்பது நிஜ வாழ்க்கையில் அதைச் செய்ய உதவும்.



**தளர்வு உத்திகளைப் பயன்படுத்துங்கள்**

ஆழ்ந்த சுவாசம், முற்போக்கான தசை தளர்வு (பி.எம்.ஆர்.) மற்றும் வழிகாட்டப்பட்ட படங்கள் போன்ற தளர்வு உத்திகளைப் பயன்படுத்துங்கள். பரீட்சைக்கு முந்தைய வாரங்களில் இந்த உத்திகளைப் பயன்படுத்தவும், சோதனை சூழ்நிலையில் தேவைக்கேற்ப பயன்படுத்தவும்.

**ஆரோக்கியமாக இருங்கள்**

பல சோதனைகள் அல்லது தேர்வுகளை எதிர்கொள்ளும்போது, உங்கள் உடல் ஆரோக்கியத்தை புறக்கணிக்க ஆரம்பிக்கலாம். இந்த வலையில் விழாதே!

வழக்கமான உடற்பயிற்சி, போதுமான தூக்கம் மற்றும் நல்ல ஊட்டச்சத்து ஆகியவை ஒரு வாழ்க்கை முறையின் முக்கியமான கூறுகள், அவை மன அழுத்தத்தை குறைந்தபட்சமாக வைத்திருக்கும்.

ஒரு பரீட்சையின் நாள், போதுமான காலை உணவை சாப்பிடுவதையும், அதிகப்படியான காபின் தவிர்ப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், ஏனெனில் இது பதற்றத்திற்கு மட்டுமே பங்களிக்கும்.

**சீக்கிரம் வந்து சேருங்கள்**

ஒரு பரீட்சைக்கு விரைந்து செல்வது போன்ற உணர்வை எதுவும் உயர்த்தாது. குறைந்தது 10 நிமிடங்கள் முன்னதாக வந்து சேருங்கள். பரீட்சை தொடங்குவதற்கு காத்திருப்பது உங்களை பதற்றப்படுத்துகிறது என்றால், உங்கள் மனதை ஆக்கிரமிக்க ஒரு பத்திரிகை அல்லது பிற திசைதிருப்பலைக் கொண்டு வாருங்கள். ஒரு பரீட்சைக்கு முன் ஆர்வமுள்ளவர்களுடன் தொடர்புகொள்வதைத் தவிர்க்கவும்.

**பரீட்சையின் போது கவனம் செலுத்துங்கள்**

சோதனையின் போது, கவனத்தைத் தக்கவைக்க உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள். நீங்கள் கவலைப்படுவதைக் கண்டால், நிறுத்தி மீண்டும் ஒருங்கிணைக்கவும். உங்கள் பென்சிலைக் கூர்மைப்படுத்துங்கள், ஒரு கேள்வியைக் கேளுங்கள் அல்லது ஆழ்ந்த மூச்சை எடுப்பதில் கவனம் செலுத்துங்கள்.

உங்கள் நேரத்தை எடுத்துக்கொள்வதை நினைவில் கொள்ளுங்கள், ஆனால் உங்கள் கடிகாரத்தை சரிபார்க்கவும். பரீட்சையைத் தொடங்குவதற்கு முன், விரைவான மதிப்பாய்வு செய்து இரண்டு முறை திசைகளைப் படிக்கவும். முதலில் எளிதான கேள்விகளுடன் தொடங்கவும்.

**ஒரு சிறிய கவலையை ஏற்றுக்கொள்ளுங்கள்**

ஒரு சோதனைக்கு முன் கொஞ்சம் கவலைப்படுவது ஒரு நல்ல விடயம் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் பதற்றமாக உணரவில்லை என்றால், உங்கள் சிறந்ததைச் செய்ய நீங்கள் தூண்டப்படக்கூடாது. பதற்றம் நிர்வகிக்க முடியாததாக மாறும்போதுதான் அது ஒரு பிரச்சினையாக மாறும்.

**பின்னடைவுகளை எதிர்பார்க்கலாம்**

உங்களுக்கு ஒரு மோசமான அனுபவம் இருந்தால், நீங்கள் எதிர்பார்த்ததை விட குறைவான தரத்தைப் பெற்றால், வழியில் எப்போதும் வீதித் தடைகள் இருக்கும் என்பதை நீங்களே நினைவுபடுத்துங்கள். அடுத்த முறை சிறந்த பெறுபேறுக்கு திட்டமிடுங்கள், ஒரு மோசமான சோதனை முடிவு எதிர்காலத்தில் நீங்கள் மேம்படுத்த முடியாது என்று அர்த்தமல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**நீங்களே வெகுமதி**

பரீட்சைக்குப் பிறகு உங்களுக்காக ஒரு வெகுமதியைத் திட்டமிடுங்கள். உங்கள் மனதை நிதானமாக வைக்க சிறிது நேரம் ஒதுக்குங்கள். நீங்கள் செய்த தவறுகளில் குந்தி வேண்டாம் அல்லது நீங்கள் எப்படி செய்தீர்கள் என்று கவலைப்பட வேண்டாம். முடிந்த வரை, மற்றொரு பரீட்சைக்கு படிக்கத் தொடங்குவதற்கு முன் உங்களுக்கு ஒரு இடைவெளி கொடுங்கள்.

# உலகமயமாதல் என்றால் என்ன?




ஒரு உதாரணத்திற்கு,உநம் கைபேசியை எடுத்துக் கொள்வோம். நாம் பயன்படுத்துவது ஏதாவது ஒரு கைபேசியாக இருக்கலாம்

இலங்கையில் வசிக்கும் நாம் சீனாவில் தயாரிக்கப்பட்ட ஒரு கைபேசியை அமெரிக்க நிறுவனம் ஒன்றின் மூலம் வாங்கி அதில் இங்கிலாந்து நாட்டின் நிறுவனம் தயாரித்த சிம் கார்ட் போட்டு நேற்று காலை நியூசிலாந்தில் நடைபெற்ற ஒரு கிரிக்கெட் போட்டியின் நேரலையை சுவிஸ் நாட்டின் நிறுவனமான நெஸ்லே - இன் மகியை சாப்பிட்டு கொண்டே பார்க்கிறோம்.

பல்வேறு நாடுகளில் உள்ள பலர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உருவாக்கி, தயாரித்த பொருள்களையும் மற்றும் அவர்கள் வழங்கும் சேவைகளையும் பயன்படுத்திக் கொள்ள இன்று எம்மால் முடிகிறது. இது சாத்தியமாகக் காரணம் உலகமயமாக்கல்.

உலக நாடுகளுக்கிடையேயான மக்கள், பொருள்கள் மற்றும் சேவைகளின் இயக்கம், பரி மாற்றம் மற்றும் இதனால் உருவாகும் வாழ்க்கைச் சூழலை உலகமயமாக்கல் என்று சொல் லலாம்.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்




முன்னொரு காலத்தில் ஒரு உப்பு வியாபாரி இருந்தான். அவன் தினந்தோறும் ஒரு கழுதையின் மீது உப்பு மூடைகளை ஏற்றி ஊருக்குள் போய் வியாபாரம் செய்து வருவான். போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடந்துதான் ஊருக்குள் போக வேண்டும்.

ஒரு நாள் உப்பு வியாபாரி வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூடைகளை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். வழியில் உள்ள ஆற்றை கழுதை கடந்த போது எதிர்பாராமல் கழுதையின் கால்கள் வழுக்கிவிட்டன. எனவே, கழுதை தடுமாறி ஆற்றுக்குள் விழுந்து விட்டது.

கழுதை தவறி விழுந்ததால் அதன் முதுகில் இருந்த உப்பு மூடை நனைந்து விட்டது. கழுதையை வியாபாரி மெல்ல தூக்கிவிட்டான். ஆனால், நீரில் மூழ்கியதால் உப்பு மூடை நனைந்தது அல்லவா? அது ஒரு சில நிமிடத்தில் அப்படியே, தண்ணீரில் கரைந்து பாதி மூடையாகிவிட்டது.

எனவே, கழுதை முதுகில் இருந்த உப்பு மூடை வெறும் சாக்குப் போல எடையில்லாதபடி ஆகிவிட்டது. ஆஹா என்ன ஆச்சரியம் இப்போது கழுதை முதுகில் சுமையே தெரியவில்லை.

கழுதைக்கு மிகுந்த சந்தோம். ஆனால் வியாபாரிக்கு பெரிய நஷ்டம். உப்பு வியாபாரியும் உப்பு வியாபாரம் செய்ய வழியில்லாமல் கழுதையை ஓட்டிக் கொண்டு வீட்டிற்கு திரும்பினான்.

மறுநாளும் வழக்கம் போல வியாபாரி உப்பு வியாபாரத்திற்கு கிளம்பினான். கழுதை முதுகில் இருந்த உப்பு மூடை கழுதைக்கு கனமாக இருந்தது. கழுதை மெல்ல நடந்து ஆற்றுப் பாலம் அருகே வந்தது. திடீரென அதற்கு முந்தைய நாள் நினைவு வந்தது. எனவே, மெல்ல தடுமாறுவது போல செய்து சட்டென்று ஆற்றுக்குள் விழுந்தது.

அடுத்த நிமிடம் கழுதை முதுகில் இருந்த உப்பு மூடை நீரில் கரைந்து விட்டது. இன்றும் கழுதைக்கு முதுகில் சுமை இல்லாது போய்விட்டது.

கழுதை தனது தந்திரத்தால் தொடர்ந்து இதையே செய்து வந்தது. இதனால் தினமும் வியாபாரத்திற்குப் போக முடியாமல் வியாபாரி தொடர்ந்து சிரமப்பட்டான்.

ஒரு நாள் வியாபாரி வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூடைகளை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். செல்லும் வழியில் கழுதை கொண்டுவருகின்ற உப்பு எப்படி காணாமல் போகின்றன என்று யோசித்துக்கொண்டே கழுதையின் நடவடிக்கைகளை கவனித்தான்.

கழுதை வேண்டுமென்றே ஆற்றுக்குள் விழுந்தது. அவனுக்கு மெல்ல மெல்ல கழுதையின் தந்திரம் புரிய ஆரம்பித்தது. எனவே, அதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான்.

அன்று கழுதை முதுகில் வழக்கம் போல உப்பு மூடையை ஏற்றவில்லை வியாபாரி. மாறாக, பஞ்சு நிறைந்த ஒரு சாக்கு மூடையை கழுதை முதுகில் ஏற்றினான். கழுதை வழக்கம் போல ஆற்று பாலத்தின் அருகே வந்தது. எதிர்பாராமல் கால் தடுமாறுவது போல தடுமாறி ஆற்றிற்குள் விழுந்தது.

மூடையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது. அடக் கஷ்டமே! கழுதையின் முதுகில் இருந்த பஞ்சு மூடை முன்பைவிட அதிகமாக கனத்தது. கழுதையும் மிகவும் கஷ்டப்பட்டு ஆற்றைக் கடந்து கரைக்கு வந்து சேர்ந்தது.

தனது ஏமாற்று வேலை இவ்வளவு நாள் தன்னைக் காப்பாற்றி வந்த வியாபாரிக்குத் தெரிந்து விட்டதை எண்ணி வெட்கப்பட்டது. இனி நேர்மையாக நடக்க முடிவெடுத்தது.

நீதி: நாமும். நம்மை நம்பியவர், நம்பாதவர் யாரையும் ஏமாற்றக் கூடாது. அப்படி செய்தால் ஒரு நாள் நம் செயல் அவர்களுக்குத் தெரியவரும். அன்று அவமானம் அடையும் நிலை வரும். அதற்கான தண்டனையும் நமக்குக் கிடைக்கும்.

## சிறுவர் பாடல்

பள்ளிக் கூடம் போகலாமே
சின்ன பாப்பா - நிறைய
பிள்ளைகளோட பழகலாமே
சின்ன பாப்பா!

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்ன பாப்பா - கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சி
சின்ன பாப்பா - உனக்கு
நல்ல நேரம் பிறந்தாச்சி
சின்ன பாப்பா!

வீட்டுச் செய்தி கதைகள் பேசி
பொழுது போக்கலாம் - அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும் வளர்வதற்கு
சின்ன பாப்பா - ஏற்ற
இடமே இந்தப் பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் போகலாம் வா
சின்ன பாப்பா - நிறைய
பிள்ளைகளோட பழகலாம் வா
சின்ன பாப்பா!

## சிறந்த வர்ணத்துக்கு பரிசு தரும் எண்ணம்



கீழ்வரும் ஓவியத்துக்குப் பொருத்தமாக வர்ணம் தீட்டி அனுப்புங்கள் சிறந்த வர்ணம் தீட்டலுக்கு பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

**முகவரி - காலைக்கதிர், சிறுவர் பகுதி, இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்**

(ஒவ்வொரு வாரமும் உங்கள் படைப்புகளை அனுப்பி பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்.)

சிறுவர் ஆக்கங்களையும் மேலுள்ள முகவரிக்கு அனுப்பி வையுங்கள் சிறந்த ஆக்கங்களுக்கு பரிசுகளை நீங்கள் வெல்லலாம்.

# மானஸ்தி...

நேரம் காலை 11 மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. திருகோணமலை நகரம் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. நகரமத்தியிலிருந்த பேருந்து நிலையத்தில் பேருந்துப் போக்குவரத்து சூடு பிடித்திருந்தது. சுமார் நான்கு மாத பயணக் கட்டுப்பாட்டின் பின் இப்போது சில நாள்களின் முன்புதான் பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு போக்குவரத்துக்கள் சரளமாகப் போக ஆரம்பித்திருந்தன. இளவழகன் அவசர அவசரமாக ஓடிவந்து யாழ்ப்பாணம் போகின்ற பேருந்தில் ஏறினான். இவனது அவசரத்தைக் கண்ட பேருந்து நடத்துநர். சுமார் ஓர் நாற்பது வயது மதிக்கத்தக்க நபர் வாய்நிறைய வெத்திலையைக் குதப்பியபடியே வந்தவன் பேருந்து வாசலில் ஏறி நின்றபடி புளிச் என்று வாயிலிருந்த எச்சிலை வாசலில் துப்பியபடியே 'தம்பி' அந்த 11 மணி பஸ் போயிட்டுது அப்பு இனி 12.30 பஸ்தான் இருக்குது. அவசரமில்லை. நீர் ஆறுதலாக சீற்படியும் நிறைய சீற் கிடக்குது என்று கூறிக் கொண்டு பேருந்தில் ஏறி முன்பக்கத்தில் இருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து மீண்டும் நீரை வாயினுள் விட்டுக் கொப்பளித்துக் கொண்டே 'அண்ணே, சிவா அண்ணே வாங்கோ. ஒரு ரீ குடிச்சு ஏதாவது கடிச்சுப்போட்டு வருவோம்' என்று தனது சக உத்தியோகத்தரான பேருந்து ஓட்டுநரை அழைத்த படியே பேருந்து நிலைய வளாகத்திலுள்ள ஒரு தேநீர்க் கடையைத் தேடி நடக்க ஆரம்பித்தான். இளவழகனுக்கோ ஓ... அவரசப்பட்டு வந்தும் பஸ்ஸைத் தவறவிட்டுவிட்டேனே என்கிற பெருமூச்சுக் கலந்த ஏமாற்றம். சரி சரி இப்போ போய் நான் என்னதான் செய்யுறது. ஆறுதலாய்ப் போவம். சரி கொஞ்சநேரம் பஸ்ஸுக்க ஏறி இருந்து பேஸ்புக் பார்த்தால் நேரம் தானாகப் பறந்துடப் போகுது என எண்ணிக் கொண்டு ஏறி அமர்ந்தான். இங்கு இளவழகனைப் பற்றிச் சொல்லி ஆக வேண்டியது நமது கடமையல்லவா. இளவழகன் யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்தவன். தாய், தந்தைக்கு கடைக்குட்டி. அக்கா அறிவழகி. அண்ணா மதியழகன். அடுத்ததாக இளவழகன். தந்தையார் ஓர் தமிழாசிரியர், அம்மா எப்போதும் போல அம்மாதான். தந்தையின் தமிழ்ப் பற்று அழகான தமிழ்ப் பெயர்களைப் பிள்ளைகளுக்குச் சூட்ட வைத்தது. தந்தை சேனாதிராசா யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து அங்கேயே அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றவர். அக்காவுக்கு உறவுக்குள்ளேயே திருமணம் கேட்டு வர அப்பா தாமதிக்காமல் உடனடியாக திருமணத்தினை ஒப்பேற்றி வைத்துவிட்டார். அத்தான் மேகவண்ணன். வடமாகாண கல்வி வலயத்தில் சிறந்த உத்தியோகத்திலிருந்தார். அவர் ஓர் வணிகவியல் பட்டதாரி. அண்ணாவுக்கு அவன் விரும்பிய பெண்ணையே அப்பா சிறப்பாகத் திருமணம் செய்துவைத்தார். சேனாதிராசா தேவகி அம்மாளின் வளர்ப்போ என்னமோ பிள்ளைகள் சிறந்தவர்களாகவே இருந்தனர். கெட்ட பழக்கங்கள் என்று எதுவும் அவர்களிடம் அண்டவில்லை. அதற்குக் காரணம் அப்பாவின் பிரம்பின் மகிமையும் என்று சொன்னால் குறை ஏதும் இல்லை. அண்ணா ஒருமுறை A/L படிக்கும்போது நண்பர்களோடு சேர்ந்து இங்கிலீஷ் படம் பார்த்ததால் அப்பாவின் பிரம்பு ஆடிய நர்த்தனம் இன்றும் யாரும் மறந்துவிடவில்லை. அக்கா அப்பாவுக்கு என்றைக்குமே செல்லமகள் தான். இளவழகனுக்கு 29 வயதாகிறது. அரச உத்தியோகம் கிடைத்து இரண்டு வருடங்கள் தான். முதல் நியமனமே திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்தில் கிடைத்தது.

முதல் நியமனம் தூரப்பிரதேசம் என்றால் பின்பு சொந்த ஊரில் மாற்றங் கிடைக்க ஏதுவாகிவிடும் என்பதால் அவனும் ஒவ்வொரு ஞாயிறு இரவும் பஸ் எடுத்து விடிகாலை திருகோணமலை வந்து அந்தக் கிழமை முழுதும் வேலைபார்த்து ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 3.20 பஸ்ஸைப் பிடித்து விடுவான். யாழ்ப்பாணம் போக இன்று வியாழக்கிழமை விடுமுறை நாள். நாளை ஒருநாளுக்கும் சேர்த்து விடுப்பு எடுத்துக் கொண்டு இன்றே யாழ்ப்பாணம் புறப்படத் தயாரானான். இளவழகன் நல்ல நிறமில்லாவிட்டாலும் நிறைந்த கறுப்பனும் இல்லை. அளவான நிறமும் கொஞ்சம் சுருளான முடியும் கொண்டவன். அவனிடமுள்ள சிறப்பே அவனது அழகான கண்கள் தான். பல்கலைக்கழக காலத்தில் பெண்கள் எல்லாம் அவனை இளவழகா நீ இளவழகன் இல்லைடா. விழியழகன் என்று சொல்லும்போது அவனும் சிரித்துவிட்டுச் சென்றுவிடுவான். திருமணம் பற்றி அவனிடம் கனவுகள் இருந்தபோதும் அவன் அவற்றை யாரிடமும் பகிர்ந்ததில்லை. எனவே அவற்றினைப் பகிர நமக்கும் தேவையும் இல்லை. இளவழகன் தனக்கென வசதிப்பட்ட ஓர் இருக்கையில் ஜன்னல் பக்கம் அமர்ந்து கொண்டு தனது கைப்பேசியை எடுத்து அதனை மெதுவாகத் தடவி பேஸ்புக்கை எடுத்துப் பார்க்க ஆரம்பித்தான். ஆனாலும் மனமோ அதிக நேரம் அதில் லயிக்கவில்லை. அதனை மூடி வைத்தவன் ஜன்னல் வழியே பார்வையை ஓடவிட்டான். சிறிது தூரம் தள்ளி பேருந்து வளாக வாசலோரம் ஓர் வயோதிபப் பெண் நிலத்தில் ஓர் துணியை விரித்து அமர்ந்திருந்தார். அவரின் முன்னால் ஓர் கடகம் நிறைய கட்டுக்கட்டாகப் பனங்கிழங்குகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அருகில் கிட்டத்தட்ட ஓர் பத்து பன்னிரண்டு தயிர் சட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

வீதியெங்கும் மக்கள் கடந்து போய்க் கொண்டிருந்தனர். சுமார் 15 நிமிடமாக இளவழகன் அந்த வயோதிப மாதுவை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான். யாரும் ஒரு பனங்கிழங்கினைக் கூட வாங்குவதாகக் காணவில்லை. அவரும் சளைக்காமல் வருவோர் போவோரிடமெல்லாம் மகள், அம்மா, ஐயா... ஒரு கட்டு வாங்குங்கோ. நல்ல பனங்கிழங்கு. 5 கிழங்கு ஐம்பது ரூபாதான். தயிர்ச் சட்டியும் இருக்குது. நூற்றைம்பது ரூபா





மதிவதனி இராஜசேகரன்

தான் எனக் கூவிக் கொண்டிருந்தாள். திடீரென ஓர் 13 வயது மதிக்கத்தக்க பெண் பிள்ளையும் 11 வயது மதிக்கத்தக்க சிறுவனும் அந்தப் பெண்மணியை நெருங்கினர். இளவழகன் பஸ்ஸை விட்டு இறங்கி மெதுவாக அவர்களை அண்மித்து நெருங்கிக் கிட்டே செல்லாமல் அவர்கள் சம்பாஷனை காதில் விழும் விதமாக அருகே நின்று கொண்டான். அம்மம்மா இஞ்ச பாரணே... திங்கட்கிழமை பள்ளிக்கூடம் தொடங்கப் போகுது. இன்னும் நீ வெள்ளைச்சட்டை தைக்கயில்லை. சப்பாத்தும் வாங்கையில்ல. ஸ்கூல் பாக் கிழிஞ்சு போயெல்லே கிடக்குது. இனி அதைத் தைக்க இயலாதணே. புதுசுதான் வாங்க வேணும். நீ என்னெண்டால் ஓம்... ஓம்... எண்டு சொல்லுறாய். இன்னும் ஒண்டும் முடியல்ல. சரி நீ வாங்கித் தருவியோ தரமாட்டியோ சொல்லனே... கிழவி என்று கோபமும் கெஞ்சலுமாகக் கேட்டாள் அச்சிறுமி. ஓம்.. ஓம்.. என்ர செல்லம் இராசாத்தி. வாங்கித் தருவனணே. அம்மம்மா இண்டைக்கும், நாளைக்கும் இதையும் வித்து நாளைக்கும் யாபாரம் முடிய சனிக்கிழமை என்ர குஞ்சுகளுக்கு பள்ளிக்கூடச் சாமான்கள் வாங்குறதுதான் வேலை. கோபப்படாதணே குஞ்சு. கட்டாயம் அம்மம்மா வாங்கித் தருவன் என்று கூறிக் கொண்டவள் ஒரு ஐம்பது ரூபாவை எடுத்து நீங்க போய் அதில அன்னாசி வெட்டி விக்குறாங்க வாங்கிச் சாப்பிடுங்கோ என்று அனுப்பியவள் திரும்பி கண்களைத் தனது சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். அத்தோடு வாய்விட்டு வேண்டவும் செய்தாள். என்ர கோணேசப் பெருமானே.... எனக்கொரு வழிகாட்டு ஈசனே... என்றவள் கோணேசர் மலைப் பக்கம் திரும்பிக் கையெடுத்துக் கும்பிட்டாள். இவர்களது இந்த உரையாடலும் செயல்களும் நெஞ்சைப் பிசைய மெல்ல அந்த மூதாட்டியை நெருங்கிய இளவழகன்...'அம்மா... நீங்க எங்கிருந்து வாறனீங்க..' என்று கேட்டான். என்னப்பு கேட்டனீங்க நானோ ஐயா... நான் தம்பலகாமம் இருந்து வாறன் ஐயா. இது தான் என்ர தொழில் இப்போ. நாங்க நல்லா இருந்த குடும்பமையா.. இவுக என்ர பேரனும் பேர்த்தியும். ஏன் பனங்கிழங்கு வேணுமோ ராசா என்று கேட்டபடியே இரண்டு கட்டுக் கிழங்குகளை எடுத்து ஒரு சொப்பிங் பாக்கினுள் திணித்தாள். தயிர்சட்டி ஒன்றும் எடுங்கோவன். நூற்றி ஐம்பது ரூபாதான் என்றாள்.. அவரது கதைக்கு இடையூறின்றி பேசி முடிக்க காத்திருந்த அவன் ' ஓம் அம்மா. வையுங்கோ நான் எடுக்கத்தான் போறன். கொஞ்சம் கதைப்பம் என்று இறங்கி வந்தன் என்றவன் இவுகட அம்மா, அப்பா இல்லையோ அம்மா என்றான். குபுக்கென கண்ணிலிருந்து கசிந்த நீரைத் துடைத்துக் கொண்ட அந்த வயோதிப மாது 'இல்லை ஐயா... வயல் வேலைக்குப் போன என்ர செல்ல மகளும் மருமகனும் எங்கே போயினமெண்டே தெரியாதையா... காணாமல் போயிட்டினம். கடத்திக் கொண்டு போயிட்டினம் என்றும் கதைக்கினம். ஆனா இன்றுவரைக்கும் இல்லை. இந்த வருசத்தோட பத்து வருடமாச்சுது ஐயா.. என்ர மனுசனும் மகள்ட கவலையில படுத்தவர்தான் போய்ச் சேர்ந்துட்டார். இப்ப நான் தான் என்ர குஞ்சுகளுக்கு எல்லாமே என்றவள் அதுதான் சண்டை பிடிக்கினம். பள்ளிக்கூடச் சாமான் வாங்கித் தரச்சொல்லி என்று கூறினாள். அவள் கூறிக் கொண்டிருக்க தூரப் போன அந்த வயோதிப அம்மாவின் பேரனும் பேர்த்தியும் வரவும் சரியாக இருந்தது. கிட்ட வந்த சிறுமி இளவழகனைக் கண்டதும் கொஞ்சம் தயங்கி நின்றாலும் மெதுவான தலைச் சிலுப்பலோடு கிட்ட நெருங்கினாள். அவளைக் கண்ட இளவழகன் பிள்ளை - தம்பி இஞ்ச கிட்ட வாங்கோ... என்ன படிக்கிறீங்க இரண்டுபேரும் என்றான். சிறுமி முந்திக்கொண்டவளாக நான் ஆண்டு 8 படிக்கிறேன் அங்கிள். தம்பி இந்தவருடம் 5 ஆம் ஆண்டு ஸ்கொலர்ஷிப்பில பாஸ் பண்ணிட்டான். அம்மம்மா ஹிண்டு கொலிஜ்லதான் சேர்த்தவா. நானும் பாஸ்தான். நானும் சண்முகால படிக்கிறன் என்றாள்... திருகோணமலையில் பெயர் சொல்லும் பாடசாலைகளில் அவர்கள் படிப்பது அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்த போதும் அவர்களது வறுமை நினைத்து கவலை கொள்ளவும் செய்தான். அதுசரி குட்டிகள். நான் உங்க ரெண்டு பேருக்கும் பள்ளிக் கூடச்சாமான்கள் வாங்கித் தரட்டே. நீங்க அம்மம்மாவை கரைச்சல் குடுக்காதையுங்கோ என்ன என்றான்... இவனது இந்தப் பதில் அவர்களது மனதில் குதூகலத்தை ஏற் படுத்தினாலும் திடீரென அந்தச் சிறுமியின் முகத்தில் சிந்தனைச் சாயல் படர்ந்தது. இதைக் கண்ணுற்ற இளவழகன் என்ன சந்தோஷமா? என்றான். அவள் அந்தச் சிறுமியின் வாயிலிருந்து சீறிப்பாய்ந்தன தோட்டா போன்ற வார்த்தைகள். அங்கிள்... நீங்க யாரு? எங்களுக்கு? எங்கட அம்மம்மா எங்களுக்குச் செய்ய வேணும். அது கடமை. நாங்க கேட்போம். அது உங்களது உரிமை. நீங்க யாரு எங்களுக்குச் செய்ய? எங்களுக்கு நீங்க சும்மா செய்யுறது எங்களுக்குப் பிச்சை போடுறது போல அங்கிள். நாங்க பிச்சை எடுக்கவில்லை என்றாள்... சுருக்கென சவுக்கால் அடித் தது போல இருந்தது இளவழகனுக்கு. அதற்குள் அந்த மூதாட்டி ஏய் வாயை... இப்படியாடி அவரட்ட கதைக்குறது என்றாள். இடைமறித்த இளவழகன் அம்மா... பிள் ளையை ஏன் ஏசுறீங்க. அவள் சரியாத் தானே கேட்டிருக் கிறாள். தன்மானச் சிங்கக் குட்டிக் இவங்க... நல்லா வருவாங்க... நல்லாவே இருப்பாங்க... என்றவன் திரும்பி அவளது தலையைத் தடவியபடியே பிள்ளை... நீ சொல்லுறது தானடியம்மா சரியானது... நான் பிச்சை தரமாட்டன் செல்லம். இப்போ உங்கட அம்மம்மா வைச்சிருக்கிறதெல்லாம் வாங்குறன். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சாமான்களை வாங்கி காசைக் கழிக்குறேன். இந்தா நீயும் தம்பியும் என்னோட வாங்கோ. சாமான்கள் வாங்குவம்... பிறகு கடனைக் கழிப்பம் என்ன? என்று கூறிக்கொண்டு இருவரையும் அணைத் துக் கொண்டு மஞ்சள் கோட்டைக் கடந்தான். சரி அப்போ... நீங்க வாங்கித் தாற சாமான் காசுகளை வாங்கு வீங்க தானே...? எனக் கூறிக்கொண்டு இணைந்து நடந் தாள் வானதி... அந்த வயோதிப்பெண்மணிகண்களில் வழிந்த கண்ணீரைத் துடைக்க மறந்தவளாக என்ர கோணேசா... வழியைக் காட்டிட்டாய்அப்பு.... என கோணமலை நோக்கி ஓர் கும்புடு வைத்து தனது பேர்த்தியின் தன்மானத்தை நினைத்து பெருமிதம் கொண்டவளாக பனங்கிழங்கையும் தயிர்ச்சட்டிகளையும் பார்சல் பண்ணுவதில் மும்முரமானாள். வானலை வழியே 'தேவன் கோவில் மணியோசை நல்ல சேதிகள் சொல்லும் மணியோசை' எனப் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.....

ப்ரியமதா பயஸ்



# உங்கள் பிரச்சினையை நீங்களே கையாளுங்கள்

வாழ்க்கையில் எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும் மற்றவர்களை விட உங்களுக்குத்தான் உங்கள் பிரச்சினையைச் சிறப்பாக கையாளத் தெரியும்.

உங்களுக்கு நீங்கள் தான் சிறந்த நண்பன், உங்களை நீங்கள் தான் மற்றவர்கள் துணையின்றி வாழ்க்கையில் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

நீங்கள் எண்ணுகிற எண்ணங்கள் எப்போதும் நேர்மறை எண்ணங்களாகவும் உயர்வாகவும் இருக்கவேண்டும், அப்போது உங்களின் மதிப்பை நீங்களே அறிந்துகொள்வீர்கள்.

வாழ்க்கை என்று வரும் போது நல்ல குணங்கள் உங்களிடத்தில் இருந்தாலும் நிச்சயம் பணம் தேவையான ஒன்று.

உங்களின் உண்மையான எதிரி தீய எண்ணங்களே, அதனை அந்த தீயினில் சுட்டு ஒழியுங்கள்.

உங்களின் உண்மையான துரோகி ஆசைகளைத் தூண்டக்கூடிய எண்ணங்களே, ஆசைகளை அடக்கி ஆள்வதே சிறந்தது.

மற்றவர்களுக்காக கவலைப்பட்டு மனம் வருந்துகின்ற வாழ்க்கை தண்ணீர் இல்லாத குடத்தைப்போன்றது கவலைப்பட்டு கொண்டே இருந்தால் வாழ்வில் முன்னேற்றம் காண இயலாது.

வாழ்க்கையில் ஒரு கட்டத்தில் உங்களுக்கு அதிகம் சுமையைத் தாங்குவது போல் உணர்வுகள் ஏற்பட்டால், அது உங்களின் மன வலிமைக்கான தேர்வு என்று எடுத்துக் கொண்டு நேர்மறையாக பயணிக்கவும்.

வாழ்க்கையில் தன்னை அறிந்து கொள்பவன் புத்திசாலி அடுத்தவரை தேவையில்லாமல் அறிந்துகொள்ள முயற்சிப்பவன் ஏமாளி.

மகிழ்ச்சி மற்றும் உங்களின் அறிவார்ந்த சிந்தனையே உண்மையான வாழ்வின் அர்த்தம்.

# சொன்னாலும் புரியாதது

வாழ்கை என்பது ஏமாற்றமும், ஏக்கமும் நிறைந்தது.

நம்மிடம் இருப்பதை விட இல்லாததை நினைத்தே துயரப்படுவோம்.

அதிகமான பாசம் ஒரு கட்டத்தில் வெறுப்பையும், எரிச்சலையும் உண்டாக்கும்.

வெளிச்சம் இல்லை என்றால் உன் நிழல் கூட துணைக்கு வராது.

நாம் அதிகமாக ஆசைப்படக்கூடாது என்றே ஆசைப்படுவோம்.

வாழ்க்கையில் எவ்வளவு உச்சத்தை அடைந்தாலும், அடுத்தவருடன் ஒப்பிட்டுக் கொண்டே தான் இருப்போம்.

வாய்ப்பை பொறுத்தே கட்டுப்பாடுகள் உருவாக்கப்படும்.

அனைவருடனும் நல்லவனாக இருக்க நினைத்தால், அது போலியான முகமூடியாகத்தான் இருக்கும்.

தொடாமல் கெட்டவன் இராவணன், கொடுத்து கெட்டவன் கர்ணன், கொடுக்காமல் கெட்டவன் துரியோதனன்.. ஆக மொத்தத்தில் நீங்கள் வாழ்க்கையில் என்ன செய்தாலும் காறி துப்ப 10 பேர் எப்போதும் இருப்பார்கள். பொறாமை அழுக்காறு கோபம், வெறுப்பு, ஏளனம் எல்லாமும் எல்லோருக்கும் உண்டு–நம்மிடம் எவ்வளவு மறைக்கின்றனர் என்பதே சிலரை நண்பர் என்றும் சிலரை பகைவர் என்றும் காட்டுகிறது.

மனிதத்தில் இயற்கையாக அன்பு உண்டு. பலருக்கு நாம் கஷ்டப்படுகிறோம் என்று தெரியும் போது சிறு பச்சாதாபம், சந்தோசம், திருப்தி ஏற்படும் அளவு நம் சந்தோச சிரிப்பினை பார்த்து சந்தோசப் படுபவர் அரிதானவர்கள் மிக அரிது.

இந்த உலகத்தில் எந்த விடயத்தையும் செய்யாமல் விட்டு விட்டோமே என்று வருந்துவர் தான் அதிகம்.

ஒரு காலத்தில் நீங்கள் பூமியில் மிக இளமையாக இருப்பீர்கள், மற்றோரு காலத்தில் நீங்கள் இறக்கும் அடுத்த நபராக இருப்பீர்கள். கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் உங்களை உங்கள் கல்லறைக்கு நெருக்கமாக இழுக்கிறது. மரணம் தவிர்க்க முடியாதது.

கவலைப்படுவது நேரத்தை வீணடிப்பதாகும். வாழ்க்கையில் நல்ல மற்றும் கெட்ட காரியங்கள் நடக்கின்றன, நீங்கள் தொடர்ந்து வாழ வேண்டும், உங்களால் கட்டுப்படுத்த முடியாததை வலியுறுத்தக்கூடாது .

மக்களைத் துரத்த வேண்டாம். கடினமாக உழைத்து நீங்கள் நீங்களாகவே இருங்கள். இந்த இரண்டு கொள்கைகளின் கீழ், சரியான நபர்கள் உங்கள் வாழ்க்கையில் நுழைவார்கள்.

எளிதானது என்பது நீண்ட காலம் நீடிக்காது, நீண்ட காலம் நீடிப்பது எளிதானதாக இருக்காது.

உங்கள் முடிவுகள் தான் நீங்கள் – வாழ்க்கையில் இரண்டு வகையான நபர்கள் உள்ளனர் விடயங்களைச் செய்கிறவர்கள் மற்றும் விடயங்களைப் பார்ப்பவர்கள்.

தனிமையில் இருப்பது தவறான உறவில் இருப்பதை விட ஆயிரம் மடங்கு மன அழுத்தத்தை மிச்சப்படுத்தும்.

நீங்கள் அவர்களுக்காகச் செய்வது போல் மக்கள் உங்களுக்காகச் செய்வார்கள் என்று நீங்கள் நினைத்தால் நீங்கள் மிகவும் ஏமாற்றமடைவீர்கள். எல்லோருக்கும் உங்களைப் போன்ற ஒரே இதயம் இல்லை.

நீங்கள் விரும்பியதைச் செய்யும்போது, உங்களிடம் உள்ளதைப் பற்றி மகிழ்ச்சியாக இருங்கள். நடந்ததை எண்ணி வருத்தப் படாதீர்கள், நீங்கள் விரும்பியதை செய்யுங்கள்.

வாழ்க்கையில் முதல் விதி: நீங்கள் விரும்பியதை நீங்கள் ஒருபோதும் செய்யவில்லை என்றால், உங்களிடம் அது ஒருபோதும் இருக்காது.

வாழ்க்கையில், சில நேரங்களில், நீங்கள் மிகவும் விரும்பும் வியம் நடக்காது. சில நேரங்களில், நீங்கள் ஒருபோதும் எதிர்பார்க்காத விடயம் நடக்கும்.

சில நேரங்களில் நீங்கள் விலைமதிப்பற்ற ஒன்றைப் பெறுவதற்கு விலைமதிப்பற்ற ஒன்றை விட்டுவிட வேண்டும்.

# நாம் அனுபவிக்கும் சில அதிர்ச்சியான உண்மைகள்

பிறர் என்ன நினைப்பார், அவர் என்ன நினைப்பார், இவர் என்ன நினைப்பார் என நினைத்தே வாழ்ந்து வாழ்ந்து கடைசி வரைக்கும் மனதிற்கு பிடிக்காத முடிவுகளை தேர்ந்தெடுத்து வாழ்வை தொலைப்பது.

வீதிகளில் பிறர் தவறாக (விதிமுறைகளை மீறி) தன்னை கடந்து செல்லும் போது கோபம் கொள்வதும், அதையே தான் செய்தால் தனக்கு சமாதானம் சொல்லிக்கொள்வதும்.

பயனற்றது எனத்தெரிந்தும் தேவையற்ற பொருள்களை ஆடம்பரத்திற்காகவும்/பெருமைக்காகவும் வாங்கி சேர்ப்பது.

தனக்கு கோபம் வரும் என்பதை எளியவரிடமும், பயம் வரும் என்பதை வலியவரிடமும் காட்டுவது.

உண்மை கைக்கெட்டும் தொலைவில் இருந்தாலும், அனைவரும் சொல்லும் பொய்யை ஏற்பது.


பொது விதிகளை தனக்கு தேவைப்படும்/பயன்படும் போது மட்டும் உரக்க கூறுவது, இல்லை எனில் அதே தவறை மன நிறைவுடன் செய்வது (அரசுசார் விதிகள்/தனிமனித ஒழுக்கம் மேலும் பல)

முன்னெச்சரிக்கைக்கும் பயத்திற்கும் வித்தியாசம் தெரியாமல், தன் குழந்தைகளுக்கு மீனைப் பிடித்து மட்டுமே கொடுப்பது (கற்றுக்கொடுக்க பயப்படுவது )

வாங்கும் பொருள் தரம் மற்றும் பயனை பொறுத்து இல்லாமல் அதன் விளம்பரத்தை பொறுத்து இருப்பது.

தான் திருந்தினால்தான் சமூகம் திருந்தும் எனும் பொது அறிவுகூட இல்லாமல், மாற்றத்தை சமூகத்திடம் மட்டும் எதிர்பார்ப்பது. எப்பொழுதும் பிறர் பயணித்த/கடந்த/சொல்லும் வழிகளிலேயே பாதுகாப்பாக பயணிக்க நினைப்பது, தோல்விகளை/முயற்சிகளை புறந்தள்ளுவது.

உங்களின் தோற்றம் மோசமாக இருந்து வசதி குறைந்தவர் எனில் எவ்வளவு தான் நீங்கள் படித்து இருந்தாலும் அறிஞராக இருந்தாலும் மரியாதை கொஞ்சம் குறைவாகத்தான் தான் கிடைக்கும். அரசை குறை கூறுவர் ஆனால் அரசு தரும் இலவசங்களை பெற்றுக் கொள் வார்கள். நீங்கள் யாரை மதிக்க வில்லையோ அவர் தான் உங்களுக்கு ஒருநாள் உதவி செய்வார்.



நீங்கள் யாரை கேலி செய்தீர்களோ அவர்கள் வாழ்க்கையில் உங்களை விட ஒரு படி மேலே முன்னேறி இருப்பார்கள்.

பணத்தை நீங்கள் சேமிக்கவில்லை எனில் அதற்காக நீங்கள் ஒருநாள் வருந்துவீர்கள்.

பணத்தை அதிக அளவு சேமித்து வைத்தால் அந்த பணத்தை வைத்து தீர்க்க முடியாத ஒரு பிரச்சனையை நீங்கள் எதிர் கொள்வீர்கள்.

# புலம்பெயர் ஆன்மீகப் பணியகங்களை உருவாக்கிய கலாநிதி பிரான்சீஸ் ஜெயசேகரம் அடிகளார் சேவை

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர்- யாழ் பல்கலைக்கழகம் இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)




யாழ்ப்பாணம் மறை மாவட்டத்தைச் சேர்ந்த கலாநிதி அ. பிரான்சிஸ் ஜெயசேகரம் அடிகளார் தனது குருத்துவ திருநிலைப்படுத்தலின் 50ஆம் ஆண்டு நிறைவை அல் லைப்பிட்டியில் அவரின் எண்ணக் கருவில் உருவான வெண்புரவி நகரில் அண்மையில் கொண்டாடினார்.

### எதிலும் ஆர்ப்பாட்டம் காட்டாத அமைதியான அணுகுமுறை

எப்போதுமே புன்சிரிப்பு நிறைந்த செழிப்பான முகம் - என்றும் இளமையும் முழுமையும் நிறைந்த ஆளுமை - எவரையும் புண்படுத்தாத அமைதியும் இனிமையும் கலந்த பேச்சு - யாருக்கு என்ன உதவி செய்யலாம் என்ற தேடல் - அறிவும் அனுபவமும் நிறைந்த தீர்க்க தரிசனம் மிக்க தூரப் பார்வை - எப்போதும் தூய தமிழ்ச் சொற்களை பாவிக்க விரும்பும் தமிழ்ப்பற்று - எதையும் படைப்பாற்றலுடன் புதுமை யாய்ப் படைக்கத் துடிக்கும் எண்ணம் - எதிலும் ஆர்ப்பாட்டம் காட்டாத அமைதியான அணுகுமுறை - இவற்றின் முழுவடிவமே கலாநிதி பிரான்சீஸ் ஜெயசேகரம் அடிகளார்.

### நெடுந்தீவு முதல் நெய்தலம் வரை வாழ்வும் பணியும்

1941ஆம் ஆண்டு நெடுந்தீவில் பிறந்து யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை பாடசாலை, புனித பத்திரிசியரர் கல்லூரி, புனித மடுத்தீனரர் குருமடம் ஆகிய இடங்களில் ஆரம்பப் படிப்பையும் பயிற்சியை யும் 1961ஆம் ஆண்டில் நிறைவு செய்து, 1962ஆம் ஆண்டு இந்தியா மங்களூர் புனித சூசையப்பர் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் கல்வியை நிறைவு செய்து, 1971ஆம் ஆண்டு மேதகு கலாநிதி எல்.ஆர்.அன்ரனி ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1971ஆம் ஆண்டு முதல் 1972ஆம் ஆண்டு வரை கரவெட்டி,பருத்தித்துறை, யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயம் ஆகிய இடங்களில் உதவிப் பங்குத் தந்தையாகப் பணியாற்றினார்.

1972 முதல் 1974 வரை முருங்கன் பங்கிலும், 1974 முதல் 1978 வரை உரும்பிராய் பங்கிலும், 1978 முதல் 1982 வரை விடத்தல்தீவு பங்கிலும் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய பின்னர், 1982 முதல் 1987 ஆண்டு காலப்பகுதியில் உரோமாபுரியில் இறையியல் கால நிதிப் பட்டப் படிப்பை நிறைவு செய்தார்.

1987 முதல் 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐரோப்பாவில் நெதர் லாந்து, சுவிஸ், டென்மார்க், பிரான்ஸ் ஆகிய இடங்களில் ஆன்மீகப் பணியகங்களை உருவாக்கி பின்னர் ஜேர் மனி தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் 13 ஆண்டுகள் பணி யாற்றினார்.

2001ஆம்ஆண்டுமுதல்2003ஆம் ஆண்டுவரை குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தையாகவும், அதன் பின்னர் நெய்தலம் நிறுவனத்தின் இயக்குநராகவும், வெண்புரவி நகர் நிர்வாகியாகவும் பணியாற்றுகிறார்.

### யாழ்ப்பாணம் ஆயர் தெரிவித்த ஒரு சம்பவம்

கலாநிதி பிரான்சீஸ் ஜெயசேகரம் அடிகளாரின் குருத்துவப் பணியின் 50 ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் அல்லைப்பிட்டி வெண்புரவி நகரில் நடைபெற்ற போது யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்த ஒரு சம்பவம் இங்கு கட்டாயம் பதியப்பட வேண்டிய விடயாமாகும். யாழ்ப்பாணம் ஆயர் தெரிவித்த விடயம் இதுதான்:-

நான் அப்போது குருத்துவ மாணவனாக இருந்தேன். ஜெயசேகரம் அடிகளார் மன்னார் உயிலங்குளம் பங் குத்தந்தையாக இருந்தார்.

அவர் ஆண்டவர் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியை உயிலங்குளம் பங்கில் மேடையேற்ற இருந்தார். நான் திருப்பாடுகளின் காட்சியைக் காண்பதற்காக அங்கு போய் குருமனையில் தங்கி இருந்தேன்.

மக்கள் டிரக்டர் மூலமும் நடந்தும்தான் அங்கு வந்து சேரவேண்டும். இருந்தாற்போல் 'மைக்'கொலி மூலமான அறிவிப்பு கேட்டது. நான் காது கொடுத்துக் கேட்டேன்.

"பின்னால் இருக்கும் கிறிஸ்துவில் அன்பு மிக்க சகோதர, சகோதரிகளே! முன்நோக்கி வாருங்கள். பின் வருபவர்களுக்கு இடம் கொடுங்கள். இதோ இன்னும் சில நொடிப் பொழுதுகளில் ஆண்டவர் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி ஆரம்பமாகப் போகிறது' - என்று அறிவிக்கப்பட்டது.

நான் பிந்தி விட்டோம் என்ற நினைப்புடன் வேகமாக ஆண்டவர் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி நடைபெற இருந்த இடத்திற்குச் வேகமாகச் சென்றேன். கலாநிதி பிரான்சீஸ் ஜெயசேகரம் அடிகளாரின் அறிவிப்பு இன்னும் சத்தமாகவும் தெளிவாகவும் கேட்டது.

ஆனால் அங்கு நாம் அங்கு பார்த்த காட்சி எம்மை திக்குமுக்காட வைத்து விட்டது. ஏன் தெரியுமா? அங்கு மைதானத்தில் யாருமே இருக்கவில்லை. - என்றார்.

### ஜோர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் இருந்து துரைசிங்கம் கமிலஸ் குறிப்பிடுவன

கலாநிதி பிரான்சீஸ் ஜெயசேகரம் அடிகளார் ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் இயக்குநராகப் பணியாற்றிய காலத்தில் அதன் செயலராகப் பணியாற்றிய துரைசிங்கம் கமிலஸ் என்பவர் 'ஐரோப்பியத் தமிழரின் ஆன்மீகத் தந்தை' என்ற பெயரில் எழுதிய ஆக்கத்தின் முக்கிய பகுதிகளையும் இங்கு பதிய வேண்டும்.

ஜேர்மனியில் தமிழர்கள் பெருமளவில் வரத்தொடங்கிய எண்பதுகளில் எமது ஆன்மீகத் தேவைகளை தாய்மொழியில் நிறைவேற்ற தமிழ் குருக்கள் யாருமே இருக்கவில்லை.

உரோமையில் கலாநிதிப் பட்டம் பெற்று தாய்நாடு திரும்ப இருந்த அவரை ஒஸ்நாபுறுக் மறைமாவட்ட ஆயர் சில ஆண்டுகள் ஜேர்மனியில் தங்கியிருந்து தமிழர்களைப் பராமரிக்குமாறு கேட்டதற்கிணங்க அவர் சில வருடங்கள் பணியாற்ற எண்ணியபோதும் அது 13 வருடங்களாக நீடித்தது.

அவர் தனியாக ஜேர்மனியில் வாழும் தமிழர்களுக்கு மட்டும் பணியாற்றவில்லை. மாறாக நெடுந்தூரம் தொடரூந்துகளில் பயணம் செய்து நெதர்லாந்து, சுவிஸ், டென்மார்க், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ் மக்களைச் சந்தித்து அவர்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்றினார்.

நீண்டதூரப் பார்வையில் அங்கும் பணியகங்கள் உருவாக வேண்டும். அந்நாளில் ஜேர்மன் முழுவதும் சிதறி வாழ்ந்த தமிழ் மக்களுடன் தொடர்பை ஏற்படுத்துவது இலகுவானதாக இருக்கவில்லை. கைத்தொலைபேசி இல்லாத காலம்.

ஆரம்பத்தில் 10 நகரங்களில் தொடர்பாளர்களை நியமித்து வழிபாடுகளை நடத்தினார். அதன் பின்னர் பாசறைகள்,கருத்தரங்குகள், தியானங்கள், இல்ல வழிபாடுகள், யாத்திரைகள், கலைமாலைகள், ஒளி விழாக்கள் என அடிகளாரின் எண்ணக்கரு விரிவடைந்தது.

ஒவ்வொரு பங்கிற்கும் தொடர்பாளர்களைத் தெரிவு செய்து அவர்கள் சுதந்திரமாகச் செயலாற்ற உருவாக்கம் செய்தார்.

அடிகளார் கண்ட கனவுகள் பல. அவற்றை நனவாக்க அவருக்கு பல நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்களுடன் ஒன்று சேர்ந்து பல நிகழ்வுகளை நடத்தினார்.

### கேவலார் யாத்திரையும் தொடுவானம் பத்திரிகையும்

இவற்றில் முக்கியமாக அவர் ஆரம்பித்த கேவலார் யாத்திரையையும், தொடுவானம் பத்திரிகையையும் குறிப்பிடலாம்.

1988இல் 50 பக்தர்களுடன் தொடங்கிய யாத்திரை இன்று பல்லாயிரம் மக்களுடன் கேவலார் தலத்திலேயே அதிக மக்கள் ஒரு நாளில் பங்கேற்கும் யாத்திரையெனப் பெயர் பெற்றுள்ளது.

அடுத்ததாக அடிகளாரின் கனவாக 1994 ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் உதித்த 'தொடுவானம்' பத்திரிகை அவர் தாய்நாடு திரும்பிய பின்னர் இன்றும் அவரைத் தொடர்ந்து வந்த இயக்குநர்களால் வெளியிடப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் இங்கு செய்த சாதனைகள் பல.

தாய்நாடு சென்ற பின்னர் அவர் குருநகர் பங்குத் தந்தையாக இருந்தபோது அங்கு வாழும் மக்கள் மட்டில் மிகவும் பரிவு கொண்டார்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

முதலில் வலைத் தொழிற்சாலையை செயற்படுத்தவும் அங்கு பலருக்கு மேலும் தொழில் வாய்ப்புகள் உருவாகவும் முன்னின்று உழைத்தார்.

அதன்பின் அல்லைப்பிட்டியில் வெண்புரவி நகர் எனும் வீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி 150க்கு மேற்பட்ட நிரந்தர வீடுகள், கிணறுகள், பாலர் பாடசாலை,ஆலயம் போன்றவற்றை அமைத்தார்.

பிற்காலத்தில் நிறுவன உதவிகள் கிடைக்காத போதும் வெளிநாடுகளில் வாழும் அவருக்குத் தெரிந்த அன்பர்கள், நண்பர்களின் உதவியுடன் இப்பெரும் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றார். ஒரு வீடு கட்டுவதே கடினமான நிலையில் அடிகளார் ஒரு கிராமத்தையே கட்டி எழுப்பியுள்ளார். - என ஜேர்மனி தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் முன்னாள் செயலர் தன் ஆக்கத்தை நிறைவு செய்கிறார்.



அருந்ததியின்

# வரன் தேடுவோம் வாருங்கள்



## திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி

ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார் தொழில்புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்.இந்நிகழ்விற்கு எமது ஜோதிடர் வரவுள்ளதால் உங்களுக்கு பொருத்தமான சாதகங்களை பெற்று உடனடியாகவே பொ ருத்தம் பார்த்துக்கொள்ள முடியும்.

**யாழ்ப்பாணம்**

**28/11/2021 | 9.00 a.m -12.00 a.m**

**திவ்ய மஹால்**

1001, K.K.S Road, Vannarpannai, Jaffna

**இந்நிகழ்வில் சிறப்பு பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது**

600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 25 னை
இந்நிகழ்வில் பெற்றுக்கொள்ளலாம்



**அருந்ததி பிரைவட் லிமிடட்**

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

www.arunthathee.com | +94 777 164 524

## 718 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எண்ணிக்கை 5 இலட்சத்து 61 ஆயிரத்து 777 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 18 ஆயிரத்து 159 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 434 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 29 ஆயிரத்து 240 ஆக உயர்வடைந்துள்ளது.

## சீருடையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நீதிமன்றில் தடை உத்தரவை பெறுவதற்கு வல்வெட்டித்துறை பொலிஸார் இறுதி வரை முயன்று பலனளிக்காத நிலையில், நினைவு அஞ்சலி செலுத்துவதற்கு வந்தோரை அச்சுறுத்தும் பாணியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பெருமளவில் குவிக்கப்பட்டனர்.

பல்வேறு அச்சுறுத்தல் தடைகளையும் தாண்டி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே திடலுக்குள் இராணுவத்தால் உள்நுழைய அனுமதிக்கப்பட்ட உறவுகள் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்தமையுடன் பொதுச் சுடர் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

உறவுகளை இழந்தவர்கள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இதனைக் கண்டு அஞ்சலி செய்ய தீருவில் திடலுக்கு வெளியே ஒன்று கூடி தீபங்களை ஏற்றி பொதுமக்கள் அஞ்சலித்த பொழுது மிகக் கேவலமான முறையில் சிவில் உடையில் இருந்த புலனாய்வுப் பிரிவினர் தீபங்களை தட்டி விட்டதுடன் அநாகரிகமான முறையில் செயற்பட்டனர்.

இதேவேளை இந்த அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றியவர்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நடந்து கொண்டமையுடன் ஊடகவியலாளர்களுடன் முரண்பட்டனர்.

## வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

வலிகாமம் வடக்கு தவிசாளர் சோ.சுகிர்தன், தனது வீட்டுக்கு முன்பாக மாவீரர் நினைவேந்தலையொட்டி நேற்று மாலை சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதையடுத்து அந்தப் பகுதிக்கு உழவு இயந்திரத்தில் வந்த இராணுவத்தினர் தவிசாளரை அழைத்துச் சுடர் ஏற்றிய விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தினர் எனவும், தன்னுடைய வீட்டில் விளக்கேற்றுவதற்கு யாரிடமும் அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை என்று தான் அவர்களிடம் தெரிவித்தார் எனவும் சுகிர்தன் கூறினார்.

## மாவீரர்களை நினை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பிடிகளுக்கு மத்தியிலும் மாவீரர் நாள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. துயிலும் இல்லங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மாவீரர்கள் நினைவாக மக்கள் ஈகைச்சுடரேற்றினார்கள். இந்தநிலையிலேயே கோட்டாபய அரசு மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழர்கள் கூறும் 'மாவீரர்கள்' பயங்கரவாதிகள். அவர்கள் இந்த நாட்டை அழித்தவர்கள்; பலரைக் கொலைசெய்தவர்கள்.

இந்த நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அவர்களை நினைவுகூரவே முடியாது. பயங்கரவாதிகளை நினைவேந்த எமது அரசும் ஒருபோதும் அனுமதி வழங்கவில்லை.

எனவே, வடக்கு, கிழக்கில் நேற்று பயங்கரவாதிகளை நினைவேந்திய அனைவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கூண்டோடு கைதுசெய்யப்படுவார்கள். அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் - என்றார்.

## மாவீரர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யில் தீபம் ஏற்றப்பட்டதோடு உயிரிழந்த வீர மறவர்களுக்கு முழந்தாளிட்டு மாணவர்களால் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

பல்கலைக்கழக சூழலில் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு வழமையை விட கண்காணிப்பு நடவடிக்கைகள் அதிகப்படுத்தப்பட்டிருந்தன.

எனினும், மாணவர்கள் மாவீரர் நாளில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, நேற்றுக் காலை பல்கலைக்கழக வேலை நாளாக இருந்தாலும் பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழக கதவுகளை பூட்டி, அலுவலர்களை மட்டுமே உள்ளே அனுமதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 20 சாவுகளில் 7 பெண்களும், 13 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 278 ஆக உயர்வடைந்துள்ளது.

## 6 நாடுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, தென்னாபிரிக்கா, பொத்ஸ்வானா, லெசோதோ, நமீபியா, சிம்பாப்வே மற்றும் எஸ்வடினி முதலான நாடுகளிலிருந்து இருந்து வரும் பயணிகளுக்கு, நேற்று நள்ளிரவு முதல் தடை விதிக்கப்பட உள்ளது.

கடந்த 14 நாள்களுக்குள் குறித்த நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டவர்களுக்கு இந்தத் தடை விதிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

அத்துடன், குறித்த நாடுகளிலிருந்து கடந்த நாட்களில் இலங்கைக்கு வந்தவர்கள் இருப்பார்களாயின், உடனடியாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கெடுபிடிகளைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தேசமான வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வாளர்கள் ஆகியோரின் பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியிலும் கடைப் பிடிக்கப்பட்டது.

அந்தவகையில், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், இராணுவத்தினரின் இறுக்கமான கெடுபிடிகளுக்கு மத்தியில் இறுதிப் போர் முடிவுற்ற நந்திக் கடலில் மாவீரர்கள் நினைவாக நேற்று காலை மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

எங்கள் பெருமைமிகு வரலாற்றின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல் ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும் செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர்தூவி அஞ்சலிசெலுத்தினேன் என்று அவர் தெரிவித்தார்.

இதன்பின்னர் மாவீரர்களின் ஆத்மசாந்திவேண்டி, முன்னாள் வடக்குமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரன் லெப். சங்கரின் வல்வெட்டித்துறை இல்லத்தில் நேற்று மாலை கப்டன் பண்டிதரின் தாயார் ஈகைச் சுடரேற்றி மாவீரர் நாள் நினைவேந்தலை மேற்கொண்டார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கலந்துகொண்டார்.

இவ்வாறு வடக்கு, கிழக்கின் பல இடங்களில் மாவீரர் நினைவேந்தல்கள் நேற்று கடைப்பிடிக்கப்பட்டன.

# தனிவழிப் பயணத்துக்கு மைத்திரி அணி தயார்



மாகாண சபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகி வருகின்றது என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான மோதல் உக்கிரமடைந்துள்ளது.

அதேபோல் சுதந்திரக் கட்சிக்கு அரச கூட்டுக்குள் பாகுபாடு காட்டப்படுகின்றது எனவும், நிதி ஒதுக்கீடுகள் இடம்பெறுவதில்லை எனவும் அக்கட்சி உறுப்பினர்கள் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தனிவழி செல்வதற்கு சுதந்திரக் கட்சி தயாராகி வருகின்றது என தெரியவருகின்றது.

# சு.கவின் ஆதரவு தேவையில்லை!

## அமைச்சர் பிரசன்ன விளாசல்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு எமக்குத் தேவையில்லை. ஆட்சியை முன்னெடுப்பதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும் அவசியமில்லை.

இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கைகளிலேயே தங்கியுள்ளது என அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டிருந்த அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்படியெல்லாம் பிரச்சினை வரும் எனத் தெரிந்துதான், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்களுக்கு வேட்புமனு வழங்க வேண்டாம் என நான் அன்றே வலியுறுத்தினேன். தற்போது அரசில் இருக்க முடியாவிட்டால் வெளியேறட்டும். அதனால் எமக்குப் பாதிப்பு இல்லை.

அரசுக்குள் இருந்துகொண்டு - சிறப்புரிமைகளை அனுபவித்தபடி விமர்சனங்களை முன்வைப்பதைவிடவும், வெளியேறுவதே நல்லது - என்றார்.

# கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் எழுதப்பட்ட 'மாவீரர் நாள் நவம்பர் - 27'

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம், கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் 'மாவீரர் நாள் நவம்பர் - 27' என எழுதப்பட்டுள்ளது.

மாவீரர் வாரம் ஆரம்பம் முதல் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வா ளர்கள் ஆகியோரின் சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கைகளும், கண்காணிப்புக்களும் தீவிரமாக்கப்பட் டுள்ளன.

இந்தநிலையில், நேற்று அதிகாலை வேளை குறித்த வீதியில் மாவீரர் நாளை நினைவுகூரும் முகமாக 'மாவீரர் நாள் நவம்பர் - 27' என எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் மேலும் இரு பேராசிரியர்கள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மேலும் இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகத் தரமுயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக பேரவையின் மாதாந்த கூட்டம் நேற்று சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவியுயர்வுக்காக விண்ணப்பித்த சிரேஷ்ட விரிவுரையாளர்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமங்களுக்கு அமைய மதிப்பீடுகளையும், நேர்முகத்தேர்வு - தெரிவுக்குழுவின் சிபார்சுகளையும் பரிசீலனை செய்த பேரவை மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், நரம்பியல் சிகிச்சை நிபுணருமான வைத்திய கலாநிதி அஜினி அரசலிங்கம் மருத்துவப் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி கணபதி கஜபதி விலங்கியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்குப் ஒப்புதல் அளித்துள்ளது.

## சாட்டியிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அஞ்சலி செலுத்தினர்.

நேற்று மாலை 6.07 ற்கு துயிலும் இல்லத்தில் சுடரேற்ற படையினர், பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியபோதும் அரசியல் பிரமுகர்கள், உறவுகள் நீண்ட முயற்சியின் பின்பு துயிலும் இல்லம் முன்பாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

# பன்றிக்கு வைத்த மின்சாரத்தில் அகப்பட்டு குடும்பஸ்தர் மரணம்!

(ந.லோகதயாளன்)

வவுனியா மாவட்டத்தில் பன்றிக்கு வைத்த மின்சாரத்தில் அகப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

வவுனியா, மதுரங்குளத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் துரைச்சாமி சுப்பிரமணியம் (வயது 69) என்னும் வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

தனது தோட்டத்தில் நாட்டிய மரவள்ளிக்கு பன்றி அதிகமாக வருவதால் ஏற்படும் இழப்பைத் தடுக்கும் நோக்கில் வேலியில் மின்சார இணைப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இவ்வாறு ஏற்படுத்திய மின் இணைப்பிலேயே அவர் தவறுதலாக அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**British Level 05**

*Leading towards Top up Degree*



LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

# HIGHER DIPLOMA IN QUANTITY SURVEYING

# HIGHER DIPLOMA IN CIVIL ENGINEERING

**ENTRY REQUIREMENTS**

- G.C.E. A/L Maths/ Bio/ Technology Stream
- G.C.E. O/L or G.C.E. A/L in other streams + Engineering Foundation

**DURATION : 02 Years**

APPLY NOW FOR NEW INTAKE

*Higher Diploma offered by UGC recognized British University*

077 074 6553 | 077 744 2691

ICBT CAMPUS JAFFNA

INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY

580, Hospital Rd., Jaffna
Tel : (+94) 214 777 888
Fax : (+94) 654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

EQAA Institutionally Accredited (European Quality Assurance Agency)

National Business Excellence 2019 | 2018 | 2017 | 2016
Gold Award Winner
Education Service Sector

www.icbt.lk

# குயில் கூடு

பாகம் 06

அந்த மூன்றாம் இலக்க அறைக்கு முன்னால் போடப்பட்டிருந்த இருக்கைகளில் கிட்டத்தட்ட ஓர் ஐந்தாறு பேர் இருந்து கொண்டிருந்தனர். உள்ளே வைத்தியர் நோயாளியைப் பார்வையிடுவது அந்தக் கண்ணாடிக் கதவின் வழி புகைபோல காட்சியளித்தது. அலெக்ஸ் மனைவியின் கையைப் பற்றி அழைத்துப் போனான். வெறுமையாகக் கிடந்த இருக்கைகள் இரண்டில் அமர்ந்து கொண்டனர் இருவரும். நிம்மி ஏன்... பதற்றமாக இருக்கிறாய். நோர்மலாகு நிம்மி... இஞ்சபார் கையைப் பிடிக்குறன் கை நடுங்குது... பட படவென்று வேற அடிக்குது. நோமலாக இரு அம்மாடி... என்று கூறிக் கொண்டவன் தோளில் கைபோட்டு தனது தோளோடு இணைத்துக் கொண்டான். இல்லையப்பா.. நீங்கள் சொல்லிப் போட்டியள். நான்... பைத்தியக்காரி போலவல்லவோ இருக்கிறன். இப்போ டொக்டர் ஏதாவது வித்தியாசமாகச் சொல்லிட்டா என்ன செய்யுறதாம் என்றாள். நீ லூசு போல பேசாதடி அம்மணி... ஒன்றும் வித்தியாசமாக வராது பேசாமல். சந்தோசமாக இரு என்றான். நேரம் நத்தைபோல ஊர்வதாக இருந்தது நிர்மலாவுக்கு. திகில் நிறைந்த ஓர் திரைப்படத்தின் முடிவு தெரியாமல் விழிக்கும் குழந்தைபோல முகத்தை வைத்துக் கொண்டு கணவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவளது இந்தப் பரிதாபப் பார்வை அலெக்ஸினது மனதில் மனைவிமேல் அளவில்லா காதலை அள்ளித் தெளிக்க அவளது கரங்களை இறுகப் பொத்தி 'நானிருக் கிறேன்' என்கிற அந்தக் கடமையைச் செய்தான் அவன்.

சிறிது நேரத்தின் பின் அந்த அற்றண்டன் பெண்மணி கொஞ்சம் உரத்த சத்தமாக திருமதி ஜெனற் நிர்மலா அலெக்ஸ் நம்பர் பன்னிரண்டு இருக்குறீங்களா? என்றாள். ஓம்.. ஓம்... என்று கொண்டே நிர்மலா எழும்பினாள். அதற்கு முன்பதாக அலெக்ஸ் அவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டவன் கொஞ்சம் பொறு டொக்டர் ஓடிப்போக மாட்டார் என்றவன் அவளை வைத்தியரின் அறைக்குள் நுழைய விட்டுத் தான் பின் நுழைந்தான்.

ஓ.... வாங்கோ மிஸிஸ் அலெக்ஸ் என்று நண்பன் மனைவியை மரியாதையுடன் அழைத்தார்.... ரகுராம் ஓம் டொக்டர் நீங்க நலமோ.... என்று கேட்டபடி உள் நுழைந்த நிர்மலாவை இப்படி இந்தக் கதிரைக்கு வாங்கோ என தன்பக்கத்திலுள்ள கதிரையில் அமர வைத்துக் கொண்ட வைத்தியர் ஹாய் அலெக்ஸ் நீரும் வாரும். அந்தச் செயாரில இரும் என்றார். ஓம்..ஓம்... சரி என்றவனிடம் உங்கட ரிப்போட் கொண்டு வந்தனீங்களோ... என்றார். ஓம் டொக்டர் என்று கூறிக் கொண்டு தனது கையில் வைத்திருந்த அந்தப் பெரிய பையை வைத்தியரை நோக்கி நீட்டினாள் அவள். அதனைப் பெற்றுக் கொண்ட வைத்தியர் ஒவ்வொன்றாக வெளியே எடுத்து வாசிக்க ஆரம்பித்தார். அறை முழுக்க நிசப்தமே குடிகொண்டிருந்தது. தலைக்குமேல் தொங்கிய மின் விசிறிச் சத்தம் மட்டும் அறையை நிறைத்துக் கொண்டிருந்தது. அதற்குச் சுதி சேர்த்தது போல சுவர் மணிக்கூடு டிக் டிக், டிக் டிக் என்று துடித்துக் கொண்டிருந்தது. வைத்தியர் ஒவ்வொன்றாகப் பார்த்து வந்தவர். மீண்டும் சகலத்தையும் அந்தப் பைக்குள்ளே வைத்து அதனை அவளிடமே நீட்டினார்.

அவ்வளவுநேரமும் எதுவும் பேசாமல் இருந்த நிர்மாலாவின் பார்வை கணவன் அலெக்ஸினது கண்களை ஊடுருவியது. 'நீங்க கேளுங்கோவன்' .... என்பது போலிருந்தது அவளது பார்வை. பார்வை பாஷை புரிந்தவனாக பிளீஸ் ரகுராம்... சொல்லுங்கோ என்றான். நிமிர்ந்த Dr. ரகுராம் ஓம் அலெக்ஸ் இப்ப நான் பார்த்ததில் ஒன்றுமட்டும் தெரியுது. இவ உங்கட ... ம் சரி நீங்களும் சரி ஹெல்த் கொண்டிஷன் ஓகே. குறை சொல்ல எதுவுமில்லை. ஆனாலும் எனக்கொரு சின்ன டவுட் இருக்குது. அதை கிளியர் பண்ண சில ரெஸ்ட்கள் இருக்குது. நீங்க ஓம் என்றால் செய்துடுவம் என்றார். அலெக்ஸ்ஸினது புருவங்கள் உயர்ந் தன. உயர்த்திய புருவத்தினூடே நிர்மலாவைப் பார்த்துத் தலை அசைத்தான். அவளும் விளங்கியது போல தலை அசைத்துவிட ஓகே ரகுராம். நீங்க சொன்னது போல செய்துவிடுவம் என்றான் டொக்டர் ரகுராம். சில அறிவுறுத்தல்களைக் கூறியதோடுவாற திங்கட்கிழமை செய்துடுவம் அலெக்ஸ். நீங்க நேரத்துக்கே வந்துடுங்கோ என்றார். வாற போதும் சிலவேளை அன்றோ அல்லது மறுநாளோ தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். அதுக்குரிய ஆயத்தத்தோடு ஹொஸ் பிட்டல் வந்துடுங்கோ சரியா என்றார். அலெக்ஸ் ஓ... சரி... சரி ரகுராம் நாங்க அதுக்கான ஆயத்தத்தோட வந்துடுறம். சரி... என்ன... என்று ரகுராமுக்கு வணக்கம் சொல்லி இருவரும் புறப்படத் தயாரானார்கள். அந்தவேளை அவசர அவசரமாக நேர்ஸ் ஒருத்தி ஓடிவந்தாள். வாசலைத் துறந்த வேகத்தில் நிர்மலாவோடு மோதப் போனவள் சொறி மடம்...... அந்த பேஷண்ட், ஊசி போடாமல் அடம்பிடிக்குறா டொக்டர். நீங்க தான் வரவேணுமாம் என்கிறா...என்றாள். ஓ சரி.. சரி.. நீங்க நடவுங்கோ. நான் வாறன் என்றவர். இவர்களை வழியனுப்பிய கையோடு நேர்ஸினது பின்னால் போக ஆரம்பித்தார். நிர்மலாவும் அலெக்ஸும் .. காரினை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். இருவரின் மனதிலும் ஓர் வித சூனியம் குடி கொண்டிருந்தது. ஆனாலும் தன்னைச் சுதாகரித்துக் கொண்ட அலெக்ஸ் மனைவியை இயல்பு நிலைக்குக் கொண்டுவர முயற்சி செய்யும் விதமாக ஏய்... நிம்மிக் குட்டி தென்றல் றேடியோ போடவோடி. இப்ப உன்ர சித்திரகானம் போகுமல்லோ என்று காரினைக் கிளப்பியபடியே கேட்டான். காதில் எதுவும் விழாதவளாக கார்போகும் பாதையை வெறித்துப் பார்த்தவளாகவே அவள் இருந்தாள். அவளைத் தொட்டு உலுப்பிய அலெக்ஸ்.. இப்ப என்ன... பிரச்சினை நடந்துபோச்சு நிம்மி இஞ்சபார் நாம திங்கட்கிழமை ரெடியாவோம் சரிதானே என்றான். ஏதும் புரியாதவளாக ஓகே சரியப்பா என ஒத்துக் கொண்டாள் மேல்... எதுவும் பேசாதவளாக...

குறித்த நாளும் நெருங்கியது. நிர்மலாவின் கடந்த நாள்களின் செயற்பாடுகளை விட அன்று ஏனோ அவள் சோம்பல்படுவதாகவே பட்டது அலெக்ஸுக்கு. அவன் நிர்மலாவிடம் நிம்மி ஏனடி இப்படி இருக்கிறாய்? உன்ர வேலைகளைப் பார்த்தால் நீ இன்றைக்கு ஆஸ்பத்திரி போக வெளிக்கிடுவாய் போல இல்லை. கெதியா வேலைகளை முடி என்ன? என்றான். ஓம் என்றவள் ஓர் வழியாக செய்ய வேண்டியவை யாவற்றையும் செய்து செக்கப்புக்கு ஆயத்தமானாள். குறித்தநாளில் குறித்த



மதிவதனி இராஜசேகரன்

நேரத்தில் வைத்தியர் சொன்னது போல ஒரு நாள் ஆஸ்பத்திரியில் தங்கி தமது பரிசோதனைகள் யாவற்றையும் செய்து முடித்து வைத்தியர் குறித்த நாள்படி இன்று அவர்கள் இருவரும் வைத்தியரின் மருத்துவ மறுமொழிக்காக அவரது பிரத்தியேக அறை யின் வரவேற்புப் பகுதியில் காத்திருந்தனர்.

நேரம் ஆக ஆக நிர்மலாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எழுந்து அங்குமிங்கும் நடக்க ஆரம்பித்தாள். அலெக்ஸினது நிலையோ மிக மோசம். இவ்வளவு நாளும் மனைவியைச் சமாதானப்படுத்திய அவனது மனம் இன்று முழுதாக அலைபாய ஆரம்பித்தது. பதற்றமும் எதிர்பார்ப்பும் நிரம்பிய அவனது மனநிலை புரியாமல் கைக்கடிகாரம் கூட மிகவும் சிரமப்பட்டே நகர ஆரம்பித்தது. ஐயோ.. என்னடா இது இந்தளவு பதற்றமாக வுள்ளதே என்றவளாக கைகளைப் பிசைந்தபடியே அமர்ந்திருந்தாள் நிர்மலா... அலெக்ஸிடம் திரும்பி என்னப்பா டொக்டர் வாரார்போல... என்ன என்றாள். இல்லை இப்பவந்துடுவார். நான் கோல் அடிச்சுட்டன். வந்துடுவன் என்றுதான் சொன்னவர் என்றான். சரி எதுக்கும் வாசல்வரை போய்ப்பார்த்து வாங்கோவன். என்றாள். ஓம் அதுதான் சரி என எழும்பியவனின் கண்ணெதிரே டொக்டர் ரகுராம் தனது அறைக் கதவுகளைத் திறந்து உள்நுழைந்தார். உள்நுழைந்த டொக்டர் ரகுராமின்முகத்தில் ஓடிய சிந்தனையைக் கண்ணுற்ற நிர்மலா ஓர்முறை திகைத்துப் போய் நின்று கொண்டாள் பேச வாய் வராதவளாக....

தொடரும்....

# இலக்கிய நயம்

'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி' என்பது பரணி இலக்கியத்தின் இலக்கணம் ஆகும். அதாவது போரிலே ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிவாகை சூடும் நாயகனைத் தலைவனாகக் கொண்டு அவனைச் சிறப்பித்தும் பாடப்படுவதே பரணிப் பிரபந்தம் ஆகும்.

பரணிப் பிரபந்தம் எனப்படும் சிற்றிலக்கியமானது சோழர் காலத்திலேயே தோற்றம் பெற்றதாகும். பரணியின் தோற்றுவாயாகவும் மிக்க சிறப்பு வாய்ந்ததாகவும் அமைந்தது கலிங்கத்துப்பரணியாகும். பரணி என்பது மன்னன் ஒருவனது போரினையும் போர் தொடுத்த களத்தினையும் போரில் நடந்த நிகழ்வினையும் மன்னன் பெற்ற பெருவெற்றியையும் சிறப்பித்துப்பாடும் பிரபந்தம் ஆகும். இதனைப் போர்ப்பாட்டு என்று கூறுவோரும் உள்ளனர். பழந் தமிழகத்தின் வெற்றி பெற்ற மறவர்களாம் மன்னர்களைப் போற்றிப்பாடும் ஓர் இனமாக பரணிபாடுநர் என்கிற ஒருவகை பொருநர்கள் இருந்தனர் என்கிறது பழந்தமிழ் வரலாறு.

பரணியானது வீரத்தினைப் பாடுபொருளாகக் கொண்ட புறப்பொருளிலக்கியமாகும். அத்துடன் பரணி நாயகனாக வீர நாயகன் வெற்றிமறவன் குறிக்கப்பட்டாலும் பரணி இலக்கியம் போரில் தோல்வியைத் தழுவிய மன்னனைச் சார்ந்து தழுவியதாகவே அதன் பெயர் காணப்படுகின்றது. அந்தவகையில் இப்புறப் பொருளிலும் காதல்சுவை மாறாத இப்பாடலைக் காணலாம். செருக்களம் சென்ற தன் காதலனைத் தன் உயிரிலும் மேலான இன்ப மணாளனைத் தேடிச் செல்கிறாள். அம்மங்கை



காணக்கூடாத துன்பியல் நிகழ்வதனை அவள் அங்கே கண்ணுற்றாள். மார்புறத் தழுவி மனையாளை மனதுக்கினியவளை மனதார நேசிக்கும் அவள் காதற் கணவன் அம்பொன்று நெஞ்சில் தைத்து இறந்து கொண்டிருக்கின்றான். மண்ணில் அவனுடல் வீழ்ந்துவிடாது மங்கை நல்லாள் அவனைத் தன் மடி கொண்டு தாங்குகின்றாள். அவன் உயிர் பிரியாவண்ணம் தன் இன்னுயிரை அவனுக்கு முன் இவள் தானம் செய்துவிடுகின்றாள். அதற்கு இங்கே காரணம் கூறப்படுகின்றது யாதெனில் மண்ணாகிய நிலமகளும் ஓர் பெண்ணானதால் அவளது உடலைக் கூட மண்மகள் தீண்டிவிடக் கூடாதே என்றதற்காக மடியில் சுமந்த அம்மங்கை அவன் இன்னுயிர் பிரிந்து விண்ணுலகம் சென்றால் அதனை விண்ணுலகப் பெண்டிரும் சென்று தழுவாதிருக்க அவனை அவ்வுலகம் வரவேற்க அவனை முந்திக் கொண்டு தானே இறந்து அவ்வுலகமும் சென்றுவிடுகிறாள். இங்கே புலவனின் கற்பனையும் காதலின் மேன்மையும் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டு முன்நிற்கின்றன.

அதைத்தான்

**தரைமகள் தன் கொழுநன் தன் உடலம் தன்னை**
**தாங்காமல் தான் உடலால் தாங்கி விண்நாட்டு**
**அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்**
**ஆவி ஒக்க விடுவாளை காண்மின்! காண்மின்!**

புறப்பொருள் பற்றிப் பேசிக்கொண்டாலும் காதலின் ஆழம் குறைவுறாமல் பாடப்பட்ட பாடலே இந்தப் பரணிப் பாடலாகும். இனி இன்னொரு நயத்தில் சந்திப்போம்.

குந்தவி நாச்சியார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வெள்ளீய அச்சுக்காலம் முதல் எண்ணிம யுகம் வரையில் எழுத்தூழியம் ஆற்றியவர்

## ஊடகவியலாளர் கானமயில்நாதனுக்கு அஞ்சலி

முருகபூபதி

இலங்கையில் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் 2013 வரையிலான காலப்பகுதியில் இருபதிற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் தலைமறைவாகி வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் எனவும் அவர்களில் சிலரே நாடு திரும்பியுள்ளனர் எனவும் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு வெளியிட்டுள்ள புதிய அறிக்கையொன்றில் தெரிவித்திருப்பதாக ஒரு பதிவைப் படித்திருக்கின்றேன்.



ஒரு சில வருடங்களுக்கு முன்னர் நான் படித்திருந்த இந்தக்குறிப்பு இச்சந்தர்ப்பத்தில் நினைவுப்பொறியில் தட்டுவதற்கு, கடந்த 22 ஆம் திகதி மறைந்த இலங்கையின் மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் ம.வ.கானமயில்நாதன் அவர்கள் பற்றிய நினைவுகளே காரணம்.

இலங்கையில் நீண்டகாலமாக காகிதத்தையும் பேனையையும் ஏந்தியவாறு ஊடகத்துறைக்கான செய்தி வேட்டையில் ஈடுபட்டு, சமூகத்திற்காக பேசியும் சமூகத்தை பேசவைத்தும் இயங்கிய எந்தவொரு பத்திரிகையாளரும், வெளிநாட்டுக்கு நிர்ப்பந்த வசமாக புலம்பெயர நேரிட்டால், எத்தகைய மனவலியுடன் காலத்தை கடத்தியிருப்பார் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தவர் எங்கள் தமிழ் ஊடகக் குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர் கானமயில்நாதன்.

உள்ளார்ந்த ஊடகத்துறை ஆற்றலும் படைப்புத் திறனும் மிக்க எந்தவொரு எழுத்தாளனும் தாயகம் விட்டு உலகின் எந்த மூலைக்குச்சென்றாலும், தனது ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்திற்கே காத்திருப்பார்.

அது அங்கே கிட்டாது போனால், சொர்க்கமே என்றாலும் அது நம் ஊரைப் போல வருமா? அட எந்நாடு என்றாலும் அது நம் நாட்டுக்கீடாகுமா? என்று சொல்லிக்கொண்டோ, பாடிக்கொண்டோ நாடு திரும்பி விடுவார்கள்.

அவ்வாறு ஐரோப்பியா கண்டத்தில் சொர்க்கமாகத் திகழும் சுவிட்ஸர்லாந்தில் கிடைத்த சுகவாழ்வையே துறந்து நாடு திரும்பி, மீண்டும் தான் உளமாற நேசித்த ஊடகத்துறைக்கு வந்தவர் கானமயில்நாதன்.

பொதுவாகவே எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் தமது அடையாளத்திற்காகத் தொடர்ந்தும் அமைதியாக எழுதிக்கொண்டிருந்தாலும், கலந்துரையாடல், மேடைப்பேச்சு, விவாதம் என்று வந்துவிட்டால் குரலை உயர்த்தியே பேசுவார்கள். ஆனால், அதிர்ந்தே பேசத் தெரியாத ஒரு தமிழ் ஊடகவியலாளர் எம்மத்தியில் வாழ்ந்தார் என்றால், அந்தப்பெருமையும் புகழும் கானமயில்நாதனுக்கு உரியது என்பது எனது அபிப்பிராயம்.

அவர் கொழும்பில் தினபதி – சிந்தாமணி பத்திரிகையில் பணியாற்றிய காலப்பகுதியில் நான் வீரகேசரியில் பணியிலிருந்தேன்.

அவருடன் அந்த குணசேனா நிறுவன ஊடகப் பிரிவில் பணியாற்றிக்கொண்டிருந்த எங்கள் நீர்கொழும்பூர் நண்பர் செல்வரத்தினம் அவர் பற்றி அடிக்கடி என்னிடம் சொல்லியிருக்கிறார்.

பின்னாளில் செல்வரத்தினம் பிரான்ஸுக்கும் நான் ஆஸ்திரேலியாவுக்கும், யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் வெளியான பத்திரிகைகளில் பணியாற்றிய சிலர் ஐரோப்பிய நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தனர்.

அதற்கெல்லாம் அங்கிருந்த அசாதாரண அரசியல் நிலைமைகளும் அச்சுறுத்தல்களும்தான் காரணம்.

கானமயில்நாதனுக்கு தெரிந்த தொழில் ஊடகத்துறை மாத்திரமே. அதனை அவர் நெஞ்சாற நேசித்தார். அவர் பல பத்திரிகைகளில் பணியாற்றியவர். பல்லாயிரக்கணக்கான செய்திகள் அவரால் செம்மைப்படுத்தப்பட்டு வெளிவந்தன.

வெள்ளீய அச்சு எழுத்துக்காலம் முதல் எண்ணிம யுகம் வரையில் அயராமல் எழுத்தூழியம் புரிந்தவர்.

இலங்கையில் 1977 இற்குப்பின்னர் பேரினவாத அரசியல் மேலோங்கிய காலத்திலும், 1980 இற்குப் பின்பு போர் மேகங்கள் சூழ்ந்த வேளையிலும், தென்னிலங்கையிலும் வட இலங்கையிலும் தனக்குத் தெரிந்த தொழிலையே அர்ப்பணிப்புடன் மேற்கொண்டவர்.

1985 இற்குப்பின்னர் அவர் சிறிது காலம் வீரகேசரியின் யாழ். கிளை அலுவலகத்திலிருந்து பணியாற்றியவேளையில் அவருடன் செய்திகள் தொடர்பாக பேசும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன.

யாழ்ப்பாணத்தில் அவர் உதயன் பத்திரிகையில் பணிதொடர்ந்தபோது நான் 1987 இல் ஆஸ்திரேலியாவுக்கு வந்துவிட்டேன்.

அவர் அங்கே அந்த போர் நெருக்கடி காலத்தில் எவ்வாறு இயங்கினார் என்பதை மற்றவர்கள் சொல்லித்தான் அறியமுடிந்தது.

சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரத்தொடங்கிய காலைக்கதிர் நாளிதழின் முன்னோட்ட வெளியீடாக வந்த விடியலின் வீச்சு சிறப்பிதழில் கானமயில்நாதன் சிறப்பானதோர் கட்டுரையை இலக்கிய நயமுடன் உதயசூரியனின் பொன்னிறக்கதிர்களுக்கு ஒப்பிட்டு எழுதியிருந்தார்.

அந்தச் சிறப்பிதழில் நானும் அதன் ஆசிரியர் நண்பர் வித்தியாதரன் கேட்டவாறு ‘உதயதாரகை முதல் காலைக்கதிர் வரையில்’ என்ற கட்டுரையை எழுதியிருந்தேன்.

அதுவரையில் கானமயில்நாதன் அவர்கள்தான் காலைக்கதிரின் ஸ்தாபக ஆசிரியர் என்பது எனக்குத் தெரியாது. சில வருடங்களுக்கு முன்னர், யாழ். காலைக்கதிர் அலுவலகம் சென்று அவரை நேரில் சந்தித்து எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டேன். அப்போதுதான் அவரை நேருக்கு நேர் முதல் முதலில் சந்திக்கின்றேன் எனச்சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்.

இந்தத்தகவல் எனக்கே அதிசயமானது. ஆனால், அதுதான் உண்மை !

கொழும்பில் அவர் தினபதி – சிந்தாமணியில் பணியாற்றிய காலத்திலும், அங்கு நடந்த பொது நிகழ்வுகளில் அவரைக் காணமுடியாது. எந்தவொரு மேடைகளிலும் அவர் பேசினார் எனவும் அறியக் கிடைக்கவில்லை. நாம் கொழும்பில் தமிழ்ச்சங்கம் உட்பட பல இடங்களில் கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறோம். ஆனால், கானமயில்நாதன் என்ற பத்திரிகையாளர் அதில் கலந்துகொண்டார், உரையாற்றினார் என்ற செய்தியே வெளிவந்திருக்காது.

அந்தளவுக்கு தன்னடக்கத்தின் உறைவிடமாக திகழ்ந்தவர் கானமயில்நாதன்.

நெருக்கடி மிக்க காலத்தில் அவருக்கு சுவிட்ஸர்லாந்தில் தஞ்சமடைவதற்கான வாய்ப்புக்கிடைத்து செல்லும்போதும், தனக்காக அல்லாமல், தனது வளர்ப்பு பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கருதிச் சென்று அவர்களுக்கான வளமான எதிர்காலத்தை அமைத்துக்கொடுத்துவிட்டே தாயகம் திரும்பி, மீண்டும் தான் உளமாற நேசித்த தொழிலுக்கு வந்துவிட்டார் என்ற செய்தியும் எனக்கு காலம் கடந்துதான் தெரியவந்தது.

வழிகாட்டி மரங்கள் நகருவதில்லை என்பதையும் அவரது வாழ்க்கை முன்னுதாரணமாக்கியிருக்கிறது.

அந்தவகையில் ஓர் அதிசயப்பிறவியாகவும் அவர் திகழ்ந்திருக்கிறார்.

பாரதி நினைவு நூற்றாண்டில் மறைந்திருக்கும் கானமயில்நாதனும், பாரதியைப்போன்று அச்சுறுத் தலையடுத்து இடம்பெயர்ந்து, மீண்டும் பாரதியைப் போன்றே திரும்பிவந்து, அமைதியாக பணிதொடர்ந்து வயது மூப்பின் காரணமாக எம்மை விட்டு விடைபெற்றுள்ளார்.



தன்னை எதிலும் முன்னிலைப்படுத்தாமல், சமூகத்திற்கான செய்தியாளனாகவே வாழ்ந்திருக்கும் கானமயில்நாதன் அவர்கள் பிரான்ஸில் எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் தன்னார்வ அமைப்பினாலும், வட இலங்கையில் யாழ். ஊடக அமையத்தினாலும் பாராட்டப்பட்டு விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளமை மனதிற்கு நிறைவு தருகிறது.

அவர் இந்த விருதுகளை யெல்லாம் எதிர்பார்த்து எழுத்தூழியம் செய்ய வந்தவரில்லை என்பதை அவரை நன்கு அறிந்த அனைவரும் தெரிந்துவைத்திருப்பார்கள்.

அமைதியின் உறைவிடம் கானமயில்நாதன் அவர்களுக்கு கடல் கடந்த தேசத்திலிருந்து இந்த அஞ்சலிக் குறிப்புகளை பதிவுசெய்கின்றேன்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 205

**527. நடக்கும் இனப்படுகொலை விசாரணைகளையும் புலம்பெயர் எடுக்கும் முயற்சிகளையும் பலவீனப்படுத்துகின்றனர் என்ற ஆதங்கங்கள் பலருக்கு இருக்கிறதே?**

சுமந்திரன் தனிமனிதனல்லர். அவர் தமிழ் மக்களின் பிரதிநிதியாதலால் தலைவராகப் பலரையும் இணைத்தும் அனைத்தும் பயணிக்க வேண்டியது கட்டாயமாகிறது. அந்த இணைப்பும் அணைப்பும் இல்லாது அல்லது அவை குறைந்து ஊசலாடும்போது இப்படியான



ஆதங்கங்கள் எழுவது இயற்கை. அவை தொடக்கத்திலேயே களையப்படவேண்டியவையாகவும் ஆகின்றன. தொடர்ந்து அப்படி நடந்து, தலைமைகளைத் தொலைத்த தலைவர்கள் ஏராளம்.

புலம்பெயர் பரப்பில் காலம் காலமாக தமிழ் உரிமைக்கென்றும், பின் அவர்களின் விடுதலைக்கு என்றும் உழைத்த எத்தனையோ அமைப்புக்கள், அவர்களுடன் இணைந்திருந்த பல புத்திஜீவிகள் இருக்க, அவர்கள் எல்லோரையும் புறம்தள்ளி உலகத் தமிழர் பேரவை (Global Tamil Forum) என்ற அமைப்பை பேச்சுவார்த்தைகளில் இணைத்தமை எவ்வித நம்பிக்கையையும் புலம்பெயர் சமூகத்திற்கு ஏற்படுத்தவில்லை. அவை விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்குள் அடங்கியவை அல்ல. அவர்களுக்கே, இது புதினமாகவும், வியப்பாகவும், பிரபலத்தை வேண்டும் ஒரு பலூனை ஊதிப் பெருப்பித்து சதிராட்டம் காட்டுவது போன்ற பிரமையை வளர்க்கிறது. இவர்களைத்தான் சுமந்திரனோ கூட்டமைப்போ அவர்களின் தொடர்ந்த பேச்சுவார்த்தைகளுக்கோ போராட்டங்களுக்கோ பங்குதாரிகளாக ஏற்று நடத்த முன்னெடுப்பு செய்வது, புலம்பெயர் அமைப்புக்களின் மனோ நிலையில் பாரிய பிரிவுகளை எல்லா மட்டத்திலும் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை உருவாக்கி, அவை ஒட்டுமொத்த போராட்டத்தையும் அழித்து, இன்னுமொரு நல்ல இணைக்க அரசியலை பிறப்பிக்கலாம். புலம்பெயர் அமைப்புக்களினதும் நாட்டில் உள்ள மக்களும் அவர்களின் அரசியல் சிவில் அமைப்பு பிரதிநிதிகளும் பொது நிலைப்பாட்டில் இயங்க வேண்டிய தேவைப்பாட்டை உணர்த்துகின்றன.

ஏதோ ஒரு வகையிலான உள்நாட்டுத் தீர்வு அடிப்படையில் அதற்கான பேரங்கள் ராஜபக்ஷக்களோடு நடத்தப்பட்டு, அவர்கள் எதிர்நோக்கக் கூடிய சர்வதேசக் குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு இவை முன்னெடுக்கப்படுகின்றன என்ற சந்தேகங்கள் ஆணித்தரமாக அபிப்பிராயங்களில் வைக்கப்படுகின்றன. ஆனால் தீர்வுப் பொதியை சுமந்திரனோ,கூட்டமைப்போ தனித்தவையாக தமிழ் மக்களுக்காக ஏற்கக் கூடிய சாத்தியம் இல்லாததால் அதனை ஒட்டிய இப்படியான தன்னிச்சையான கருத்தாடல்கள் ஒவ்வொன்றுக்கு முரணாகவே இருக்கின்றன.

**528. ஓர் இடைத்தீர்வோ நிரந்தரத் தீர்வோ இனப்படுகொலை விசாரணைகளைப் பாதிக்காதா?**

தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்ட நிரந்தரத் தீர்வினால் அவர்களது போராட்டங்களும் ஓரளவு பலவீனமாகியோ ஓய்ந்தோ போகலாம். எனினும் அரசியல் சூழலைப் பொறுத்து சர்வதேச சட்டங்களுக்கு எதிரான குற்றங்களின் விசாரணைகள் மந்த கதியிலாவது தொடரலாம். இடைத்தீர்விலிருந்து நிரந்தர தீர்வு நோக்கிப் போகும்போது பரிகார நீதிக்காக சர்வதேச குற்றங்களுக்கு எதிரான விசாரணை தொடரும். தமிழ் மக்கள் பாரிய அட்டூழியங்களுக்கு ஆள்படுத்தப்பட்டுள்ளார்கள், கைவிடப்பட்ட மக்களாக அந்தரிக்கிறார்கள், சர்வதேசத்திடம் நீதி கோரி குமுறுகிறார்கள், ஆதரவு அற்று நிற்கிறார்கள். அவர்கள் அனுபவித்த அட்டூழியங்கள் அவ்வளவும் நடந்தவை. நிஜமானவை. கற்பனைகள் அல்ல. அவற்றுக்கு நீதி வேண்டும். அதனை தருவதற்கு சர்வதேச சட்டங்களும் அமைப்புக்களும் உண்டு. அவையும் யாதார்த்தமானவை. ஆனால் அவர்களது கோரிக்கைகளும் குமுறல்களும் பரிதவிப்புக்களும் விசாரணைகளாக்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் பரிகாரத் தீர்வொன்றில் அவர்கள் அவர்களது சுயநிர்ணய உரிமையில் சுயாட்சியில் வாழ்வார்கள் என நடத்தப்படும் அரசியலும் அதுவரை பொறுமை காக்க வேண்டும் என்று





வயிற்றைக் கட்டி வாழக் கேட்பதும் பரிதாபத்துக்குரியது. இந்தப் பரிகார நீதி கைகூடக் கூடிய சந்தர்ப்பங்கள், அவை எடுக்கக் கூடிய காலங்கள், அதில் அகப்படக்கூடிய சர்வதேச அரசியல் என்பவற்றை வெளிப்படையாகத் தமிழ் மக்களிடம் பகிர்ந்து கொள்ளாமல், பொதி சுமக்கும் கழுதைக்கு முன் கரட்டை கட்டி நடத்துவோர் மாதிரி அவர்களை நடத்திக்கொண்டு போகிறார்கள். கழுதைகள் மாதிரி கரட் வாயில் கிடைப்பது அதிக தூரத்தில் இல்லை என்பது போல் விடுதலைத் தீர்வு, பழிவாங்கல் என்ற எல்லாம் சேர்ந்த ஓர்மத்தில், அன்றில் ஆதங்கங்களில், இவர்களும் நடக்கிறார்கள். ஆயினும் நடந்து நடந்து களைத்து, அவர்கள் அனுபவித்த வலிகளின் வேதனையில் நீதி வேண்டும் என்று நின்றவர்



கள், இப்படியான நிலையற்ற, நோக்கமற்ற அரசியலால் துவண்டு ஏதோ ஓர் தீர்வு யார் மூலமாவது பெற்று, தாங்கள் மேலும் மூழ்கி விடாமல் மூச்சாவது விட்டால் போதும் என்று வானத்தைப் பார்க்கின்றார்கள்.

இவர்களின் ஆதங்கங்களை உணர்ந்து, நாட்டில் தமிழ் மக்களை அனுசரித்து, முன்னெடுப்புக்களை எடுப்பதற்கான புரிந்துணர்வுகளை புலம்பெயர் சமூகம் ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும். தாங்கள் செய்யும் வேலைத்திட்டங்களுக்கு நாட்டிலுள்ளோர் ஈடு கொடுக்க வேண்டும் என்ற எண்ணப்பாடுகள் பிரயோசனமற்ற விளைவுகளையே கொண்டு வரும்.

ஒவ்வொன்றுக்கான முரணான போக்குகள் சர்வதேச விசாரணைகளைப் பாதிக்கும். அதற்கு முன் இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணை நடக்கிறதா என்பதை தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

**529. தங்களுக்கு நடந்த அட்டூழியங்கள் இனப்படுகொலையாகத்தான் காணப்பட வேண்டும் என்பது தானே தமிழ் மக்களது கோரிக்கை?**

அது அவர்களது கோரிக்கை. அதில் பேதம் பார்க்கத் தேவையுமில்லை. பரிகார நீதி பெற தமிழ் மக்கள் அருகதையுள்ளவர்கள். நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின், சர்வதேசத்தின் பிரசித்தி வாய்ந்த இனப்படுகொலை ஆய்வுகளில் நிபுணத்துவம் பெற்ற புத்திஜீவிகள் தமிழ் மக்களுக்கு நடத்தப்பட்டது இனப்படுகொலைதான் என அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அதை நடத்திய பங்காளிகளையும் சுட்டிக் காட்டினார் கள். அதற்கான ஆதாரங்களும் வெளிப்படுத்தப்பட்டன. ஆயின் அது அரசியல்மயப்படுத்தப் படாத எந்த நாட்டு அரசாங்கங்களாலும் கட்டுப்படுத்தப்படாத, அல்லது அவர்களது செல்வாக்குக்குள் அகப்படாத, சுதந்திரமான தனியார் அமைப்பு. ஆகவே, பாரபட்சமின்றி தனது அபிப்பிராயங்களை தீர்ப்பாயம் தெரிவித்தது.

ஐ.நாவோ அல்லது அதன் கட்டமைப்பான சர்வதேச மனித உரிமை மன்றோ அப்படியான சுதந்திரமானவை அல்ல. அவை சர்வதேச நாடுகளால் அவற்றின் அரசியல் நெளிவு சுழிவுகளாலும், செல்வாக்குகளாலும் பாதிக்கப்பட்ட வகையிலேயே இயங்குகின்றன அல்லது அமைப்பு விதிகளினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆகவே இனப்படுகொலை, இனவழிப்பு அல்லது இனச்சுத்திகரிப்பு என ஐ.நாவோ அல்லது அதனது கட்டமைப்புக்களோ ஏற்றுக்கொள்வது சர்வதேச அரசியலின் சூழ்நிலைகளில் தங்கியிருக்கிறது.

தீர்ப்பாயமும் எத்தனையோ சர்வதேச புகழ்வாய்ந்த பிரமுகர்களும் மனித உரிமைகளும் இந்த அட்டூழியங்கள் இனப்படுகொலை எனக் கருத்துக்கள் தெரிவித்திருந்தாலும் அவை ஐ.நாவை கட்டுப்படுத்தா. அது அதனுடைய அரசியல் நிகழ்வுகளிலேயே தீர்மானங்கள் எடுக்கும். அந்த முடிவுகள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு மாறாகவும் அமையலாம்.

(வளரும்......)

# நட்டத்தில் இயங்குகின்ற அரச நிறுவனங்கள் இலாபமீட்டுவனவாக 2022 இல் மாறவேண்டும்

## பிரதமர் மஹிந்தவின் எதிர்காலத் திட்டம்



நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவதன் மூலம் அரச நிறுவனங்கள் 2022 ஆம் ஆண்டில் சிறந்த முன்னேற்றம் அடைய வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் வைத்து கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் இரண்டாவது காலாண்டுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற ரீதியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுவரை நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அடுத்த ஆண்டில் இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவது தொடர்பில் அனைத்து அதிகாரிகளும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருள்கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த இதன்போது நோக்கத்தை தெளிவுபடுத்தியதுடன், அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா இதுவரையான முன்னேற்றத்தின் சுருக்கத்தை முன்வைத்தார்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபை, வரையறுக்கப்பட்ட கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம், கட்டடப் பொருள்கள் திணைக்களம், அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை, அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம், தேசிய உபகரணங்கள் மற்றும் இயந்திர அமைப்பு மற்றும் ஓன்விவ் அபிவிருத்தி தனியார் நிறுவனங்களின் முன்னேற்றம் தொடர்பில் அந்தந்த நிறுவனத் தலைவர்கள் பிரதமருக்கு விளக்கினார்.

பாதி கட்டி முடிக்கப்பட்ட 72 ஆயிரம் வீடுகளில் மேலும் கட்டி முடிக்கப்பட வேண்டிய 40 ஆயிரத்து 723 வீடுகளுக்காக ஆண்டுதோறும் 50 கோடி ரூபா ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்ளல், மாதுலுவாவே சோபித தேரர் கிராமத்தில் எஞ்சிய 31 வீடுகள் மற்றும் அத்தியாவசிய பணிகளை நிறைவு செய்வதற்கு 10 கோடியே 12 லட்சம் ரூபா ஒதுக்கீடு பெறல் உள்ளிட்ட அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் பெற்றுக்கொண்ட கடன்களுக்கு சம்பந்தப்பட்ட வங்கிகளிடம் இருந்து நிவாரணம் பெறுவது உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சவாலான காலங்களில் பணிகளை இடைநிறுத்த இடமளிக்கக் கூடாது எனத் தெரிவித்த பிரதமர், பேச்சு மூலம் தேவையான முடிவுகளை துரிதப்படுத்தி உரிய பணிகளை சட்டப்படி முறையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை முன்னெடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

நிறுவனங்கள் இணைந்து முன்னெடுக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அனைத்து நிறு வனங்களின் ஆதரவைப் வழங்குவது அவசியமாகும்.

சந்தையில் ரைல்ஸ் தட்டுப்பாடு ஏற்பட்ட போது அரச நிறுவனங்கள் செயற்பட்ட விதத்திலேயே சீமெந்து மற்றும் கம்பிகளை தட்டுப்பாடின்றி பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் கவனம் செலுத்துங்கள்.

மேலும் கட்டுமானத்துக்காக இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள்கள் தரமானதாக இருக்க வேண்டும். சரியான தரமான மூலப்பொருள்களை இறக்குமதி செய்ய இறக்குமதியாளர்களுக்கு வழிகாட்டுவதன் முக்கியத்துவத்தையும் பிரதமர் வலியுறுத்தினார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கம் மேற்கொண்ட பொறுப்பற்ற நடவடிக்கையால் நட்டமடையும் நிலைக்கு தள்ளப்பட்ட அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம் தற்போது இலாபம் ஈட்டும் நிலைக்கு வந்துள்ளமையும் இதன்போது தெரியப்படுத்தப்பட்டது.

அது மாத்திரமன்றி நல்லாட்சி அரசாங்கத்தின் பொறுப்பற்ற பொருள் விநியோகம் காரணமாக நட்டத்தில் இயங்கிய கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனம் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான பிரதமர், இராஜாங்க அமைச்சர் மற்றும் அதிகாரிகளின் அர்ப்பணிப்புடன் இன்று நட்டமடைந்த நிறுவனங்கள் இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாறியிருப்பதும் வெளிப்படுத்தப்பட்டது.

கடந்த அரசாங்கத்தால் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டமையால் திறைசேரியின் ஊடாக சம்பளம் வழங்கப்பட்டு வந்த பல நிறுவனங்கள், தற்போது திறைசேரிக்கு சுமையாக அன்றி இலாபம் ஈட்டி வருகின்றன என நிறுவனத் தலைவர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

# உங்கள் நினைவுகளை சுமந்து செல்கின்றோம்!

## மாவீரர் தின செய்தியில் சசிகலா ரவிராஜ் தெரிவிப்பு



மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சென்று அவர்களை அஞ்சலிக்கும் வாய்ப்புக்கள் எமக்கு மறுக்கப்பட்டிருப் பினும் எமது மனங்களிலே தீபமேற்றி அவர்களை நாம் நினைவுகூருகிறோம் என சசிகலா ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

வாழ்ந்து சுகபோகங்களை அனுபவிக்க வேண்டிய இளவயதில், மண்ணையும் மக்களையும், நேசித்து, நாம் வாழ, தம் உயிர் ஈய்ந்த மாவீரச்செல்வங்கள் அவர்கள். அரசியல் வழியிலும் அஹிம்சை வழியிலும் போராட்டங்களை முன்னெடுத்த அரசியல் தலைவர்களின் முயற்சி பலனளிக்காததால் ஏமாற்றமடைந்த அவர்கள் தாம் விரும்பாத ஒரு போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அது அவர்கள் மீது திணிக்கப்பட்ட ஒரு யுத்தம்.

எமது இனத்தின் இருப்பை உறுதி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டதேயன்றி, அவர்கள் ஆயுதத்தின் மீது ஆசை கொண்ட ஆயுததாரிகள் அல்லர். மாவீரர்களே, உங்கள் நினைவுகளை சுமந்து செல்கிறோம்.

எங்கள் ஒவ்வொருவரின் இதயத்திலும் ஆன்மாவிலும், உங்களை நினைந்து பூசிக்கிறோம் நினைவுகளைத் தடைசெய்யும் வல்லமை இவ்வுலகில் யாருக்கும் இல்லையல்லவா? மரண தேவனுக்கு அஞ்சி நடுங்குவதும் மறைந்தோடுவதுமே மாந்தரின் வழமை, ஆனால் மரணத்தை துச்சமாக மதித்துக் களமாடிய உங்கள் நினைவுகளும் தியாகங்களும் எங்களைப் பதைபதைக்கவும் திகைக்கவும் வைக்கின்றன!

மாவீரன் அலெக்ஸ்சாண்டர், மாவீரன் நெப்போலியன் என்று சரித்திரம் குறிப்பிடும் வரிசையில் உங்களையும் வைத்துவிட எம் மனம் ஒப்புதல் வழங்க மறுக்கிறது. உங்கள் களம், உங்கள் உளம் அனைத்தும் மாறுபட்டவை. மாவீரர்கள் என்ற சொல் அவர்களையும் குறிப்பிடப் பயன்படுத்தப்படுவதால் அச்சொல்லிலும் மேலான சொல் ஒன்றைத் தேடுகிறோம்.

சுயநலம் தவிர்த்து பயமின்றிக் களம் புகுந்து போராடி வீர மரணமெய்திய எம் சகோதரர்களே புதல்வர்களே உங்களைப் போற்றி அஞ்சலிக்கின்றோம். – என்றும் தெரிவித்துள்ளார்.

# மங்களவின் திட்டத்தை கையிலெடுத்த கம்மன்பில



எரிபொருள் விலை பிரச்சினைக்குத் தீர்வாக விலை சூத்திரத்தை அமுல்படுத்துவதே தற்போதைய சந்தர்ப்பத்தில் நாட்டுக்கு அனுகூலமானதென வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலக சந்தையில் ஒருபோதும் இல்லாதவாறு எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. ஜனவரி மாதத்தின் போது பெற்றோல் பீப்பாய் ஒன்றின் விலை 56 முதல் 58 அமெரிக்க டொலராக காணப்பட்ட போதிலும், தற்போது 96 முதல் 98 அமெரிக்க டொலராக காணப்படுகிறது.

2 வாரத்திற்கு ஒரு முறை லீற்றருக்கு ஏற்படும் நட்டம் தொடர்பில் அமைச்சுக்கு அறியப்படுத்துவோம். அதற்காக விலையை அதிகரிப்பது மற்றும் வரியைக் குறைப்பது தொடர்பில் அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

இந்நிலையில் எரிபொருள் விலை சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதே தற்போதைக்கு உசிதமானதாகப் படுகிறது. மறைந்த அமைச்சர் மங்கள சமரவீரவே இந்த விலைசூத்திரத்தை முன்வைத்தார்.

அவர் இதனை முன்வைக்கும்போது எதிர்ப்பை வெளியிட்ட நாங்களே மீண்டும் அதனை நடைமுறைப்படுத்துவதா? என்ற கேள்வி எழும். ஆனால் எதுவுமே இல்லாதிருப்பதைக் காட்டிலும் இவ்வாறான ஒன்றாவது இருப்பது சிறப்பானது என்று அமைச்சர் உதய கம்மன்பில கூறினார்.

அதேநேரம், எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரையில் நாட்டுக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது. எனவே பொதுமக்கள் அது குறித்த அச்சம் கொள்ளத் தேவையில்லை என வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மேலும் தெரிவித்துள்ளார்.

# சுகாதாரப் பிரிவு சிவப்பு எச்சரிக்கை கட்டுப்பாடுகளை கடுமையாக்க முடிவு

கொழும்பு, நவ. 28

பண்டிகை காலப்பகுதியில் கொவிட் வைரஸ் தொற்று பரவும் வகையில் மக்கள் செயற்பட்டால் கட்டுப்பாடுகளை கடுமையாக்க நேரிடும் என சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய காலப்பகுதியில் உள்ள சுகாதார வழிக்காட்டல்கள் இதற்கு முன்னர் காணப்பட்டதை விடவும் தளர்த்தப்பட்டுள்ளது.

பொதுவாக பண்டிகை காலங்களில், சிறு குழந்தை முதல் அனைவருக்கும் சமூக ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் பண்டிகை காலத்துடன் தொடர்புடைய தேவைகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் சுகாதார வழி காட்டல்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட்டாலும் சிலர் சுகாதார வழி காட்டல்களைப் பின்பற்றாமல் இருப்பது ஆபத்தான விடயமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதாரப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## பரீட்சை ஆணையாளராக தர்மசேன நியமனம்

இலங்கை பரீட்சை திணைக்களத்தின் புதிய ஆணையாளராக எல்.எம்.டி. தர்மசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி தமது கடமைகளை அவர் பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியாவுக்கு விமான சேவை அதிகரிக்க அரசு தீர்மானம்

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள இந்தியாவுக்கான விமான சேவைகளை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் அசோக் பத்திரகே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு முன்னர் இருந்ததைப் போலவே ஸ்ரீலங்கன் விமான சேவையை மீண்டும் நிறுவ உறுதிபூண்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய ஸ்ரீஊலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் இந்திய நடவடிக்கைகள் தொடர்பாக சுற்றுலாப் பயணிகளுக்கு அறிவுறுத்த இதுவே சிறந்த சந்தர்ப்பமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், உலகளாவிய பயணக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதால், சுற்றுலாப்பயணிகள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க இது ஒரு சிறந்த வாய்ப்பு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மிகப்பெரிய சந்தையாக இந்தியா திகழ்வதாகவும், இந்தியாவுக்கான முழுமையான செயற்பாடுகளை மீள ஸ்தாபிக்க ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சேதனப் பசளை தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

சேதனப் பசளை தொடர்பாக விவசாயிகளுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடு ஒன்று நேற்று (வெள்ளிக்கிழமை) மட்டக்களப்பு மவாட்டம் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் பாலையடி வட்டைக் கிராமத்தில் நடைபெற்றது.

அப்பகுதி விவசாய விரிவாக்கல் போதனாசிரியர் ரி.கோபி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உதவி விவசாயப் பணிப்பாளர் த.மேகராசா மற்றும் ஏனைய விவசாய உத்தியோகஸ்தர்கள், அரச அதிகாரிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது விவசாயிகளுக்கு சேதனப் பசளை தொடர்பான விளக்கங்களும், பயிற்சிகளும் வழங்கப்பட்டமையுடன், இயந்திரத்தின் மூலம் இயற்கையாகவே கிடைக்கும் இலைகுளைகளைத் துண்டு துண்டுகளாக வெட்டும் செயன்முறையும், விவசாயிகளுக்குச் செய்து காண்பிக்கப்பட்டன.

## ரி-56 ரக துப்பாக்கியை வைத்திருந்தவர் கைது!

திருகோணமலை - தோப்பூர் பகுதியில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரி-56 ரக துப்பாக்கி ஒன்றை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தளாய் - சூரியபுர விசேட பொலிஸ் அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்தே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர் பாலத்தோப்பூர் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பான அணுகுதல்; பயிற்சிநெறி மட்டக்களப்பில்




பாதுகாப்பான அணுகுதல் தொடர்பான பயிற்சி நெறி ஒன்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தொண்டர்களுக்கு கடந்த வியாழக்கிழமை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையில் நடைபெற்றது. இதன்போது மட்டக்களப்புக் கிளையைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 25 தொண்டர்களுக்கு செஞ்சிலுவை அமைப்பைப் பற்றிய கொள்கை விளக்கங்கள் மற்றும் தொண்டர் சேவை செய்யும்போது எவ்வாறு நடந்து கொள்தல், தொண்டர் சேவையின்போது அணிய வேண்டிய பாதுகாப்பான அங்கிகள், உள்ளிட்ட பல பயிற்சிகளும், விளக்கங்களும் வழங்கப்பட்டன.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் தலைவர் த.வசந்தராஜா, பொருளாளர் வ.சக்திவேல், நிறைவேற்று உத்தியோகஸ்தர் பி.வேணுா மற்றும் ருத்திராஜ் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டு தொண்டர்களுக்கு விளக்கங்களை வழங்கினர்.

## மட்டு - கொழும்பு இரவு கடுகதி ரயில் சேவை திருத்தப்பணி காரணமாக இடை நிறுத்தம்!

மட்டு-கொழும்பு இரவு கடுகதி ரயில் சேவை திருத்தப்பணி காரணமாக பொலன்னறுவையிலிருந்து இடம்பெறும்.

தினமும் இரவு 8.15 மணிக்கு மட்டக்களப்பு ரயில் நிலைய நிலையத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படும் இரவு கடுகதிபாடுமீன்ரயில்சேவை சனிக்கிழமை 27 ஆம் திகதி இரவு பொலன்னறுவையிலிருந்து இரவு 10.20மணிக்கு புறப்படுமென மட்டக்களப்பு ரயில் நிலைய அதிபர் ஏ.பேரின்பராசா தெரிவித்தார்.

புணாணைக்கும் வெலிகந்தைக்குமிடையிலான பிரதேசத்தில் பாலம் திருத்தப்பணிகள் காரணமாகவே இந்த ரயில் சேவை பொலன்னறுவையிலிருந்து இடம் பெறுமெனவும் அவர் தெரிவித்தார்.

## பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் கஞ்சாவுடன் கைது



பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் பொலிஸார் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


மட்டக்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் பெருந்தொகையான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சுற்றிவளைப்பின் போது ஓட்டோவில் பயணித்துக்கொண்டிருந்த மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவரிடம் இருந்து 6 கிலோ 542 கிராம் கேரள கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொலிஸார் குறித்த இளைஞரிடம் மேற்கொண்ட விசாரணைகளுக்கமைய, பேலியகொடை அதிவேக நெடுஞ்சாலையில் காவலரணில் கடமையாற்றிவந்த பொலிஸ் அதிகாரி ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்து 4 கிலோ 191 கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

## நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பொலிஸ்மா அதிபருக்கு அழைப்பு!



நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பொலிஸ்மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவிற்கு கொழும்பு மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவுக்கு எதிரான வழக்கில் சாட்சியமளிப்பதற்காக அவர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளார்.

இதற்கமைய, எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



# நிக்கவெரட்டியவில் வீடொன்றில் வெடிப்பு எரிவாயுக் கசிவு காரணம் என சந்தேகம்

நிக்கவெரட்டிய, கந்தேகெதர பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

எரிவாயு கசிவு காரணமாக இந்த வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த வீடு கடுமையாக சேதமடைந்துள்ளது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வெடிப்புச் சம்பவத்தின் போது வீட்டில் எவரும் இருக்கவில்லை எனவும், இதன்காரணமாக எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவு அல்லது வேறு காரணங்களால் இந்த வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்ததா என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, இந்த மாதத்தில் பதிவாகியுள்ள 5 ஆவது வெடிப்புச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# நேற்று மாவீரர் தின உணர்வெழுச்சி அஞ்சலிகள்


தீருவிலில்












சாட்டி துயிலும் இல்லம் முன்பாக






முல்லைத்தீவு கடற்கரையில்


முல்லைத்தீவு இரட்டை வாய்க்காலில்


மன்னார் நகரில்


வன்னி விளாங்குளத்தில்




மன்னார் தமிழரசுப் பணிமனையில்



# நேற்று மாவீரர் தின உணர்வெழுச்சி அஞ்சலிகள்


மருத்துவப் போராளி பாலசுந்தரம் அஜந்தன் இல்லத்தில் அவர் தாயாருடன் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன்.


வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தமது இல்லத்தின் முன்.


வலி வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன் இல்லத்துக்கு முன்பாக.


அம்பாறையில் கலையரசன் எம்.பி.


கொழும்பு இல்லத்தில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் எம்.பி.


சாட்டியில் சட்டத்தரணி சுகாஷ்.


சிறிதரன் எம்.பியின் கொழும்பு இல்லத்தில்.


தமது இல்லத்தில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம்.


யாழ். பல்கலைக்கழகத்தில்.